RESTAURANT VIGNESHWAR
முற்றிலும் வேறுபட்ட சுவையான பல புதிய உணவு வகைகள்
விக்னேஷ்வர் உணவகம்
உங்கள் கொண்டாட்டங்கள் அனைத்திற்குமான உணவுகளை வேண்டுகை செய்து பெற்றுக்கொள்ளலாம்
Tel: 0142052179 / 0620440537
14, Rue Perdonnet , 75010 Paris
Métro: La Chapelle/Gare du Nord

1.50 Euro பிரான்ஸ்

# ஈழமுரசு

ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 21 - 27 Avril 2004 10

சம்யுக்தா
Credits Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits Finances Investissements
6, Rue Cail 75010 Paris
Tel/Fax: 01 40 34 03 24
(M°: La Chapelle/Gare du Nord)

# உறுதியற்ற நிலையில் கூடவுள்ள நாடாளுமன்றம்

- சபாநாயகர் பதவிக்கு கடும் போட்டி
- ஜாதிக ஹெல உறுமயவுடன் ரணில் அவசர சந்திப்பு

(20.04.04)

நாளை மறுதினம் அதாவது 22ம் திகதி சிறீலங்காவின் 13வது நாடாளுமன்றம கூடும்போது, நாடாளுமன்றத்தில் உறுதியற்ற ஒரு நிலைமை ஏற்படப்போவதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். நாடாளுமன்றச் சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியினரும் தனித்தனியே ஒவ்வொரு வேட்பாளரை நிறுத்தவுள்ளனர். இவர்களுள் ஐக்கிய தேசிய முன்னணி சார்பாக சபாநாயகர் வேட்பாளராக நிறுத்தப்படவுள்ள லொக்கு பண்டாரவுக்கு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அவருக்கு ஆதரவாக 110 வாக்குகள் அளிக்கப்படும் என்று கணிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் அடுத்த பெரிய சக்தியான ஜாதிக ஹெல உறுமய சபாநாயகர் தெரிவு வாக்களிப்பில் கலந்து கொள்ளாது என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் சபாநாயகராகப் போட்டியிடுபவருக்கு 106 வாக்குகளே கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், ஆளும் கட்சி ஒன்றாக இருக்க, எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஒருவர் நாடாளுமன்றச் சபாநாயகராக இருக்கும்நிலை தோன்றும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இது ஆளும் தரப்பைக் கடுமையான நெருக்கடிக்குள்ளாக்குவதுடன், நாடாளுமன்றச் செயற்பாடுகளையும் பலவீனமடையச் செய்யும் என்றும் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். இதேபோன்ற தொருநிலை, 1960ம் ஆண்டு டட்லி சேனாநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் நிலவியதையும் சுட்டிக்காட்டியுள்ள இவர்கள், அப்போது எதிர்க்கட்சியாகவிருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரே நாடாளுமன்ற சபாநாயகராக இருந்ததையும் குறிப்பிட்டுள்ளனர். இதன் பின்னர், சில மாதங்களுக்குள் நாடாளுமன்றம் கலைக் கப்பட்டு மீண்டும் தேர்தல் நடாத்தப்பட்டபோது, சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமோக வெற்றியீட்டி தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் ஆட்சிபீடத் திலிருந்தது என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுஇவ்வாறிருக்க, ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களையும் தலைமைத்துவத்தையும் உயர்பீடத்தையும் சந்தித்த ரணில் விக்கிரமசிங்க, அவசரமாக சந்தித்து பேசியுள்ளார். ஏப்ரல் 22ல் கூடவுள்ள நாடாளுமன்றத்தின் முதல் அமர்வின் போது எடுக்க வேண்டிய நிலைப்பாடுகள் குறித்து இதன்போது ஆராய்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக, நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில் தெரிவுசெய்யப்படவுள்ள சபாநாயகர் பதவிக்கு, எதிர்க்கட்சியின் அங்கத்தவர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்பதில் ஹெல உறுமயவின் ஆதரவைப் பெறுவதே இச்சந்திப்பின் பிரதான நோக்கமாக இருந்ததாக நம்பகமாகத் தெரியவருகிறது.

ஏப்ரல் 22ல் கூடவுள்ள நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில் தனது பெரும்பான்மைப் பலத்தை நிருபிக்கவும், தனது கட்சியின் சபாநாயகரைத் தெரிவதற்கும் ஹெல உறுமயவின் ஆதரவைப் பெறுவதற்காகவே இரு கட்சிகளும் பல்வேறு உறுதிமொழிகளையும் வழங்கி வருவதாக அவதானிகள் கருத்துக் கூறியுள்ளார்கள்.

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக மீண்டும் ரத்வத்தை ?

ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக ஜெனரல் அனுருத்த ரத்வத்தையை நியமிப்பதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் - அதற்கான ஏற்பாடுகளில் அவர் ஈடுபட்டிருப்பதாகவும் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தரான முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்தை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை. தேசியப்பட்டியலிலும் இவரது பெயர் இடம்பெற்றிருக்கவில்லை. ஆயினும், தனது மாமனாரான ஜெனரல் அனுருத்த ரத்வத்தையையும், முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவையும் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை எடுத்தார்.

ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு சபாநாயகர் பதவி வழங்குவதற்கும், ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு முக்கிய அமைச்சுப் பதவியொன்றையும் வழங்க ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன. உடதலவின்ன கொலை வழக்கில் முக்கிய சந்தேக நபரான ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு முக்கிய அமைச்சுப் பதவி வழங்குவது தொடர்பாக சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளும், கட்சிக்கு வெளியிலும் பலத்த எதிர்ப்பு இருந்து வந்தது.

இந்த நிலையிலேயே, ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவியை வழங்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் - இந்தப் பதவியை தமது குடும்பத்துக்குள் இருக்கும் ஒருவருக்கு வழங்கவே ஜனாதிபதி சந்திரிகா விரும்புவதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. 1994ம் ஆண்டு முதல் 2001 ஆண்டு வரை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த ஜெனரல் அனுருத்த ரத்வத்தை இனப்பிரச்சினையை இராணுவ ரீதியாக தீர்க்க முனைப்புடன் செயற்பட்டு வந்தவர் என்றும், மோசமான இராணுவப் பின்னடைவுக்குக் காரணமானவரென விமர்சிக்கப்பட்டமைவும் குறிப்பிடத்தக்கது.

## கொழும்பிற்கு வந்த இந்தியக் கடற்படைக்கப்பல் !

(19.04.04)

இந்திய கடற்படைக் கப்பலான ‘தரங்கினி’ கொழும்புத் துறைமுகத்துக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை வந்துசேர்ந்துள்ளது. கடந்த 15 மாதங்களாக 17 நாடுகளின் 37 துறைமுகங்களுக்கு நட்புறவு விஜயம் மேற்கொண்ட இக்கப்பல் இறுதியாகக் கொழும்பு வந்துள்ளது. நாளை கொழும்பில் இருந்து புறப்படும் இக்கப்பல், கொச்சின்துறை முகத்தை நோக்கிச் செல்லும். சிறீலங்காவிற்கும் இந்தியாவுக்கும் இடையில் நட்புறவை வளர்க்கும் நோக்குடன் இக்கப்பல் கொழும்பு வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. 1983ம் ஆண்டுக்குப் பின் இந்தியக் கடற்படைக் கப்பல் ஒன்று இலங்கைக்கு நட்புறவு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவது இதுவே முதல் தடவையாகும்.

## தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் அன்னை பூபதியின் 16வது நினைவு நிகழ்வு

(19.04.04)

தியாகி அன்னை பூபதியின் 16வது ஆண்டு நினைவின் இறுதி நிகழ்வுகள் வடக்கு-கிழகின் அனைத்து மாவட்டங்களிலும் உணர்வெழிச்சியுடன் இன்று நடைபெற்றுள்ளது. இந்த நினைவு நாளை முன்னிட்டு போராளிகளின் பாசறைகள், பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள, அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், பிரதான வீதிகள், சந்திகள் என்பவற்றில் சிவப்பு, மஞ்சள், கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு தாயகம் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளதுடன் அன்னை பூபதி தொடர்பான பதாதைகளும் ஆங்காங்கு கட்டப்பட்டிருந்தன.

உடையார்கட்டில் மட்டு-அம்பாறை மாவீரர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் வர்த்தகர்கள், தேசிய எழுச்சிப்பேரவையினர், பொதுமக்கள் கலந்துகொண்டனர். கிளிநொச்சி ஆலய முன்றலில் அன்னைபூபதி அவர்களின் நினைவாக அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றுள்ளது. இதேவேளை, அன்னையின் நினைவு நிகழ்வுகள் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகள் எங்கும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மோகன் ஜுவலரி மார்ட்
201 Rue du fg. st. Denis, 75010 Paris.
Tel: 01 42 05 65 26 / Fax: 01 42 05 65 79
M°: La Chapelle / Gare du Nord
தங்க நகைகளுக்கு தவணை முறையில் செலுத்தும் கடன் வசதியுடன்!
Pub.



# V.T.Cash & Carry

VAAHESAN TRADERS LTD

**Epicerie Fine Indienne**

15, Rue Cail, 75010 Paris
www.restoindianparis.com

Tel: 01 40 05 07 18 Fax: 01 40 05 06 92 e-mail:Suresh@cocoeuro.com



## ஜேர்மன், பெல்ஜியம் தயாரிப்பு

வீட்டுத் தளபாடங்கள் மலிவு விற்பனையில் குசினி செட், சோக்கேஸ், லெதர் Setey 3+2+1, சாப்பாட்டு மேசைகள், கட்டில், அலுமாரி மற்றும் அனைத்துத் தளபாடங்களையும் உங்கள் விருப்பம்போல் தெரிவு செய்யலாம்.

தொடர்புகளுக்கு: 06 64 42 42 62


## நூல் அறிமுக விழா

அ. இரவியின்

# காலம் ஆகி வந்த கதை

காலம்: 09.05.2004
நேரம்: ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 3.30 மணி
இடம்:- 26, Rue de departement
பாரிஸ் - 18
M° La Chapelle

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


INDIAN ASTROLOGER
சாய்பாபா

## Laxmi Kanthswamy

**பிரபல இந்திய ஜோதிடர் கைரேகை நிபுணர் இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்துள்ளார்.**

எம்மிடம் வருவதால் உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைக்கப்படும். 99 வீதம் சரியாக கணித்துச் சொல்லப்படும். உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விபரங்கள், தேகசுகம் எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா பிரார்த்தனைகளும் செய்து தருவோம்.கண் திருஷ்டி, சூனியம் அகற்றுதலும் செய்து தருவோம்.

**சந்திக்குமிடம்:**
**(West London) South hall**
**Contact:**
**Tel: 07932724065 / 07939613067**



EUROCONSULT SARL TRADUCTIONS

மொழி பெயர்ப்பு நிலையம்

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாக கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு

24, Rue Perdonnet ,
75010 Paris
Tel: 0153267010
Fax: 0153267502



## வெளிவந்துவிட்டது!

வரும்பகை திரும்பும்






TCN Films ஆதரவில் Music Indien இணைந்து வழங்கும்

பாரிஸ் வெண்திரையில்

## (2வது வெற்றிவாரமாக)

**நடிகர்கள்**
விஜய்
த்ரினா
பிரகாந்ராஜ்
தாமு
மற்றும் பலர்

**காலம்**
சனி 24.04.04
20.15
ஞாயிறு 25.04.04
18.00 21.00
திங்கள் 26.04.04
20.15




**இடம்:**
Espace Cinema

தொடர்புகளுக்கு:
www.tamil cine.net Tcn films: 06 10 35 77 19 Music indien: 01 40 05 18 22



## வீடு வாடகைக்கு விடப்படும் (Pavillon)

3 படுக்கை அறை வசதியுடன் வரவேற்பறை, சிறிய Bureau, Garage, Cave avins, குளியல் அறை, மலசலகூடம் 2 (w.c) Gas வசதியுடன் சமையல் அறை தளபாடங்கள் உட்பட Pierrefitte sus Seine எனும் இடத்தில் (வதிவிட வசதி 98m²) புகையிரத நிலையத்திற்கு மிக அண்மையில் (RER D, Gard du Nord செல்வதற்கு 12 நிமிடங்கள்)

**வாடகை: 1300 ஈரோ**

**தொடர்புகட்கு: 01 48 67 19 69**
**06 82 07 01 57**



## சாயி துர்க்கா புகைப்படச் சேவை

தரம், வேகம், மலிவு

இத்துடன் தரமான 'லெமனேசன் அல்பங்கள்' (இலவசம்) செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு
சுரேஸ் - 06 17 51 17 58 / 01 53 26 06 89
**T.M.S Video 33, Bd De La Chapelle - 75010 Paris**



# Errances Travels

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

**Tel: 01 42 09 70 00**
**Fax: 01 42 09 53 39**

தொடர்பு:
நாதன்

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# பொறுப்பேற்கப்படும் போராளிகளின் வாழ்வு மேம்பாட்டுக்கான பொறுப்புகளை யுனிசெப் சரிவர நிறைவேற்ற வேண்டும்

(18.04.04)

விடுவிக்கப்படும் போராளிகளைப் பொறுப்பேற்பதுடன் யுனிசெப் அமைப்பின் பொறுப்பு முடிந்துவிடக் கூடாது. பொறுப்பேற்கப்



படும் போராளிகளின் வாழ்வு மேம்பாட்டுக்காக யுனிசெப் அமைப்பு, அதற்கான பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் நாம் போராளிகளை விடுவிக்கும் நோக்கம் நிறைவேறும் என விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் 40 போராளிகளை விடுவிக்கும் நிகழ்வில் பங்குபற்றிப் பேசும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், சில வாரங்களுக்கு முன்பு நாம் 35 போராளிகளை விடுவித்து யுனிசெப் அமைப்பிடம் கையளித்தோம். இப்போது 40 போராளிகளை விடுவித்து யுனிசெப்பிடம் கையளிக்கின்றோம். மூன்று காரணங்களுக்காக இளைஞர், யுவதிகள் எமது இயக்கத்தில் சேர்கின்றார்கள். குடும்பச் சூழ்நிலை காரணமாகப் படிக்க முடியாத நிலை, பொருளாதாரக் கஷ்டம், உணர்வு பூர்வமாக போராட்டத்துடன் இணைந்து கொள்வது. விடுவிக்கப்படும் போராளிகள் மீண்டும் இக்காரணங்களுக்கு ஆளாகாது பார்த்துக் கொள்ள வேண்டியது, அவர்களைப் பாரமெடுக்கும் யுனிசெப் அமைப்பின் கடமையாகும்.

போராளிகளை விடுவிப்பது தொடர்பாக யுனிசெப் அமைப்பும் விடுதலைப்புலிகளும் உருவாக்கியுள்ள திட்டத்தின் வெற்றி யுனிசெப் அமைப்பின் எதிர்காலச் செயற்பாட்டில்தான் தங்கியுள்ளது. நாங்கள் விடுவித்து யுனிசெப் அமைப்பிடம் கையளித்த போராளிகள் சிலர் மீண்டும் எம்மிடம் வந்து சேர்ந்துள்ளார்கள். காரணம், விடுவிக்கப்பட்ட பின்னர் அவர்கள் வாழ்க்கை வளம் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை யுனிசெப் எடுப்பதற்குத் தவறியது தான். இதனை யுனிசெப் அமைப்பு கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும். அப்போது நாம் விடுவிக்கும் போராளிகளின் புனர்வாழ்வுத் திட்டம் வெற்றியடையும்.

யுனிசெப் திருமலை பிரதிநிதி கபிரியெலா எல்றோய் பேசுகையில், வயது குறைந்த 40 போராளிகளை விடுதலைப் புலிகள் இன்று விடுவிப்பது மகிழ்ச்சி தருகின்றது. விடுவிக்கப்படும் போரா



ளிகள் அவர்களின் குடும்பத்தினருடன் சேர்ப்பிக்கப்பட்டுப் புனர்வாழ்வளிக்கப்படும். தொடர்ந்தும் விடுதலைப் புலிகள் தம்மிடமுள்ள வயது குறைந்த போராளிகளை விடுவிக்க முன்வர வேண்டும் என்று தெரிவித்தார்.

# விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா மட்டுமே நீக்கப்பட்டார்

## மட்டு.-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(18.04.04)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா மட்டுமே நீக்கப்பட்டுள்ளார். ஏனைய போராளிகள் மீண்டும் எம்முடன் இணையலாம் என்று மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார். கொக்கட்டிச்சோலையில் உள்ள அரசியல்துறை அலுவலகத்தில் வடக்கு வர்த்தகர்களுடன் கடந்த வெள்ளியன்று இரவு நடந்த சந்திப்பை அடுத்து செய்தியாளர்களுடன் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: 'கருணா என்ற தனிமனிதன் மட்டும் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்டார். அவரை மறந்து விடவேண்டும். அவர் எங்கு இருக்கிறார் என்று யாருக்குமே தெரியாது.

இயக்கத்தின் கட்டுப்பாட்டை மீறியதற்காக அவரை மட்டுமே எமது தலைமை நீக்கியுள்ளது. வேறு எவரும் நீக்கப்படவில்லை. போராளிகள் எமது நிர்வாகத்தையும் தேசிய தலைமையையும் ஏற்று எம்முடன் இணைந்து கொள்ளலாம்.

மட்டக்களப்பிலிருந்து வடக்கு வர்த்தகர்களை கருணா வெளியேற்றிய செயலானது முட்டாள்தனமான முடிவாகும்' என்றும் அவர் கூறினார். 'மீளவும் தமது வர்த்தகத்தை ஆரம்பிக்கும் வர்த்தகர்களுக்கு அரசுதான் நட்டஈடு வழங்கவேண்டும். அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதியில்தான் வர்த்தகர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்த விடயத்தைத் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் அரசுக்குத் தெரியப்படுத்தி நட்டஈட்டைப் பெற நடவடிக்கை எடுக்கவுள்ளோம்' என்றும் அவர் மேலும் கூறினார்.

# தென்மராட்சியில் மீளக் குடியமரும் மக்களுக்குப் படையினர் பல நிபந்தனைகள்

(18.04.04)

தென்மராட்சி தெற்கில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் மீளக் குடியமரும் குடும்பங்களுக்குச் சிறீலங்காப் படையினர் பல்வேறு நிபந்தனைகளை விதித்துள்ளனர். தனங்கிளப்பு, கோயிலாக்கண்டிப் பகுதிகளிலும் அவற்றை அண்டிய பகுதிகளில் மீளக் குடியேறும் மக்களுக்கே படையினர் பல நிபந்தனைகளை விதித்துள்ளனர்.

மீள் குடியேறும் குடும்பங்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்களது புகைப்படங்களையும், விபரங்களையும் வீட்டின் முன்புறம் தொங்கவிடும் அதேநேரம், இந்த விபரங்களுடன் குடும்ப அங்கத்தவர்களது புகைப்படங்களையும் படையினரிடம் ஒப்படைக்க வேண்டும். புகைப்படங்களைச் சமர்ப்பிக்காத மற்றும் உரிய விபரங்களை படையினரிடம் ஒப்படைக்காத குடும்பங்களை மீளக் குடியேறப் படையினர் அனுமதிக்கவில்லை. இதேநேரம், கைதடி மற்றும் நாவற்குழியின் வடக்கே, மீள்குடியேற்றத்திற்குப் படையினரால் அனுமதி வழங்கப்பட்ட பகுதிகளில், முப்பது வீடுகள் மட்டுமே மக்களின் மீள் குடியேற்றத்திற்கேற்ப ஓரளவு நல்ல நிலையிலுள்ளன. ஏனைய, வீடுகள் யாவும் முற்றாக அழிந்து போயிருப்பதாக விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

# ஜாதிக ஹெல உறுமயவிற்கும் சகல உதவிகளையும் வழங்குவதற்கு இந்தியத் துதர் உறுதியளிப்பு

(18.04.04)

கடும்போக்குச் சிங்கள தேசியவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுக்குச் சகல உதவிகளையும் வழங்குவதற்கு இந்தியா முன்வந்துள்ளது. கடந்த வியாழக்கிழமை ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் தலைமையிலான பௌத்த குருமார் தூதுக்குழு கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் நிருபம் சென்னை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே இந்தியத் தூதுவர் ஹெல உறுமயவுக்கு உறுதியளித்திருக்கிறார்.

எந்த விதத்திலும் இலங்கையில் பிரிவினையை இந்தியா ஆதரிக்காது. அனைத்து இன மக்களும் சமமான உரிமைகளுடன் ஒன்றுபட்ட இலங்கைக்குள் வாழ்வதையே இந்தியா விரும்புகின்றது. அதற்கான அனைத்து உதவிகளையும் வழங்க இந்தியா தயாராக உள்ளதென்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

வட-கிழக்கு பகுதிகளிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த புனித ஸ்தலங்களை பாதுகாப்பதற்கான தம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராகவுள்ளதாகவும், வரலாற்று உரிமைகளைப் பாதுகாக்க உதவி வழங்குவது தமது கடமையாகுமென்றும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் தொடர்பாக இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து ஆட்சியமைக்காவிடினும் நாடாளுமன்றத்தில் அரசு எடுக்கும் நல்ல முடிவுகள் அனைத்திற்கும் ஜாதிக ஹெல உறுமய ஆதரவு வழங்கும் என்ற உறுதியையும் தூதுவருக்கு நாம் வழங்கினோம். எமது பிரச்சினைகளின் போது இந்தியா தனது ஆலோசனைகளையும் பங்களிப்பினையும் வழங்க வேண்டுமென்றும் இக்கூட்டத்தின் போது இந்தியத் தூதுவரைக் கேட்டுக் கொண்டோம். எமது கோரிக்கைகள் அனைத்தையும் அவர் ஏற்றுக் கொண்டாரென்றும் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஜாதிக ஹெல உறுமயவின் உயர் சங்கபீட உறுப்பினர்களும் எம்.பி.க்களுமான ஓமல்பே சோபித தேரர், அதுருலியே ரத்ன தேரர், கொடபொல அமரகித்தி தேரர், உடுவே தம்மாலோக தேரர் மற்றும் ஆலோசகரான வித்யா அமரபாலவும் கலந்து கொண்டுள்ளனர்.

# மட்டு-அம்பாறை மாவட்டங்களில் அரசியல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிப்பு

(18.04.04)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள பிரதேசங்களுக்கான அரசியல்துறைப் பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த, மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், வெள்ளிக்கிழமை முதல் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் யாவும் இயங்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# கருணாவுடன் தேசவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டோர் மீது மனிதாபிமான அணுகுமுறை

(18.04.04)

கருணாவின் தேசவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிருந்த எவரும் தண்டிக்கப்படமாட்டார்கள் எனவும் மனிதாபிமானம் மிக்கதோர் அணுகுமுறையையே இது விடயத்தில் கடைப்பிடிக்குமாறு தமிழீழத் தேசியத் தலைவர் கண்டிப்பாக அறிவுறுத்தியிருப்பதாகவும் மட்டு.-அம்பாறை விசேட தளபதி கேணல் ரமேஷ் அறிவித்திருக்கிறார்.




செல்வம் அடைக்கலநாதன் – ஜெயானந்தமூர்த்தி– கௌசல்யன்

கருணா பின்வாங்கிய சமயம் தப்பிப் போயிருந்த போராளிகள் மீண்டும் புலிகளுடன் இணைந்து வருவதாகவும் வெகுவிரைவில் சட்டம், ஒழுங்கு மற்றும் நீதிச் செயற்பாடுகள் அங்கு மீள நிலைநாட்டப்படும் எனவும் மீனகம் முகாமில் இருந்து இணையத் தளமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் கூறினார்.

எமது படைகள் தேசிய நோக்கத்தை கருத்திற் கொண்டே செயற்படும். சிவில் சமூக விவகாரங்களில் அவை தலையிடமாட்டா. மட்டு.அம்பாறை மாவட்டங்களில் மிக விரைவில் தமிழீழ நீதிமன்றம் மற்றும் காவல்துறை செயற்பட ஆரம்பிக்கும் என்று ரமேஷ் மேலும் கூறினார்.

இதேசமயம், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ஜெயானந்தமூர்த்தி ஆகியோர் மீனகம் முகாமுக்கு வெள்ளிக்கிழமையன்று விஜயம் செய்து கேணல் ரமேசையும், மட்டு.-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனையும் கொக்கட்டிச்சோலையிலுள்ள அரசியல்துறை பணிமனையில் சந்தித்து, கருணாவின் செயற்பாடுகளால் ஏற்பட்ட சிவில் சமூக பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பிலுள்ள தமிழ் அலை பத்திரிகைக் காரியாலத்திற்கும் இவர்கள் விஜயம் மேற்கொண்டனர். கருணாவின் அடக்குமுறையின் கீழ் 41 நாட்களாக, தமிழ்த் தேசியத்திற்கெதிராகச் செய்திகளைப் பிரசுரிப்பதற்குத் தாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தமையை தமிழ் அலை ஆசிரியர் வேணுகோபால் விபரித்தார். அலுவலகத்தின் நுழைவாயில் பகுதியில் பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டும், விசேட படைப் பிரிவொன்று கடமையில் ஈடு[illegible]தப்பட்டும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் அவர் கூறினார்.



தமிழ் அலை அலுவலகம் முன் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு நிலை

# ஈ.பி.டி.பி.யினருக்கு தீவுப்பகுதியில் பொதுமக்கள் கடும் எதிர்ப்பு

## சிறீலங்கா கடற்படை, பொலிஸ் பாதுகாப்பு

(18.04.04)

யாழ். தீவுப்பகுதியில் உள்ள ஈ.பி.டி.பி. குழுவின் அலுவலகங்களுக்குச் சிறீலங்கா கடற்படையினரும் பொலிசாரினதும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களாகத் தீவுப்பகுதியில் ஈ.பி.டி.பியினருக்கு எதிராக பொதுமக்கள் காட்டிவரும் பலத்த எதிர்ப்புக்களையடுத்து இவர்களது முகாம்களுக்கான பாதுகாப்பை கடற்படையினரும் பொலிசாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அனலைதீவுப் பகுதியில் கடந்த வாரம் ஈ.பி.டி.பி.யினரின் முகாமைப் பொதுமக்கள் தீ வைத்துக் கொழுத்திய அதேவேளை தற்போது அந்த முகாமுக்குப் பொலிசாரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பகுதிகளில் அமைந்துள்ள ஈ.பி. டி.பி முகாம்களுக்குக் கடற்படையினரதும், பொலிசாரினதும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. தீவுப் பகுதியிலிருந்து ஈ.பி.டி.பியினர் வெளியேற வேண்டுமென்ற கோசம் அங்கு வலுவடைந்து வரும் நிலையில் ஈ.பி.டி.பியினருக்கும் பொது மக்களுக்கும் இடையே மோதல்களும், முறுகல் நிலையும் ஏற்பட்டு வருகின்றன.

இதேவேளை கடந்த புதன்கிழமை தம்பாட்டிப் பகுதியில் கூடிய பொது அமைப்புக்கள் பல தீவுப்பகுதியிலிருந்து ஈ.பி.டி.பி.யினர் வெளியேற வேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளனர்.

# வின்சர் திரையரங்கிற்கு அருகிலுள்ள சாக்கடையில் அழுகிய நிலையில் சடலங்கள் மீட்பு

(18.04.04)

யாழ்ப்பானம் வின்சர் திரையரங்கின் பின்னால் உள்ள அழு-க்கு நீரோடும் சாக்கடையிலிருந்து அழுகிய நிலையில் இரு சடலங்கள் கடந்த வெள்ளியன்று மீட்கப்பட்டுள்ளன. சிறீலங்காப் பொலிசாரால் மீட்கப்பட்ட மேற்படி இரு சடலங்களில் ஒன்று வண்ணார்பண்ணையைச் சேர்ந்த நகைக்கடையாளரான நடராஜா சத்தியலிங்கம் (43) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மற்றைய சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. மேற்படி இரு சடலங்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் காலமானவர் காப்பறையில் வைக்கப்பட்டுள்ளன. அடையாளம் காணப்பட்டுள்ள நடராஜா சத்தியலிங்கம் கடந்த 12ம் திகதியிலிருந்து காணாமற்போனவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி இரு சடலங்களிலும் வெட்டுக்காயங்கள் காணப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவர்கள் இருவரும் கொலை செய்யப்பட்டு சாக்கடையில் வீசப்பட்டிருந்தனர்.

மீட்கப்பட்ட இரு சடலங்களில் அடையாளம் காணப்பட்ட கந்தர் மடம் அன்னசத்திர ஒழுங்கையைச் சேர்ந்த நடராசா சத்தியலிங்கம் என்பவரின் சட[illegible] பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. சடலத்தில் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டமைக்கான தடயம் காணப்பட்டதாக பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது என்று பொலிசார் தெரிவித்தனர்.

# ராஜீவ் கொலையில் நீலனுக்குத் தொடர்பு இல்லை

## இந்திய உயர் அதிகாரி மறுப்பு

(18.04.04)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட உதவிப் புலனாய்வுப் பொறுப்பாளர் நீலனுக்கு முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலையில் பங்களிப்பு இருந்ததை மறுத்திருக்கிறார் படுகொலை வழக்கை விசாரணை செய்த இந்திய விசேட விசாரணைப் பிரிவின் தலைவரான டி.ஆர்.கார்த்திகேயன்.

நீலன் கடந்த 12ம் திகதி மட்டக்களப்பு மருதம் முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். இவருக்கு ராஜீவ் கொலையுடன் நேரடித் தொடர்பு இருந்ததற்கு ஆதாரமில்லையெனக் கார்த்திகேயன் கூறியுள்ளார்.

ஆனால், சிவராசன், நீலனின் செல்லிட வயர்லஸ் செட்டை பயன்படுத்தியதாகவும் தான் சொந்தமாக தொடர்பாடல் (வயலர்ஸ்) கருவியைப் பெற்றுக் கொள்ளும் வரை சிவராசன் நீலனின் தொடர்பாடல் கருவியைப் பயன்படுத்தினார் எனவும் கார்த்திகேயன் கூறியுள்ளார். 1990 இறுதிக் காலாண்டுப் பகுதியில் புலிகளின் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானால் நீலன் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அங்கு புலனாய்வுத் தளத்தை அமைக்கவே அவர் அங்கு அனுப்பப்பட்டதாகவும் கார்த்திகேயன் தெரிவித்திருக்கிறார்.

நீலனின் தொடர்பாடல் கருவியை சிவராசன் பயன்படுத்தினாலும், ராஜீவ் கொலைச் சதியில் ஈடுபட்ட குழுவில் நீலன் அங்கம் வகிக்கவில்லை எனவும் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

## மணல் வண்டி மோதி ஒருவர் பலி

(19.04.04)

சாவகச்சேரி தெற்குப் பகுதியில் மணல் ஏற்றிவந்த பாரவண்டி மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார், மற்றொருவர் காயமடைந்தார். மட்டுவில் தெற்கு - கல்வயல் சிவன்கோயில் சந்தியில் கடந்த சனியனறு இந்த விபத்து இடம்பெற்றது. இதில் வடமராட்சி வதிரியைச் சேர்ந்தவரான வல்லிபுரம் யோகேஸ்வரன் (52) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார். அச்சுவேலி தோப்புப் பகுதியைச் சேர்ந்த சித்தன் சண்முகம் (64) என்பவரே இந்த விபத்தில் காயமடைந்தவராவார்.


லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்

தரமான கூடவே சுவையான
இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
லாச்சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை

5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91

எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை

யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE



ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.



Pub-Fr

# தமிழ்த் தேசியம் என்ற நிலைப்பாட்டில் இறுதிவரை உறுதியாக நின்றவர் நீலன்

(18.04.04)

துரோகி கருணாவின் பிரதேசவாதத்திற்குத் துணைபோகாது எமது தலைவரின் உறுதியான தலைமைத்துவத்தின் மீது உறுதியாக நின்று தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்ற இறுதிவரை உழைத்ததனால் தான் மட்டக்களப்பு மாவட்டத்தின் புலனாய்வுத் துறைப் துணைப்பொறுப்பாளர் நீலன் கருணாவால் சுடப்பட்டார். இவ்வாறு விடுதலைப் புலிகளின் உறுப்பினர் நியூட்டன் தெரிவித்துள்ளார். கருணாவால் சுட்டுக்கொல்லப்பட்ட மட்டு. மாவட்ட புலனாய்வுத்துறை துணைப் பொறுப்பாளர் லெப்.கேணல் நீலன் அவர்களின் வித்துடல் புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது அங்கு உரை நிகழ்த்துகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், லெப்.கேணல் நீலன் 1984ம் ஆண்டு தனது 19 வயதில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டு விடுதலைப் புலிகளின் ஐந்தாவது பயிற்சிப் பாசறையில் தனது பயிற்சியைப் பெற்றார். அன்றைய நாளில் இருந்தே கருணாவுடன் ஒன்றாகப் புலனாய்வுப்பணியை மேற்கொண்டார். கருணாவுடன் அன்று தொடக்கம் ஒன்றாக நின்று பணியாற்றிய ஒரே வயதுடைய இவருக்கும் கருணாவிற்கும் இடையில் பொறுப்பாளர் என்பதைவிட புரிந்துணர்வு அடிப்படையிலான நட்பு அந்தக்காலத்தில் இருந்தே இருந்து வந்தது.

ஆனால் நீலன் ஒரு உறுதியான போராளி. தேசியத்தின் பற்றுதலுடனும் தலைமையின் மீது உறுதியுடனும் செயற்பட்டு வந்தார். இந்த நிலையில் கருணாவின் நட்புக்கு மேலாக அவர் தேசியத்தை நேசித்தார். அதனால் கருணாவால் இவரைத் தன்வசம் ஈர்த்துக்கொள்ள முடியவில்லை. இறுதிவரை கருணாவுடன் நெருங்கிய நட்புடனேய இருந்தார். கருணா பல தளபதிகளுக்குச் சலுகைகளை வழங்கி தன்வசம் ஈர்த்தார். ஆனால் நீலன் அத்தகைய சலுகைகளுக்காகத் தமிழ்த் தேசியத்தை விற்காது உறுதியாக இருந்தார்.

இந்நிலையில் மட்டு. மாவட்ட புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் விடுதலைப் புலிகளால் இங்கு அழைக்கப்பட்ட நிலையில் கருணா நீலனைத் தொடர்பு கொண்டு புலனாய்வுத்துறைப் போராளிகளை ஒழுங்குபடுத்தி சந்திப்பொன்றுக்காக தருமாறு கட்டளையிட்டிருந்தார். கருணாவின் நயவஞ்சக நோக்கைப் புரிந்துகொண்டு வன்னிசென்ற மாவட்டப் பொறுப்பாளர் வந்தவுடன் சந்திப்பை ஒழுங்குபடுத்தலாம் அதுவரை பொறுமையாக இருங்கள் என்றுகூறி சந்திப்பை ஒழுங்குபடுத்தாது தட்டிக்கழித்து வந்தார்.

பின்னர் பொறுப்பாளர் வந்தவுடன் கருணாவால் இவர்கள் அனைவரும் எதிரியால் எவ்வாறு சிறைப் பிடிக்கப்படுவார்களோ அவ்வாறு இவர்களது ஆயுதங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டு மக்கள் முன்னிலையில் கைகளை உயர்த்தியவாறு கூட்டிச்செல்லப்பட்டு அவரது முகாமில் அடைத்து வைக்கப்பட்டனர். அதில் பல போராளிகள் அங்கிருந்த தளபதிகளின் உதவியுடன் தப்பிவந்தனர். நீலன் தனக்கு உடன்படவில்லை என்ற காரணத்தால் பழிவாங்கினார். கருணாவின் துரோகத்தனம் நீலனை இத்தகைய நிலைக்கு உருவாக்கியதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம். நீலன் கைகள் கட்டப்பட்டுச் சுடப்பட்டார். நீலன் பல சமர்க்களங்களைச் சந்தித்தவர். அதேபோல இராணுவ புலனாய்வு ரீதியாக மட்டக்களப்பில் பணியாற்றினார். இவர் எந்தக்காலத்திலும் தமிழ்த் தேசியத்திற்கு உறுதியானவராக இருந்தார்.

கருணாவால் நீலன் கொலை செய்யப்பட்டதன் பின்னர் இவருடன் கருணா சிறை வைத்திருந்த ஒருவரை சந்தித்தபோது நீலன் தலைமையிடம் கூறுமாறு கூறிய செய்தியை எம்மிடம் கூறினார். கருணா என்னை தனது தலைமையின் கீழ் இருந்து வேலை செய்யுமாறு தொடர்ச்சியாக வற்புறுத்தி வருகிறார். அவருக்குக் கீழ் இருந்து வேலை செய்ய நான் தயாராக இல்லை. துரோகியின் கீழ் இருந்து வேலை செய்ய நான் தயாராக இல்லை. அதைவிட நான் சாவதற்குத் தயாராக இருக்கிறேன். இந்தத்தகவலை தலைமையிடம் தெரியப்படுத்துங்கள் என்றுதான் தலைமை மீது உறுதியாக உள்ளதை அவரிடம் கூறிவிட்டுச் சிறையில் இருந்தார். இத்தகைய உறுதிமிக்க போராளியை கருணா வஞ்சகமான முறையில் கொலை செய்துவிட்டார் என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுத்துறை துணைப் பொறுப்பாளர் லெப்.கேணல் நீலனின் *(சீனித்தம்பி சோமநாதன்-ஆரையம்பதி-3 மட்டு)* வித்துடல் கடந்த 15ம் திகதி மாலை விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளு



டன் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது. லெப்.கேணல் நீலன் இந்தியாவில் 5வது பயிற்சிப்பாசறையில் பயிற்சி பெற்றவர். இரண்டு பிள்ளைகளின் தந்தையும் ஆவார். இவரது மனைவியும் ஒரு போராளி. கருணா குழுவினரால் படுகொலை செய்யப்பட்ட மேஜர் தமிழீழனின் *(சதாசிவம் திருக்கேதீஸ்வரன் - மகிழவெட்டுவான், ஆயித்தமலை-மட்டு)* வித்துடல் இலுப்பையடிச்சேனையில் மக்களின் வணக்கத்திற்கு வைக்கப்பட்டு, தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டது.

இதேவேளை, கருணாவினால் கப்டன் மாவேந்தன் *(திருநாவக்கரசு புவனேஸ்வரன், இறாலோடை காயங்கேணி-மட்டு)*, கப்டன் நம்பி *(தர்மலிங்கம் பத்மநாதன், மாதவன் வீதி, கல்முனை -3 அம்பாறை)*, ஆதரவாளர் மோகன் *(கருவங்கேணி-மட்டு)* ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

# செய்தித் துளிகள்

- மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கருணா, தப்பிச் சென்ற நிலையில் தமிழீழத் தேசியத் தலைவரின் பணிப்பின் பேரில் கேணல் சொர்ணம் மற்றும் கேணல் பானு ஆகியோர் நேற்று சனிக்கழமை மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்று போராளிகளையும் பொது மக்களையும் சந்தித்து பேசியுள்ளனர். இதேவேளை, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ் இப் பகுதிகளில் போராளிகளையும் பொதுமக்களையும் சந்தித்து வருவதும் தெரிந்ததே.

- தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்டத்திற்கு புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அம்பாறை மாவட்ட தளபதியாக ஜனார்த்தனன், அரசியல்துறைப் பொறுப்பாளராக குயிலின்பன், மட்டக்களப்பு நகர அரசியல் துறைப் பொறுப்பாளராக சேனாதிராசா, ஆண்டான்குள கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக சலீம், குடும்பிமலைக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக தவம், மாவடி முன்மாரிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக உதயராஜ், பட்டிருப்புக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக செல்வா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- சிறீலங்காப் படையினர் தமிழர் தாயகப்பகுதிகள் நோக்கி மேற்கொண்ட படை நடவடிக்கைகள் மூலம் 25 இலட்சத்திற்கும் அதிகமான பனை, தென்னை மரங்களை அழித்துள்ளனர். இவ்வாறு பனை, தென்னை வளம் அழிக்கப்பட்ட பகுதிகளில் ஒரு இலட்சம் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர் எனவும் இவ் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு மானிய அடிப்படையில் தென்னை, பனை நடுகைத்திட்டத்தினை அறிமுகப்படுத்தி அழிக்கப்பட்ட மரங்களை மீளக் கட்டி எழுப்பமுடியும் என பொருண்மிய மதியுரையகம் செய்தி வெளியிட்டுள்ளது.

- உதவி வழங்கும் நாடுகளின் விசேட கூட்டம் அடுத்த மாதம் 17ம் நாள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவிகள் வழங்கும் வகையில் நடத்தப்படவுள்ள இந்தக் கூட்டம் பெல்ஜியம் நாட்டின் தலைநகரான பிறேசிலில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்திற்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதாற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்தமாதம் கொழும்புக்கு வரவுள்ளது. இந்தக் குழுவினர் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கான பின்னணித் தரவுகள் சேகரிக்கவிருப்பதாகவும் இதற்கான ஏற்பாடுகளை அமெரிக்க இராஜாங்க பிரதிச்செலலாளர் றிச்சாட் ஆர்மிரேச் செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கூட்டத்தில் உதவி வழங்கும் நாடுகள் விடுதலைப் புலிகள், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் செய்துகொண்ட போர்நிறுத்த உடன்படிக்கை குறித்தும் ஆராயவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

- மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ்லி இராஜநாயகம் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். இம்மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட இவர் 38,633 வாக்குகளைப் பெற்று தெரிவாகினார். இவர் மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவருமாவார். தனது சொந்த விருப்பின் பேரிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ததாக அவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். நேற்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் பதவி விலகல் கடிதத்தைத் தாம் சமர்ப்பித்துள்ளார்.

# 'புலிகளை பலவீனப்படுத்தலாமென அரசு நினைப்பது பகற்கனவு'

## - முன்னாள் விமானப்படைத்தளபதி ஹரி குணதிலகா கூறுகிறார்

(18.04.04)

புலிகளின் உள்வீட்டு நெருக்கடியை சாதகமாக பயன்படுத்துவதில் தென்னிலங்கை அரசியற் கட்சிகள் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றன. இந்த நெருக்கடியை பயன்படுத்தி புலிகளின் தலைவர் பிரபாகரனை பேச்சுவார்த்தை மேசையில் பலவீனப்படுத்தலாம் என்று பெரும்பாலான சிங்கள அரசியற் கட்சிகள் பகற் கனவு காண்கின்றன என்று சிறீலங்காவின் ஓய்வு பெற்ற முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலகா தெரிவித்தார்.

கருணாவை சுலபமாக வெற்றி கொண்டதன் மூலம் பிரபாகரன் தற்போது பெரும்பலம் பெற்றுள்ளார். பேச்சுவார்த்தை மேசையிலே அவர் ஒரு போதும் பலவீனப்படப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் தலைமைத்துவத்துக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் இனி ஏற்படப் போவதில்லை. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகளாகவே இருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சுதந்திர முன்னணி அரசாங்கமும் அதன் பங்காளிகளும் புலிகளை பலவீனப்படுத்தும் முயற்சிகளையே முன்னெடுப்பதால் சமாதான முயற்சிகளை விரைவில் முன்னெடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாகவே உள்ளன என்றும் அவர் எதிர்வு கூறியுள்ளார்.

TRISTAP ALLIANCE

தமிழில் உரையாடி உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும்
மேலும் விமானச் சீட்டுக்களை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளவும்
BYBA TOURISME

வீட்டுக் காப்புறுதி, மருத்துவக் காப்புறுதி, வாகனக் காப்புறுதி,
ஆயுட் காப்புறுதி, அனைத்துக் காப்புறுதிகளையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
TRISTAR ALLIANCE
*18, Rue Démarquai, 75010 Paris*
*Tél: 01 42 09 06 66 / Fax: 01 42 09 15 05*
*Métro: Gare du nord*
*www.tristarassurance.com*
Pub-Fr-40

# கருணா ஓடியது எதற்காக?

> கடந்த 2 வருடங்களின்போது பிரபாகரனால் உருவாக்கப்பட்ட விசேட படையணிகளும் உளவியல் செயற்பாடுகளுக்கான பிரிவுகளும் எத்துணை வல்லமை பொருந்தியவை என மூத்த புலிகளின் தளபதியாக இருந்த கருணாவிற்குக்கூடத் தெரிந்திருக்கவில்லை.

கருணா இவ்வளவு துரித கதியில் இழிவுடனும் அவமானத்துடனும் பேரிகழ்வுடனும் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணம் தான் என்ன? அந்த 40 நீண்ட நாட்களாகப் பரபரப்பாக அரங்கேற்றப்பட்டுவந்த தனது வீர பிரதாபங்கள் அனைத்தையும் முற்றாகக் கைவிட்டு, வந்த வேகத்திலேயே தப்பி ஓடினார் இந்த கொள்கை துறந்த – இயக்கத்தை விட்டோடிய தளபதி அந்த நாட்களில் இவரால் வெளிக்காட்டப்பட்ட வியக்கத்தக்க காட்சிச்சாலை விளக்கமேலாண்மை திறனை ஊக்குவித்து வந்த கொழும்பு–சர்வதேச ஊடகவியலாளர்துறைகளைச் சேர்ந்த சிலர், இப்பொழுது ஐயத்துக்கிடமில்லாமல் கடும் ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளனர். எதற்காக அவர் வந்த கதியிலேயே அனைத்தையும் கைவிட்டு ஓடினார் என்ற வினாவே பலதரப்பட்ட சிங்களதேசிய இனவாதிகளிலும் தன்னடக்கமுள்ள எழுத்தாளர்களினதும் மூளைகளை எல்லாம் நச்சரித்துக்கொண்டிருக்கும் வினாவாகும்.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் பலம் வாய்ந்த பாரிய இராணுவ அமைப்பிற்கெதிராகப் போர்க்கொடி தூக்க இவருக்கு நம்பிக்கை அளித்தது எது என்ற விளைவையே நாம் முதலில் வினவவேண்டும். தன்னுடைய உடைமையில் உள்ள ஆயுதங்கள், வன்னியிலுள்ள பாரிய பீரங்கித் தொகுதிகளுக்கும் எறிகணைகளுக்கும் எந்தவிதத்திலும் ஈடாகா என்பது கண்டிப்பாகக் கருணாவிற்குத் தெரியும். அவரது படைத்தளபாடங்களின் தேவை நிரப்பீடு வரையறைக்குட்பட்டது. வன்னியிலுள்ள உயர் இராணுவ கட்டளை பீடம் வரையறையில்லாத்தேவை நிரப்பீடுகளைக் கொண்டது. அதேவேளை மேலும் கூடுதலான ஆயுத தளபாடங்களைக் கொண்டுவரும் தகமையும் மார்க்கமும் வன்னியிடம் உள்ளது. புலிகளது நுணுக்கமும் நவீனத்துவமும் வாய்ந்த கட்டளை பீடமும் முறையும் வடக்கிலேயே அமைந்துள்ளன. கடந்த 2 வருடங்களாகப் புலிகள் இந்த துறைகளில் கண்ட அளப்பரிய முன்னேற்றத்தைக் கருணா அறிந்திருக்க முடியாது. ஆனால் இதுபற்றி தனது தோழர்கள் மூலம் கேட்டறிந்து கொள்வதற்காக வாய்ப்பு அவருக்கு இருந்திருக்கலாம். வன்னியில் புலிகளால் நவீன ஆயுத தளபாட முறைகள் பெறப்பட்டுள்ளன என்பதையும் கருணா தெரிந்து வைத்திருப்பார்.

எனினும், தனது சொந்த மட்டக்களப்பு–அம்பாறை மாவட்டங்களைத் தனது பிடிக்குள் வைத்திருக்கமுடியும் என்று அவர் மிகவும் கூடுதலாகவே நம்பியிருந்தார். கிழக்கு மாகாணப் பூகோள அமைப்பும், கொழும்பிற்கும் புலிகளுக்குமிடையே இருந்துவரும் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளும், தனக்கு இராணுவ ரீதியாக அனுகூலமாக உள்ளன என்று அவர் நம்பினார். கிழக்கில் அவரது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்கள் வன்னியிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்து வெலிஓயாவிலிருந்து சேருவில் வரைக்கும் சிறீலங்கா இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டிற்குள் இருந்த பெரிய ஆப்பு வடிவ நிலப்பரப்புக்கள் வன்னியைத் தனிமைப் படுத்தியுள்ளபடியால் தரைவழிமார்க்கமாக விடுதலைப்புலிகள் தங்களது பாரிய ஆயுதங்களையும் ஆயுத தளபாடங்களையும் போர் வீரர்களையும் நகர்த்தித் தனது கட்டுப்பாட்டிலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில்தானும் தாக்குதலை மேற்கொள்ள முடியாது என அவர் பூரணமாக நம்பினார். போர்நிறுத்த ஒப்பந்த ஏற்பாடுகளின் கீழ் விடுதலை புலிகள் சமாதான அலுவலகத்துடனும் இராணுவத்துடனும் இணக்கம் காணாமல் தமது முழுப்படையணிகளை நகர்த்த முடியாதெனவும் கருணா திடமாக நம்பியிருந்தார். அத்தோடு பாரிய பீரங்கி தொகுதிகளும் எறிகணைகளும் இல்லாத நிலையில் புலிகள் வெருகல் ஆற்றின் வடக்கு கரைகளில் ஓரிரு படைகளை அனுப்பி தாக்குதல்கள் நடத்தினாலும் நீண்டகால சிறு சிறு மோதல்களே வாகரைப் பகுதிகளில் மட்டும் நிகழ்த்தலாமென முடிவாக நம்பியிருந்தார். கருணாவுக்கு அச்சமயம் தெரிந்தமட்டில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறாமல் பெரிய சுடுகலன்களையும் தொன் கணக்கிலான எறிகணைகளையும் கரையோரமாகக் கொண்டுசெல்லும் வல்லமை கடற்புலிகளுக்குப் போதாது என்றும் நினைத்தார். சிறீலங்காக் கடற்படையை விழிப்படையச் செய்யாமல் இராணுவ தளபாடங்களையும் போர் வீரர்களையும் கிழக்குக் கரையோரத்திற்கு 2 அல்லது 3 முறைகளுக்குமேல் கொண்டுசெல்லும் நிலையில் கடற்புலிகள் இல்லையென்று கருணா தனது முன் அனுபவத்தின் அடிப்படையில் ஊகித்திருந்தார். கருணாவுக்குப் பொருந்தக்கூடிய இன்னுமொரு குறைபாடு புலிகளிடம் இருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கு மூலையில் தாக்குதல் ஒன்றைத் தொடுக்கவும் அத்தாக்குதலை நிலைகுலையாமல் தக்க வைத்துக்கொண்டு தொடர்ந்து நடாத்தவும் வெருகல் ஆற்றின் வடக்குக் கரைகளில் அவர்களுக்கு பூமராதடிச்சேனைக்கும்? மாவடிச்சேனைக்கும் இடைப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பே பூகோள ரீதியாக புலிகளுக்கு இருந்தது. இந்த நிலப்பரப்பிற்குக் கடல்மார்க்கமாகவும், தரைக்கப்பால் உள்ள கொந்தளிப்பான நீர்களுக்கு ஊடாகவுமே தளபாடங்களை அனுப்பவேண்டும். கப்பல்களிலிருந்து இராணுவச் சரக்குகளை இம்மார்க்கமாக இறக்குவது அவ்வளவு சுலபமான காரியமில்லை. கருணாவின் கணிப்பின்படி புலிகள் வெருகலாற்றைக் கடந்து வாகரைப் பகுதிக்குள் வெற்றிகரமாக ஊடுருவினாலும் A 11 வாழைச்சேனை – பொலநறுவை நெடும்பாதையைச் சிறீலங்கா இராணுவத்தை எதிர்கொள்ளாது கடக்க இயலாது. A 11 பாதைதான் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரதான விநியோகப் பாதையானபடியால் அது இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பிற்கு உட்பட்டது. புலிகளால் தரவை வடமுனைப் பகுதியைக் (தொப்பிகல காடுகள்) கடல்மார்க்கமாகச் சென்றடைய முடியாது. அந்தப் பகுதியின் கிழக்குப் பக்கம் கடல் ஏரியால் சூழப்பட்டுள்ளது. இதற்கப்பால் உள்ள கரையோரப் பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. எனவே, தனது கட்டுப்பாட்டில் உள்ள பலமான பகுதிக்குள் கடல்மார்க்கமாகவோ, வாகரையூடாகவோ போதிய படையணிகளுடனும் படைக்கலன்களுடனும் புலிகளால் வரமுடியாது என்று கருணா நம்புவதற்கு நல்ல காரணம் இருந்ததென்றே கூறவேண்டும். கருணா தனது பாதுகாப்பு நிலையைப் பல அடுக்குகளாக வகுத்து அமைத்திருந்தார். பின்வாங்கும் நிலைகளும், மீண்டும் ஒன்றுகூடும் இடங்களும் மிகவும் துல்லியமாகத் திட்டமிடப்பட்டு நிர்ணயிக்கப்பட்டிருந்தன.

புலிகளின் தலைமைக்குப் பாதுகாப்புப் போர்முறை தெரியாதென வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களிடம் அவர்கள் வெளிப்படையாகவே அதிர்ச்சிகொள்ளும் வகையில் பரபரப்பற்ற அமைதியான முறையில் இந்தக் கட்சிமாறிய தளபதி தற்புகழ்ச்சியுடன் கூறிமகிழ்ந்தார். அங்கே நிழற்படக் கருவிகள் நிழற்படங்களை எடுத்தவண்ணம் இருக்க ஊடகவியலாளர்களுடன் உரையாடிக்கொண்டே தோடம்பழச்சாற்றை உறிஞ்சிக்குடித்துக்கொண்டும், காலை உணவை அருந்திக்கொண்டுமே வன்னியின் இராணுவ மேலாதிக்கம்பற்றி எவ்வித படபடப்பும், குழப்பமும், அச்சமும் இல்லாது இதனை வெளியிட்டார். பெரிய வெள்ளிக்கிழமைப் பதிப்பில் `ஐ லண்ட்` பத்திரிகை இவருடனான நீண்டதொரு செவ்வியைப் பிரசுரித்தவேளையில் வாகரைப் பகுதியின் வடக்குப் பகுதிக்கு அப்பாலில் இருந்து கருணாவின் பாதுகாப்பு அடுக்குகள் மீது 120 m.m எறிகணைகள் குண்டுமாரி பொழியபப்பட்டது. இக்குண்டுமாரிப் பொழிவு எவரையும் கொல்வதற்காகப் பொழியப்படவில்லை. மாறாக, கருணாவின் ஆட்களை அதிர்ச்சியூட்டி மலைக்கவைத்து வேறு திசைமுகப் படுத்தவே பொழியப்பட்டது. இந்தப் பொழிவின்போது வாகரை தற்பாதுகாப்பிற்குப்

பொறுப்பாய் இருந்த கருணாவின் மூத்த சகோதரன் றெஜியின் கட்டளை மையம் புலிகளின் விசேட படையணிகளால் கைப்பற்றப்பட்டது. கதிரவெளியில் தனது தற்காலிக இருப்பிடத்தில் இருந்த றெஜி, வினோதன், விசாலகன், அன்பரசி படைப்பிரிவுகள் எல்லாம் அமைதியாகிவிட்டதை அறிந்தார். உடனே அவர் குண்டதிர்ச்சியால் வெருட்சிகொண்டு ஓட்டம்பிடித்தார். குண்டுமாரி நிற்பதற்கு முன்னர் புலிகளின் விசேட படைப்பிரிவுகள் இந்தக் கட்டளை மையங்களை அதிசயிக்கும் விதத்தில் அவற்றை செயலற்றவையாக்கிவிட்டுத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். அன்பரசி பெண்கள் படையணியைச் சேர்ந்த பெண் தளபதி சாவித்திரியும் வினோதன் படையணியைச் சேர்ந்த பாரதிராஜும் படுகாயமுற்றனர். இன்னுமொரு விசேட படையணி சமர் நடைபெற்றுக்கொண்டிருந்த இடத்திற்கு வெகு தொலைவில் ஜெயம் என்பவர் பயணம் செய்த வாகனத்தைப் பதுங்கியிருந்து தாக்கியழித்தது. கருணாவினால் கதிரவெளியில் உருவாக்கப்பட்ட முதிர்வுறாத, பயிற்சியற்ற கடற்புலிப் பிரிவின் தலைவரே இந்த ஜெயம். ஜெயசிக்குறு படையெடுப்பு நகர்வை மேற்கொண்டபோது புலிகளின் மிகச் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலாற்படை அமைப்பே ஜெயந்தன் படைப்பிரிவாகும். ஜெயந்தன் படைப்பிரிவால் கருணாவின் படைகள் முடக்கப்பட்டன. சனிக்கிழமை காலை கருணாவிற்கெதிரான புலிகளின் மட்டக்களப்பு அரசியல் பிரிவுத் தலைவர்கள் வன்னிக்குச் சென்றனர். ஒலிபெருக்கி மூலம் கருணாவின் படையணியைச் சேர்ந்தவர்களைக் கடற்கரைக்கு அண்மையில் உள்ள குறிப்பிட்ட சில இடங்களில் கூடுமாறு அறிவிக்கப்பட்டது. நண்பகல் மட்டும் 300 இற்கும் அதிகமானவர்கள் தங்கள் ஆயுதங்களுடன் சரணடைந்தனர். இந்நடவடிக்கைகள் அனைத்தையும் நடத்தியவர் தம்பிராஜா ரமேஸ். இவர் கருணாவின் முன்நாள் உப தளபதியாவார். இவ்வாரம் இவர் கேணல் என்ற உயர் நிலைக்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை ஜெயந்தன் அணியின் முன்னேற்றத்தைத் தடுக்குமுகமாக ஜிம்கெலி தாத்தாவினதும் றொபேட்டினதும் தலைமைகளில் துணைப் படைப்பிரிவுகளைக் கருணா அனுப்பிவைத்தார். வாகரையிலுள்ள கருணாவின் படைகளின் விநியோகப் பாதைகளைத் துண்டிக்கும் முகமாகப் புலிகளின் விசேட படையணிகள் சனிக்கிழமை இரவு பிரதான இடங்களில் தாக்குதல்களை நடாத்தின. பகல்வேளையில் புலிகளின் தேசியப் புலனாய்வு நிலையத்தில்

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

ஈழமுரசு

POOBALAM WEEKLY

# இழுபடும் சுதந்திரக் கூட்டமைப்பு

சமதாதானத்தின் மீதான தமது ஆவலை கடந்த தேர்தலில் அனைத்துத் தமிழ் மக்களும் மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் சிங்கள தேசத்திற்கும் - சர்வதேசத்திற்கும் வலியுறுத்திக் கூறிவிட்டார்கள். ஆனால், சிங்கள தேசம் இதுவரை குழம்பிப் போயே இருக்கின்றது. சிங்கள மக்கள் அளித்த வாக்கு, சமாதானத்திற்காகவா போருக்காகவா என்பதில் பெரும்பான்மைக் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள குழப்பத்திற்கும் இன்னும் தெளிவு ஏற்படவில்லை.

இந்நிலையில் பலமற்ற ஆட்சியில் அமர்ந்துள்ள கூட்டணிக் கட்சிகளான ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் நாளுக்கு நாள் விரிசல்கள் விரிவடைந்து செல்கின்றன. கண்டி ஜனாதிபதி மாளிகையில் மூன்று தினங்களாக ஜே.வி.பி.க்கும் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையில் இடம்பெற்ற அமைச்சுக்கள் பகிர்வு தொடர்பான பேச்சுக்கள் முறுகல் நிலைகளை தோற்றுவித்து அவர்களின் 'சுதந்திரக் கூட்டமைப்பு'க்குள் விரிசல்களை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

பிரதமர் பதவி மஹ்ந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டமை தொடர்பாக ஜே.வி.பிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் உருவாகிய முறுகல் நிலை இப்பொழுது அமைச்சுப் பதவிகளில், குறிப்பாக மகாவலி அபிவிருத்தி அமைச்சு தமக்கே வழங்கப்படவேண்டுமென ஜே.வி.பியினர் அடம்பிடிப்பதால் மோசமடைந்து உச்சத்திற்கு சென்றுள்ளது.

அமைச்சுப் பதவிகள் பற்றிப் புரிந்துணர்வுடன் பேசித் தீர்வு காணலாம் என்று கடந்த 16ம் திகதி சந்திரிகா ஜே.வி.பியின் முக்கியஸ்தர்களைக் கண்டி ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்திருந்தார். அழைப்பை ஏற்று ரில்வின் சில்வா, விமல் வீரவன்ஸ, நந்தன குணதிலக, அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் சுமார் இரண்டு மணித்தியாலங்களாக சந்திரிகாவுடன் பேசினர். இந்தச் சந்திப்பின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ, அனுர பண்டாரநாயக்க ஆகியோர் உட்பட பல முக்கியஸ்தர்கள் உடன் இருந்தனர். முக்கிய அமைச்சுக்களைப் பகிர்ந்துகொள்வது பற்றியே பேச்சுக்கள் இடம்பெற்றன. ஆனால், மகாவலி அமைச்சு தமக்கே ஒதுக்கப்படவேண்டும் என்பதில் ஜே.வி.பியினர் விடாப்பிடியாக நின்றனர். மகாவலி அமைச்சை எக்காரணம் கொண்டும் வழங்க இயலாதெனவும், 30 ஆண்டுகளாக இந்த அமைச்சு தனி அமைச்சுப் பிரிவாகவே இயங்கிவருவதால் அதனை ஜே.வி.பியிடம் ஒப்படைக்க முடியாதெனவும் சந்திரிகா தெரிவித்துவிட்டார்.

இதனை அடுத்து 17ம் திகதி மாலையில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற இரண்டாவது சந்திப்பில் பிரதமர் ராஜபக்ச, கலாநிதி சரத் அமுனுகம, மங்கள சமரவீர, மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த ஆகியோர் கலந்துகொண்டனர். இப்பேச்சுக்களின்போதும் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. இதனால் எதிர்பார்த்தபடி ஜே.வி.பி அமைச்சர்களின் சத்தியப்பிரமாணமும் கண்டியில் இடம்பெறவில்லை.

கூட்டமைப்புக்கிடையில் அமைச்சுப் பொறுப்புகள் தொடர்பான இழுபறி நிலை மிக மோசமான கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இன்று 19ம் திகதி மூன்றாவதாக இடம்பெற்ற சந்திப்பும் வெற்றியளிக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது. மகாவலி அதிகாரசபை விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லையென ஜே.வி.பி. உறுதியாக உள்ளதால், சுதந்திரக் கூட்டமைப்பு உடையும் வாய்ப்புக்கள் அதிகரித்துவருகின்றது.

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அமைச்சரவை சுமார் கடந்த ஒருமாத காலத்திற்கும் மேலாக கூடாமல் இருந்து வருகிறது. அமைச்சரவை இறுதியாக மார்ச் மாதம் 24ம் திகதி கூடியது. இவ்வாறு அமைச்சரவை நீண்டகாலம் கூடாமல் இருப்பது இலங்கை வரலாற்றில் இதுவே முதற்தடவை எனவும் தெரிவிக்கப்படுகிறது. தேர்தலுக்காக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டபோது, அமைச்சர்கள் தமது பதவிகளை இழந்ததால் அமைச்சுப் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ள அதேசமயம், புதிய அமைச்சர்கள் இன்னமும் பதவியேற்று வர்த்தமானி வெளியிடப்படாதநிலை நீடித்து வருகின்றது.

இந்நிலையில், விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதாகக் கூறிய சந்திரிகா இன்று வரை அது பற்றி எதுவும் பேசுவதற்கு கூட முன்வரவில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயம். இதேவேளை, விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுடன் தொடர்புகளை மேற்கொள்வது சமாதானத்தை பாதிக்கும் என தெரிந்திருந்தும், சந்திரிகாவும் அவரது படைதரப்பும் கருணாவிற்கு பாதுகாப்பு வழங்கி வருகின்ற விடயம் வெளிப்படையாகிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில், எந்த வகையில் சந்திரிகாவும் அவரது கூட்டமைப்பும் சமாதானத்தைக் கொண்டுவரப் போகின்றது என்பது விடையில்லாத ஒரு கேள்வியாகவே உள்ளது.

# தமிழ் மக்களின் போராட்டம் சரியான தடத்தில் செல்வதை கோடிட்டு காட்டிய `கருணாவின் கலக முறியடிப்பு'

கடந்த மார்ச் மாத ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் முன்னாள் மட்டு.அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி, தான் இயக்கத்தில் இருந்து பிரிவதாகவும் அப்பிராந்தியத்தில் தனியான நிர்வாகத்தை நடத்தப் போவதாகவும் அறிவித்தமையானது இயக்கத்தில் இதுவரை ஏற்பட்ட மோசமான பிரச்சினையாக விபரிக்கப்பட்டது. கருணாவின் கலகமானது விடுதலைப் புலிகளை இழிவுபடுத்துபவர்களால் ஆர்வத்துடன் வரவேற்கப்பட்டது. இந் நிகழ்வு இயக்கத்தின் கட்டமைப்புக்கும் பலத்துக்கும் ஏற்பட்ட பாரதுாரமான அடிமட்டுமல்லாமல் அதன் தலைமைத்துவத்திற்கு விடுக்கப்பட்ட உண்மையான சவால் என்று கருதிய அவர்கள் பேருவகை அடைந்தார்கள்.

கருணாவின் வாதத்தால் மேலும் சரியாக சொல்வதென்றால், 5800 ஆயிரம் வீரர்களையும் அவர்களுக்குரிய படைக்கலன்களையும் தான் வைத்திருப்பதாக ஊடகங்களைக் கவரும் விதமாக கருணா கூறிய வாதங்களால், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தென் தமிழீழம் தனியாகப் பிரிந்து செல்வதை ஏற்றுக்கொள்வது அல்லது இருதரப்பிற்கும் அழிவை ஏற்படுத்தும் உள் யுத்தத்தை நடத்துதல் ஆகிய இரண்டில் ஒன்றை தெரிவு செய்ய வேண்டிய, நிலையில் உள்ளவர்போல் அவர்களுக்குத் தோற்றமளித்தார்.

**விடுதலைப் புலிகள் எதிர்கொள்கின்ற மிகப்பெரிய பிரச்சினை என்று கூறப்பட்டது திடீரென்று முடிவிற்கு வந்தமை தமிழர்களின் போராட்டத்திற்கு எதிரானவர்களுக்கு எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் ஒரு கசப்பான ஏமாற்றமாகவே இருக்கின்றது.**

விடுதலைப் புலிகள், இந் நெருக்கடியானது தற்காலிகமானதென்றும் இரத்தக்களரியற்றுத் தீர்க்கப்படும் என்று மீண்டும் மீண்டும் உறுதியளித்தமை தாயகத்திலும் புலம் பெயர்ந்தும் வாழும் தமிழ் சமூகத்தை அமைதிப்படுத்துவதற்கு துாண்டியது. அதேவேளை, இரும்பு போன்ற கட்டுப்பாட்டிற்கு புகழ்பெற்ற இயக்கமானது பிரச்சினையைத் தீர்க்க சக்தியற்று இருக்கின்றதென்ற உணர்வு தவிர்க்க முடியாதபடி வலுப்பெற்றிருந்தது. அநேகமாக இவ்வாறான கருத்து நிலையும் கூட கருணாவை திடங்கொள்ளச் செய்திருந்தது. கருணாவின் கலகமானது பிராந்திய பாரபட்சம், மற்றும் சமாதான விருப்பு போன்ற ஆரவாரமான கோசங்களை முன்வைத்த பொழுதும், உண்மையில் அக்கலகமானது, விடுதலை இயக்கத்தின் மூத்த தளபதி ஒருவர் நடக்கக்கூடாத விதத்தில் நடந்து கொண்டமைக்காக உடனடியாக பதவி நீக்கம் ஒன்றை கருணா எதிர்கொண்ட பொழுதே எழுந்த ஒன்றாகும். கருணா சர்வதேச ஊடகங்களுக்கு தன்னம்பிக்கையுடன் சுயதம்பட்டம் அடித்துக் கொண்டமையும் கிழக்குப் பிராந்தியப் போராளிகளை காட்சிப்படுத்தியமையும் இயக்கத்தின் தலைமைத்துவத்துக்கு விடுக்கப்பட்ட வெளிப்படையான சவாலாக அமைந்தது.

இதுவே பெரிய வெள்ளியன்று ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் தாக்குதல் ஆச்சரியமளித்தமைக்கான காரணமாகும். கிழக்கில் பெரும் சகோதர யுத்தம் ஒன்று நடைபெறும் என்று பெருமகிழ்வுடன் எதிர்வு கூறியவர்களுக்குக்கூட இது ஆச்சரியத்தை அளித்தது. விடுதலைப் புலிகள் நான்கே நாட்களில் கருணா வசமிருந்த சகல பிரதேசங்களையும் மீளக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததுடன் அநேகமாக அனைத்து ஆயுத தளபாடங்களையும் மீட்டுள்ளனர். மேலும், இது பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் மிகக் குறைந்த இழப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் எதிர்கொள்கின்ற மிகப்பெரிய பிரச்சினை என்று கூறப்பட்டது திடீரென்று முடிவிற்கு வந்தமை தமிழர்களின் போராட்டத்திற்கு எதிரானவர்களுக்கு எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் ஒரு கசப்பான ஏமாற்றமாகவே இருக்கின்றது.

விடுதலைப் புலிகள் கடந்த மாதத்தில் `தற்காலிக பிரச்சினை' என்று விபரித்தது போன்றே கருணாவின் கலகமானது முடிவுற்றுள்ளது. அப்படியிருந்த போதிலும் இம் முடிவை தமிழ் சமூகம் ஆறுதலுடனும் மகிழ்வுடனும் வரவேற்றது.

அத்துடன் இவ்வார புத்தாண்டு தினக் கொண்டாட்டங்கள் எதிர்பாராத உற்சாகத்தையும் பெற்றுக் கொண்டன. விடுதலைப் புலிகள் ஏற்கனவே இப்பிராந்தியத்தின் சிவில் நிர்வாகத்தை மீளக்கட்டியமைக்கும் மற்றும் வீரர்களை மீள் ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள். விலக்கப்பட்ட முன்னாள் தளபதி எங்கிருக்கிறார் என்பது நிச்சயமற்றுள்ளது. ஆனால், அவரும் அவருடன் நெருங்கிய தொடர்புடைய சிறிய எண்ணிக்கையானோரும் சிறீலங்கா இராணுவத்திடம் அடைக்கலம் புகுந்திருக்கலாம் என்று பரவலாக நம்பப்படுகின்றது.

கிழக்குப் பிராந்தியத்தின் கட்டுப்பாட்டை மீளக்கொண்டுவந்ததைத் தவிர, வேறு இந்த வார இறுதி நிலவரங்கள் குறித்து, விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாக இன்னும் கருத்துத் தெரிவிக்கவில்லை. ஆனால், கொழும்பு கருணாவுக்கு புகலிடமளித்துள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. கருணாவின் பிரச்சினையை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முயன்றால் சமாதான நடவடிக்கைகளுக்கு சீர்திருத்த முடியாத பாதிப்பு ஏற்படும் என்று விடுதலைப் புலிகள் இருவாரங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தமை மனங்கொள்ளத்தக்கது.

தங்களது பதிலுரிமையாளர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்ட இலங்கைப் பொதுத் தேர்தல் முடியும் வரை தாக்குதலை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் காத்திருந்தார்கள். இது இயக்கமானது தனது சொந்தத் திறமைகள் மீது கொண்டிருந்த நம்பிக்கையை வெளிக்காட்டுவது மட்டுமன்றி, தமிழர் விடுதலைப் போராட்டத்தின் முன்னேற்றம் குறித்து இயக்கம் எவற்றுக்கு முன்னுரிமை வழங்குகின்றது என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றது. கருணாவின் கலகம் தோற்கடிக்கப்பட்டமை சமாதான நடவடிக்கைகளுக்கு இருந்த ஒரு தடைக்கல்லை அகற்றியுள்ளது.

இவ்வாறு செய்யப்பட்டுள்ளமை சமூக நிலையைத் தோற்றுவித்துள்ளது. அதேவேளை, இதுவரைகாலமும் தமிழ் மக்கள் நடத்திய போராட்டத்தைப் பொறுத்தவரை அவர்களின் ஒற்றுமையையும் உறுதிப்பாட்டினையும் கோடிட்டுக் காட்டியுள்ளது.

- தமிழ் கார்டியன்

# மகாத்மாகாந்தி கொலை வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும் இ.கம்நனிஸ்டு கோரிக்கை

மகாத்மாகாந்தி கொலை வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று இ.கம்நனிஸ்டு கோரிக்கை விடுத்து இருக்கிறது.

பாரதீய ஜனதா மூத்த தலைவர்களில் ஒருவரும், துணைப் பிரதமருமான அத்வானி, போபர்ஸ் ஊழல் வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று கூறி வருகிறார்.

அதற்கு பதில் அளிக்கும் விதத்தில் மகாத்மாகாந்தியின் கொலை வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று இ.கம் நனிஸ்டு வற்புறுத்தி இருக்கிறது.

இதுபற்றி இ.கம்நனிஸ்டு கட்சியின் உயர்மட்ட குழு உறுப்பினர் சீதாராம் யச்சூரி நிருபர்களிடம் கூறியதாவது:_

"மகாத்மாகாந்தியின் கொலை-க்கும் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்களுக்கும் தொடர்பு இருப்பதற்கான பல ஆதாரங்கள் சில ஆண்டுகளாக வெளியாகிக் கொண்டு இருக்கின்றன.


நாதுராம் கோட்சேயின் இளைய சகோதரர் கோபால் கோட்சே 10 ஆண்டுகளுக்கு முன்பு, ஒருமாத இதழுக்கு பேட்டி அளித்து இருக்கிறார். மகாத்மா காந்தி கொலையில் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்களுக்கு தொடர்பு இருப்பதாக அதில் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

எனவே மகாத்மா காந்தி கொலை வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும்.

இவ்வாறு இ.கம்நனிஸ்டு உயர் மட்டக்குழு உறுப்பினர் சீதாராம் யச்சூரி கூறினார்.

கோபால்கோட்சே பேட்டி வெளியான, இதழையும் நிருபர்களிடம், அவர் வினியோகம் செய்தார்.

# நடிகை சவுந்தர்யா மரணம்



பிரபல நடிகை சவுந்தர்யா(30) உலங்குவானூர்தி விபத்தில் பலியானார். தேர்தல் பிரச்சாரத்திற்காக அவர் சென்றபோது இச்சம்பவம் நடந்தது. அவர் சென்ற உலங்குவானூர்தி புறப்பட்டுச் சென்ற சில நிமிடங்களில் தீப்பற்றியது. பின்னர் கீழே விழுந்து நொருங்கியது. இதில் பலியானவர்களை அடையாளம் காண முடியாத அளவிற்கு அவர்களது உடல் கருகியுள்ளது என்று கர்நாடக பொலிஸ் டிஜிபி மதியால் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

சமீபத்தில் அவர் பாஜகவில் சேர்ந்தார். அக்கட்சியின் பிரச்சாரத்திற்காக அவர் பெங்களூர் அருகேயுள்ள ஜக்கூரிலிருந்து ஆந்திர மாநிலம் கரீம்நகருக்கு புறப்பட்டுச் சென்ற உலங்குவானூர்தி கடந்த 17 காலை விபத்திற்குள்ளாகியது. இதில் சவுந்தர்யாவும் அவருடன் இருந்த மேலும் 3 பேர் பலியாகினர். அவர்களில் சவுந்தர்யாவின் சகோதர் அமர்நாத்தும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகவலை கர்நாடக பாஜக தலைவர் அனந்த் குமார் தெரிவித்தார்.



நடிகை சவுந்தர்யா `பொன்னுமணி` என்னும் படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் அறிமுகமானார். இவர் ரஜினியுடன் அருணாச்சலம். படையப்பா ஆகிய படங்களிலும், கமல்ஹாசனுடன் காதலா காதலா, ஆகியவை உட்பட ஏராளமான படங்களில் நடித்துள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் சுமார் நூறுக்கும்



மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

`துவிபா` என்னும் கன்னடப் படத்தில் சிறப்பாக நடித்ததற்காக சவுந்தர்யாவுக்கு தேசிய விருது கிடைத்தது. இவருக்கு கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் திருமணம் நடந்தது குறிப்பிடத்தக்கது.

# வாஜ்பாய்க்கு எதிரான போட்டியிலிருந்து விலகினார் ஜேத்மலானி

உத்தரப் பிரதேசத்தின் லக்னௌ தொகுதியில் பிரதமர் வாஜ்பாயை எதிர்த்துப் போட்டியிடப் போவதாக அறிவித்து இருந்த முதுபெரும் வழக்கறிஞர் ராம் ஜேத்மலானி, தான் போட்டியிடப் போவதில்லை என்று கடந்த 16ம் திகதி அறிவித்துள்ளார்.

தனக்கு எதிரான போட்டியிலிருந்து விலகிக்கொள்ளுமாறு ஜேத்மலானிக்கு பிரதமர் வாஜ்பாய் கடந்த 14ம் திகதி கோரிக்கை விடுத்திருந்தார். அதையடுத்து மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார் ஜேத்மலானி. ஆனால், அவரது அறிக்கையில் பிரதமரது வேண்டுகோள் குறித்து ஏதும் குறிப்பிடவில்லை.

எனினும், ஜம்முவில் பிரதமர் வெளியிட்ட அந்த அறிக்கையில் கூறியிருக்கும் வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றுவார் என நம்புவதாகத் தெரிவித்துள்ளார் ஜேத்மலானி.

ராம் ஜேத்மலானியின் மகன் தற்போது லண்டனில் சிகிச்சை பெற்றுவருகிறார். அவரைப் பார்ப்பதற்காக அவசரமாக அவர் லண்டனுக்குச் சென்றுள்ளார். அவர் போட்டியிலிருந்து விலகுவது தொடர்பான அறிக்கையை தில்லியில் உள்ள அவரது அலுவலகம் வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

# ரஜனியும் அரசியலும்

ஒருவழியாக மனதை கொஞ்சம் திறந்துள்ளார் ரஜினிகாந்த். பாஜகவுக்கு தனது ஆதரவை `பகிரங்கமாகவே` தெரிவித்துள்ளார். ஆனால் அவரது பேச்சு முழுக்கவே பல தடுமாற்றங்கள், குழப்பங்கள், முரண்பாடுகளைக் காண முடிகிறது.

தனது சினமாவுக்கும் ரசிகர்களுக்கும் ஏற்பட்ட நஷ்டம் காரணமாகவே பாமகவை எதிர்க்கிறார். மற்றபடி அதில் பொது நலன் என்ற விஷயம் ஏதும் கடுகளவும் இல்லை. பா.ஜ.க.வை ஆதரித்துள்ளதன் மூலம் அதனுடன் இருக்கும் அதிமுகவுக்கும் மறைமுக ஆதரவையே வழங்கியிருக்கிறார் ரஜினி. இதனால் வலியப் போய் தான் கொடுத்த ஆதரவை அதிமுக உதாசீனப்படுத்துவது குறித்து ரஜினி கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை.

அதே நேரத்தில் ஜெயலலிதாவுக்கு சமாதானக் கொடியையும் பறக்கவிட முயல்கிறார் ரஜினி. ராமதாஸ் மீது கொலை முயற்சி வழக்கு போட்டதற்காக தமிழக அரசை (முதல்வர் ஜெயலலிதாவை) வாயார புகழ்ந்திருக்கிறார் ரஜினி.

ரஜினி என்றாலே ஜெயலலிதா எதிர்ப்புதான் தமிழக மக்களுக்கும், ரஜினிகாந்தை அறிந்தவர்களுக்கும் நினைவுக்கு வரும். அப்படிப்பட்ட ரஜினிகாந்த், தமிழகத்தில் ஜெயலலிதாவை (தேசிய ஜனநாயகக் கூட்டணியை) ஆதரிக்கச் சொன்னால் அது தமிழக மத்தியில் எந்த அளவுக்கு எடுபடும் என்று புரியவில்லை.


அதே போல இருமுறை ஆதரவு தந்த திமுகவுக்கு இந்தமுறை ஆதரவும் இல்லை, எதிரப்பும் இல்லை என்ற நிலையை எடுத்திருக்கிறார். திமுக தரப்பில் ப. சிதம்பரம் மூலமாக ரஜினியிடம் சமரசம் பேசப்பட்டு அதில் கொஞ்சம் வெற்றி காணப்பட்டுள்ளதையே அவரது அறிக்கை நிரூபிக்கிறது.

தனக்கு இத்தனை நெருக்குதல்கள், கட்டாயங்கள் ஏற்பட்ட பின்னரும் கூட தெளிவான, உறுதியான முடிவு எடுக்க முடியாமல் ரஜினி தடுமாறுவதையே அவரது இன்றைய நிலைகாட்டுகிறது.

நான் பாஜகவுக்கு ஓட்டுப் போடப் போகிறேன், நீங்கள் அதே போல சிந்தித்து வாக்களியுங்கள் என்று ரஜினி கூறியுள்ளதை, கொந்தளித்துப் போயுள்ள அவரது ரசிகர்கள் எந்தளவுக்கு எடுத்துக் கொள்வார்கள் என்று தெரியவில்லை.

மேலும் நிதிகள் இணைப்பு தவிர தமிழர்களுக்கு வேறு பிரச்சினையே கிடையாது என்பதைப் போல, அந்த ஒரு விவகாரத்தை மட்டும் பேசிவிட்டு, தமிழ் நாட்டின் பிற பிரச்சினைகள் குறித்து ரஜினி வாயே திறக்காதது குறிப்பிடத்தக்கது.

பா.ஜ.கவுக்கு ஆதரவாக குரல்



தருவது என்று முடிவு செய்துவிட்டு, அதற்காக அவர் தேடிப்பிடித்துள்ள காரணம் தான் நிதிகள் இணைப்பு என்றே தோன்றுகிறது.

மேலும் முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக தண்ணீர்ப் பிரச்சினையை திமுக பெரிதாக்கி வருவதால், அதை வைத்தே பா.ஜ.கவுக்கு ஓட்டு கேட்கும் ரஜினியின் தந்திரமும் புரிகிறது.

தமிழகத்தில் திராவிடக் கட்சிகளை ஒழிக்கவேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கும் சக்திகளின் கைகளில் ரஜினி மெதுவாக ஆட்பட ஆரம்பித்துவிட்டதையே அவரது அறிக்கை தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

தண்ணீர்ப் பிரச்சினை ஒன்றை மட்டுமே முக்கியமாகக்கொண்டு பாஜகவுக்கு ஓட்டுப்போடப் போவதாக கூறும் ரஜினிகாந்த், பாபர் மசூதி இடிப்பை ஏற்கிறாரா? அயோத்தியின் ராமர் கோவிலை கட்டியே தீருவோம் என்ற பா.ஜ.கவின் நிலையை ஆதரிக்கிறாரா? பதில் இல்லை.

மொத்தத்தில் ரஜினியின் அறிக்கை வழக்கம் போல வள... வளா...கொழ... கொழாவாகத்தான் உள்ளது.

தங்களது தலைவரின் அரசியல் வருகையை எதிர்பார்த்த பல வருடங்களாக `தேவுடு` காத்துக் கொண்டிருந்த ரசிகர்கள் மத்தியில், பாமகவின் பிரச்சினையை வைத்து இந்த முறையாவது உறுதியான, தெளிவான முடிவை எடுப்பார் என்று எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால் வழக்கம்போல் இப்போதும் நழுவி விட்டார் ரஜினி.

அதே நேரத்தில் வன்னிய சமூக மக்களே, நான் ராமதாசுக்கு ஏதாவது கெடுதல் செய்துள்ளேனா என்று மிகவும் உருக்கமாக ரஜினி கேட்டுள்ளார். இது மட்டுமே ஓரளவுக்கு ரஜினிக்கு உதவலாம். அவரது இந்தக் கேள்வி வட மாவட்டங்களில் அவருக்கு ஓரளவு அனுதாபத்தைத் தேடித் தரலாம்.

# நீர்வேலி நபர் தமிழகத்தில் படுகொலை!

நீர்வேலியில் இருந்து 1996 ஆம் ஆண்டு தமிழகம் சென்று அங்கு வாழ்ந்து வந்த இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு சவுக்குமரக் காட்டில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் முத்துக் காடு என்னும் இடத்தில் கடை நடத்தி வந்த தங்கராசா தவசுதன் (வயது 30) என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

கடந்த 14ஆம் திகதி இரவு 8 மணியளவில் பிரஸ்தாப இளைஞன் தனது கடையில் வியாபாரத்தில் ஈடு பட்டுக்கொண்டிருந்தார். அச்சமயம் அங்கு வந்த குழு ஒன்று அவரைக் கடத்தி சவுக்குமரக் காட்டுக்குக் கொண்டுசென்றது.

அங்கு வைத்து அவரை அடித்துத் தாக்கிய அக்குழு அவருக்கு நஞ்சைப் பருக்கியுள்ளது. மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு மரணமானார்.

# கதிர்காமரும் அமைச்சர் சரத் அமுனுகமவும் ஜே.வி.பியின் உறுப்பினர்களை சந்தித்ததன் பின்னணி என்ன?

ஆட்சியமைப்பதற்கு பெரும்பான்மைப்பலம் இன்னமும் பெறமுடியாத நிலையில் ஏனைய சிறிய கட்சிகளோடு பேரம் பேசிக்கொண்டிருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிதியுதவி வழங்கும் நாடுகளின் உதவியையும் தற்போது நாடி நிற்கின்றது. ஆட்சியமைத்ததும் தேர்தல் பிரசாரங்களில் சொல்லப்பட்டது போன்று மக்களுக்கான நிவாரணப் பணிகளிலும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சம்பள உயர்வுகளையும் வழங்குவதற்கும் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. மத்திய வங்கியின் திறைசேரியில் பணம் இல்லையென்று கடந்த மூன்று மாதத்திற்கு முன்னதாகவே மத்திய வங்கி தெரிவித்திருந்தது. *(இந்த விடயம் ஏற்கனவே இப்பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டது)* ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவி அமைத்த காலத்திலிருந்து நிதிப்பற்றாக்குறையை எதிர்நோக்கியிருந்தது. அதற்காகவே பேச்சுவார்த்தையை ஆரம்பித்து நிதியுதவி வழங்கும் நாடுகளிடமிருந்து நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதத்தைப் பெற்றிருந்தது. விடுதலைப் புலிகளுடன் சமாதானப்பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டால் மாத்திரமே நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கு நிதியுதவியை வழங்க முடியும் என உதவி வழங்கும் நாடுகள் கடுமையான எச்சரிக்கையை விடுத்திருந்தன.

இதன் காரணமாகவே விரும்பியோ விரும்பாமலோ ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை நோர்வேயின் ஏற்பாட்டுடன் ஆரம்பித்தது. இரண்டு ஆண்டுகள் மாத்திரமே பதவி வகித்த இந்த அரசாங்கம் தன்னுடைய பதவிக்காலம் முழுவதிலுமே பேச்சுவார்த்தை நடத்தியது. பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டதா, இல்லையா என்பதற்கும் அப்பால், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறியே பெருமளவு நிதியுதவியைப் பெற்றுக்கொண்டது. ஆனாலும் அந்தநிதிகள் அரசாங்கம் எதிர்பார்த்தது போன்று நேரடியாக கைகளுக்கு கிடைக்கவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தையில் அவ்வப்போது ஏற்பட்ட முரண்பாடுகளும் காரணமாக இருந்தது. அதேவேளை அப்போது எதிர்க்கட்சியாக இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை விமர்சித்ததோடு உதவி வழங்கும் நாடுகளையும் தூஷித்துத் கொண்டிருந்தார்கள். குறிப்பாக ஜே.வி.பி சர்வதேச நாணயநிதியத்தையும் உலகவங்கியையும் விடுதலைப் புலிகளின் முகவர்கள் என்றும் நோர்வேயை புலிகளின் தரகர் என்றும் விமர்சித்தது. அது மட்டுமல்லாது நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்ற சிறீலங்காவிற்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கலந்து கொண்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து கண்டனம் தெரிவித்து.

அந்த மாநாட்டில் கிடைக்கப்பெற்ற நிதிகள் அனைத்தும் புலிகளிடம் போய்ச்சேர்ந்து விட்டதாகவும் நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து விவாதம் நடத்தியிருந்தது. சர்வதேச நாணய நிதியத்திடமும் உலகவங்கியிடமும் பணம் பெறுவதற்கு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய அவசியம் இல்லை என்று அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ஷ அந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் அரசாங்கத்தைக் கண்டித்திருந்தார். (மகிந்தராஜபக்ஷ தற்போது பிரதமர்) ஜப்பானில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டையும் கண்டித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தியிருந்தார்கள். புலிகளோடு பேசுவதாக அரசாங்கம் கூறியபோதும் எந்தவிதமான நிதியும் இங்கு வந்து சேரவில்லை என்றும் அரசாங்கம் உள்ளூர் உற்பத்திகளைக் குறைத்து வெளிநாட்டு முதலீடுகளை எதிர்பார்த்துக்கொண்டிருப்பது இந்த நாட்டிற்கு சாபக்கேடானது என்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம அப்போது நாடாளுமன்றத்தில் பேசியிருந்தார். *(தற்போது அவர் நிதியமைச்சர்)*

இந்த சரத் அமுனுகமவும் இந்த மகிந்த ராஜபக்ஷவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரில் ஜே.வி.பியையும் இணைத்து தற்போது ஆட்சியமைத்துள்ள நிலையில், நிதியுதவி வழங்கும் நாடுகளின் உதவியையும் புலிகளுடன் பேசுவோம் என்றும் கூறுவதன் அர்த்தம் என்ன? வெளிநாட்டு உதவிகளின் மூலமே சிறீலங்காவை வளப்படுத்த முடியும் என தென்பகுதி அரசியல் தலைமைகள் எதிர்பார்ப்பது வழமை. ஆனால் எதிர்க்கட்சி ஆசனத்தில் இருக்கும் போது மட்டும் வெளிநாடுகளின் முதலீடுகளை இவர்கள் காரசாரமாக விமர்சிக்கின்றனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி பலதடவை ஆட்சியமைத்திருந்தது. சோசலிசமே இக்கட்சியின் கொள்கையாக இருந்தாலும் திறந்த பொருளாதார கொள்கையை இவர்கள் பின்பற்றியதன் மூலமே தமது அரசாங்கத்தை காலத்திற்கு காலம் தக்கவைத்து வந்தார்கள். ஆனால் ஜே.வி.பியைப் பொறுத்த வரை தற்போதுதான் முதன்முறையாக ஆட்சியைப் பிடித்திருக்கின்றது. இதுவரை காலமும் உள்ளூர் தேசிய பொருளாதாரம் மாக்ஸிசம் என்றெல்லாம் கதைவிட்டவர்கள் இன்று தமது போக்கை மாற்றவேண்டிய நிலைக்கு வந்திருக்கின்றார்கள். (அவ்வாறு மாற்றுவார்களா என்பதும் சந்தேகமாகவே உள்ளது)

> **ஜே.வி.பியைப் பொறுத்த வரை தற்போதுதான் முதன்முறையாக ஆட்சியைப் பிடித்திருக்கின்றது. இதுவரை காலமும் உள்ளூர் தேசிய பொருளாதாரம் மாக்ஸிசம் என்றெல்லாம் கதைவிட்டவர்கள் இன்று தமது போக்கை மாற்றவேண்டிய நிலைக்கு வந்திருக்கின்றார்கள்.**

எது எப்படியாக இருந்த போதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எந்த முகத்தோடு உதவி வழங்கும் நாடுகளிடம் நிதியுதவியை எதிர்பார்க்க முடியும் என்ற கேள்வி எழுகின்றது. புலிகளுடான பேச்சுவார்த்தைக்கு நோர்வேயின் மத்தியஸ்த்தம் தேவையில்லை என்று விமர்சித்தவர்கள் இன்று தாம் ஆட்சிமைத்ததும் இந்தியா உதவி செய்யவேண்டும் என்று வேண்டுகோள் விடுப்பதுடன் நோர்வேயின் சமாதானப்பணியை தொடருவதற்கான ஏற்பாடுகள் எதனையும் செய்ததாக இல்லை. இந்நிலையில் சிறீலங்காவிற்கு வழங்குவதற்காக உதவி வழங்கும் நாடுகள் ஏற்கனவே தீர்மானித்த நிதியை (ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் போது) தொடர்ந்து வழங்குவதற்கு தயாராக இருப்பதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம கூறியிருக்கின்றார். வேடிக்கை என்னவென்றால் 2002 நவம்பர் மாதம் ஒஸ்லோவிலும் 2003 யூன் மாதம் டோக்கியோவிலும் நடைபெற்ற நிதியுதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை ஏற்பாடு செய்தது நோர்வே. அவர்களின் முயற்சியினால் தான் சிறீலங்கா அரசாங்கத்திற்கு 45 பில்லியன் நிதி கிடைக்கப்பெற்றது. ஆனால் சரத் அமுனுகம அந்த நிதியை நம்பித்தான் தமது அரசாங்கத்தை கொண்டு நடத்துவதற்கு தீர்மானித்திருக்கின்றார் போல் தெரிகின்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் அந்த 45 பில்லியன் நிதியை சிறீலங்காவிற்கு வெளிநாடுகள் வழங்கிய சலுகையாக சித்தரித்து வருகின்றார். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் காலத்தில் அந்த நிதி கிடைத்தது என்பதைவிட விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அதுவும் சமஷ்டி அரசியல் அமைப்பு முறைக்கு இணங்கிவிட்டார்கள் என்ற ஒரேயொரு காரணத்திற்காகவே வெளிநாடுகள் அந்தளவு தொகையான நிதியையும் அப்போது வழங்கியிருந்தார்கள். மகிந்த ராஜபக்ஷவிற்கும் சரத் அமுனுகமவிற்கும் இது தெரியாதது அல்ல. ஏன் ஜே.வி.பிக்கும் அது தெரியும். ஆனால் சிங்கள மக்களிற்கு அவற்றையெல்லாம் கூறாது தமது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கூட்டமைப்பிற்கு கிடைத்த வெற்றியாக காண்பித்து பெருமை சேர்க்கின்றார்கள் என்றே கூறலாம். ஆட்சியமைப்பு இழுபறிக்கு மத்தியிலும் கடந்த நான்கு நாட்களில் அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜப்பான் மற்றும் சர்வதேச நாணயநிதியம், உலகவங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளை சரத் அமுனுகமவும் மங்கள சமரவீரவும் அனுரா பண்டாரநாயக்காவும் சந்தித்து நிதியுதவியை வழங்குமாறு கோரியிருக்கின்றார்கள். (கெஞ்சியிருக்கின்றார்கள்) புலிகளோடு பேசுவோம் என்றும் பொய்யான வாக்குறுதிகளை கொடுத்திருக்கின்றார்கள்.

இவ்வாறு வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் உலகவங்கிப் பிரதிநிதிகளையும் இவர்கள் சந்தித்தது ஜே.வி.பிக்குத் தெரியாது. அவ்வாறு சந்தித்து புலிகளோடு பேசுவோம். நிதியுதவியைத் தாருங்கள் என அவர்கள் கேட்டதை பின்னர் அறிந்து கொண்ட ஜே.வி.பி அது தொடர்பாக ஜனாதிபதியோடு முரண்பட்டு நிற்கின்றது. அதனை விளங்கப்படுத்துவதற்காகவே அமைச்சர் கதிர்காமரும் அமைச்சர் சரத் அமுனுகமவும் ஜே.வி.பியின் உறுப்பினர்களான விமல் வீரவன்சவையும் ரில்வின் சில்வாவையும் சந்தித்திருக்கின்றனர். நிதியுதவியைப் பெற்றுக்கொண்டாலும் புலிகளோடு பேசுவதற்கு ஐரோப்பிய நாடுகளின் உதவி பெறக்கூடாது என விமல் வீரவன்ச ஜனாதிபதிக்கு அழுத்தம் திருத்தமாக கூறியிருக்கின்றார். தற்போது ஆட்சியமைப்பதற்கு ஏற்பட்டுள்ள இழுபறிக்கு இதுவும் ஒரு காரணம். ஆனாலும் ஜே.வி.பியின் அந்தக் கருத்துக்களை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு வெளிநாட்டு உதவியைப் பெற்றுக்கொள்வதில் ஜனாதிபதி முனைப்போடு செயற்படுகின்றார். நிபந்தனையின்றி புலிகளோடு பேசுவோம் என்று ஜனாதிபதி பத்திரிகைகளில் தினம் ஓர் அறிக்கை விடுவது அதனையே வெளிப்படுத்திக்காட்டுகின்றது. எவ்வாறாயினும் புலிகளோடு பேச்சு ஆரம்பிக்காமல் கடந்த வருடம் தீர்மானிக்கப்பட்ட நிதியை வழங்கமுடியாது என சர்வதேச நாணய நிதியம் கூறியிருக்கின்றது. மனிதாபிமான உதவிகள் சிலவற்றை மாத்திரமே செய்யமுடியும் என்று உலகவங்கி கூறியிருக்கின்றது. எனவே நிதிப்பிரச்சினை என்பது சிறீலங்கா அரசாங்கத்திற்கு தொடர்கதையாகவே இருக்கப் போகின்றது.

மறுபுறத்தில் ஐக்கிய தேசிய முன்னணியின் சில உறுப்பினர்கள் சிலர் தமது அரசாங்கத்திற்கு கடந்த வருடமும் அதற்கு முதல் வருடமும் கிடைக்கப்பெற்ற நிதிகள் அனைத்தும் புலிகளோடு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் காரணமாகவே என்பதை சிங்கள மக்களுக்கு கூறாது, அது தமது சொந்த முயற்சியின் காரணமாகவே கிடைத்ததாக தற்போது பத்திரிகைகளில் அறிக்கைவிட ஆரம்பித்துள்ளனர். புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதினால் மாத்திரம் பெருமளவு நிதியுதவியைப் பெற்றுவிட முடியாது என்று முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட கூறியிருக்கின்றார். ஒருவகையில் கூறுவதாக இருந்தால் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தோல்வியடைந்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று புலிகளுடான சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக ரணில் விக்கிரமசிங்காவும் பேராசிரியர் பீரிசும் மாத்திரமே நாடாளுமன்றத்திலோ மக்கள் மத்தியிலோ விளக்கிக்கூறி வந்தார்கள். சமஷ்டி முறையின் அவசியத்தையும் எடுத்துக்கூறினார்கள். ஆனால் ஏனைய அமைச்சர்கள் சமாதானப் பேச்சுவார்த்தை பற்றி சிங்கள மக்கள் மத்தியில் ஒருவார்த்தைகூட பேசியது கிடையாது. இரண்டாவது அமைச்சர்கள் சிலர் வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு வழங்கப்பட்ட பெருமளவு நிதியை சூறையாடியிருந்தனர்.

தற்போதும் தோல்விக்கான இந்தக் காரணங்களை அவர்கள் உணர்ந்துகொண்டதாக தெரியவில்லை. இந்நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதேபோன்ற ஒரு பல்லவியை இப்போது பாட ஆரம்பித்திருக்கின்றது. ஆக மொத்தம் வெளிநாட்டு நிதியுதவியைப் பெற்று தமது அரசாங்கத்தை அமைத்து தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் பிழைத்துக்கொள்ளும் வழிகளை மாத்திரமே தென்பகுதி அரசியல் தலைமைகள் காலம் காலமாக பின்பற்றி வருகின்றன என்பது கண்கூடு. அற்பசொற்ப அபிவிருத்திகளை தென்பகுதி சிங்கள மக்கள் அனுபவித்துக் கொண்டாலும் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் உள்ளதையும் இழந்துபோகும் நிலையில் தமது கடின உழைப்பினால் தமது வாழ்க்கையை நகர்த்திச் செல்கின்றனர் எனலாம். இதனை சர்வதேச சமூகம் சரியான முறையில் உணர்ந்துகொள்ளும் நாள் எப்போது?

– கொழும்பிலிருந்து

**ஊரோடி**

EELAVAR The Winners

10வது ஆண்டில் கால் பதித்து நிற்கும் (1994-2004)
ஈழவர் விளையாட்டுக் கழகம் பிரான்ஸ்
நடாத்தும்

# மாபெரும்
# கலைமாலை–2004

**காலம்: 2 Mai 2004 ஞாயிறு மாலை 15h00 மணிக்கு**
**நிகழ்ச்சிகள்:** * இசை (ஐரோப்பாவின் பிரபல பாடகர்கள்)
* மேற்கத்தேய நடனம் * பரத நாட்டியம்
* நகைச்சுவை நாடகம் (ஐரோப்பிய பிரபலங்கள்)

**இன்னும் பல....**

**இடம்: Espacereuilly**
**21, Rue A.Henard, 75012 Paris**
**M°: Montgallet (L-N°-8)**



# ஜதீஸ்வரா இசைக்குழு

உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கு
இசைமழை பொழிந்து
சிறப்பித்திட என்றென்றும்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
அருமை – 0664866681
மாறன் – 0664447207
குகானந்தன் – 0664819995

Pub-Fr-506



S.K. Rajan Jewellers

**24, Rue Perdonnet, 75010 Paris.**

தொடர்புகளுக்கு: Tel: 0142096821 / Port: 0614831536
உரிமையாளர்: S.RAJAN - M°: La Chapelle / Gard du Nord.

உங்கள் மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான நகைகளை குறித்த தவணையில், அசல் 22K இல் நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கை ஸ்தாபனம்

# எஸ்.கே.ராஜன் ஜுவலர்ஸ்




# அம்மா நலமா?

நிதர்சனம் நிறுவனத்தின் சிறப்பு வெளியீடு.
ந.கேசவராஜனின் தயாரிப்பில் உருவான முழுநீளத்திரைப்படம்.

பிரான்ஸ் திரையரங்கில் எதிர்வரும் 25, 26 தினங்களில்.

**25.04.2004 ஞாயிறு இரவு 19h30 மணி**
**26.04.2004 திங்கள் இரவு 19h30 மணி**

**இடம்: TÉATRE TRIANOR**
**80, Bd. Rochechouart**
**75018 Paris.**
**Métro: Anvers**

மேலதிக தொடர்புகளிற்கு: 01 43 58 11 42




வெளிவந்துவிட்டது

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை




ஏப்ரல்
2004

துயர்தின்னும்
சுவர்கள் தகர்ந்தன
நிலவின் தோணியில் ஏறி
நீந்திக் கடக்கவும்
ஆகாயம் சொரியும்
அமுதப் பாலை பருகவுமான
கதவுகளும் திறவுண்டன
விடுதலை வெளியோ
நீல நிறமான விளக்குகளை
எல்லோருக்குமாக ஏற்றுகிறது

விடுதலை வேட்கை மிக்க எழுச்சிப் படைப்புக்கள்,
ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசக்குரல்,
போர்க்கால இலக்கியத்தின் யதார்த்தப் பதிவு,
மண்ணின் மணத்தோடு மன உணர்வுகளை
வெளிப்படுத்தும் உன்னத இலக்கியமாக எரிமலை

# மே 1 2004
மேதினப் பேரணி

**அன்பார்ந்த பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களே !**

எம் தேசியத்தலைவரின்
வரிகளை ஏந்த,
தொழிலாளர் தினமதில்
உலகத்தமிழர்
நாம் எல்லோரும் ஓர்
அணியில் நின்று,
எம் தேசியத்
தலைமையை
பலப்படுத்திட,
ஓங்கிக் குரல்
கொடுப்போம்!
வாருங்கள்!!

'ஒடுக்கப்படும் மக்களே,
ஒடுக்குமுறைக்கு
எதிராகப் போராட வேண்டும்
அநீதிக்கு
ஆளாகி நிற்பவர்களே
அநீதியை
ஒழித்துக்கட்ட முன்வரவேண்டும்'

அனைத்துலகத்
தொழிலாளர் நாளில்,
தடைகள் உடைக்கும்
தமிழர் பலத்தை
உலகறியச் செய்யும்
மாபெரும்
மேதினப் பேரணி !

நேரம் : 14h30

ஆரம்பமாகும் இடம் : Place de la république
Métro: République

மேலதிகத் தொடர்புகட்கு : தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்ஸ் : 01 43 58 11 42

21 - 27 ஏப்ரல் 2004

முரசு - இதழ்

வாழ்வு - இலக்கியம் - பண்பாடு

# 'ஆரோக்கிய வழிகாட்டி' ஓர் உடல் நல திசைகாட்டி

திரு. சதா சிறீகாந்தா அவர்களால் எழுதப்பட்டிருக்கும் ஆரோக்கிய வழிகாட்டி என்கின்ற இந்த நூல் புலம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கு ஒரு பொக்கிசமாகும்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை நாம் உணரவில்லையா என்பதை இந்நூல் உணர வைக்கின்றது. இடித்துரைக்கின்றது. எம்மவர்க்கு ஆரோக்கிய வழிகாட்டி என்ற இந்நூல் நல்ல வழிகாட்டி, ஓர் ஊருக்குப் போக ஒழுங்கான வழியைக் காட்டுகின்ற வழிகாட்டிபோல இந்நூல் ஆரோக்கிய வாழ்வுக்கு நல்ல வழிகாட்டுகின்றது.

ஆரோக்கிய வழிகாட்டி ஒரு கதைப்புத்தகம் அல்ல. அது மனித உடல் நலவாழ்வை அடக்கியுள்ளது. மருத்துவரைப் போன்று அறிவுரை கூறி நிற்கின்றது. மனித உடலில் உள்ள உறுப்புக்கள் பற்றியும், அவற்றுக்கு வரும் நோய்கள் பற்றியும், நோய் வராமல் தடுப்பது பற்றியும் இந்நூல் கூறுகின்றது. உடல் ஆலயத்துக்குச் சமன் என்று ஆன்மீகம் சொல்லுகின்றது. அதனை நாம் மறந்துவிட்டோம்.

மனிதனால் மனிதனுக்காக இன்று உலகம் வேகமாக பன்முக வளர்ச்சியடைந்துள்ளது. அந்த மனிதன் தன் உடலில் கவனம் செலுத்துகிறானா என்பது கேள்விக்குறியே. ஐம்புலன்களால் உலகை அனுபவித்திடும் மனிதன் அந்த ஐம்புலன்களையும் தாங்கி நிற்கும் உடலைப்பற்றி அக்கறைப்படுவதில்லை. தான் வாழும் வீட்டை அழகாக சுத்தமாக வைத்திருக்க விரும்பும் மனிதன் தன் உடலுக்குத்தான் அந்த வீடு என்பதை உணரவைக்கின்றது இந்நூல்.

உடலில் உள்ள எல்லா அவையகங்களும் மிக மிக முக்கியமானவையே என்பதைக் கூறும் இந்நூல், அவற்றுக்குத் தேவையான உணவு முறைகளையும், ஊட்டச்சத்து உயிர்ச்சத்து பொருட்களையும் சுட்டிக்காட்டுகின்றது.

...ம் உலகளாவிய உடலியல் நூல் அறிவினைப் பெற்றுக்கொள்ளத் தவறுகிறோம். தயக்கம் காட்டுகிறோம், தாழ்வு மனப்பான்மை கொள்கிறோம். ஊர்வம்பு பேசுவதற்கும் உதவாக்கரை கதைகளைக் கதைப்பதற்கும் நேரம் ஒதுக்கி கதைத்து இரசித்து உருசித்து மகிழும் நாம் நல்லவற்றை, நம்மைச் சொல்லுகின்றவற்றை தேடி எடுத்து சுவைக்க மறுக்கின்றோம், தயங்குகின்றோம். அத்தகைய சூழ்நிலையில் அம்மனப்போக்கை நிராகரித்து ஆரோக்கிய வழிகாட்டும் கலங்கரை விளக்காக இந்நூல் நிமிர்ந்து நிற்கின்றது.

இந்நூல் ஆசிரியர் எம்மக்களுக்கு உடல் நலம் பற்றிய உலகளாவிய அறிவைக் கொடுக்க முயற்சித்து வெற்றி கண்டுள்ளார் என்பதைக் கூறமுடியும்.

இந்த உலகுவாழ் சீவராசிகள் அனைத்தும் ஆண் பெண் சேர்க்கைத் தரவினைக் கொண்டுதான் உயிர்களைப் பிறப்பித்துள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்நிலையில் இருந்து பார்க்கும்போது எம்மவர்கள் தங்கள் சந்ததி விருத்திக்கான தங்கள் பால் உறுப்புப் பற்றிய பூரண அறிவைப் பெற்றுள்ளார்களா என்ற கேள்வி எழச் செய்கின்றது. அதுபற்றி இந்நூல் ஆசிரியர் மிக வெளிப்படையாக எவ்வித தயக்கமுமின்றி, ஆண், பெண் பாலுறுப்புக... பற்றியும், அதன் தேவை பற்றியும் அவற்றை எவ்வாறு சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பது பற்றியும் அக்குவேறு ஆணி வேறாக விபரித்துள்ளார். இனவிருத்தி உறுப்பு பற்றிய மருத்துவ, உயிரியல், உடலியல் பண்புகளை எம்மவர் அறிந்துகொள்ளத் தயங்குவதையும் ஆசிரியர் சாடியுள்ளார். பண்புள்ள அறிவாற்றல் மிக்க சந்ததியை உருவாக்குவதற்குத் தம்பதிகள் என்ன செய்யவேண்டும் என்பதை இதுபற்றிய அத்தியாயத்துக்குள் மிக நாகரீகமாகக் குறிப்பிட்டுள்ளார். எம்மவர்கள் சந்ததி விருத்திக்கான தங்கள் பாலுறுப்புக்கள் பற்றிய கூறும் மருத்துவ இயல்பற்றிய நூல்களை வாங்கிப் படிக்கத் தவறுகிறார்கள். அப்படிப் படிப்பதோ, அது பற்றித் தம்பதிகளாக இருப்பவர்கள் கூட தங்களுக்குள் உரையாடிக்கொள்வதோ ஒழுக்கக் குறைவானது என தப்பான எண்ணக் கருத்தைக் கொண்டுள்ளார்கள். இந்நேரத்தில் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதுபற்றிய நூல்கள் யாழ்ப்பாண பொது நூலகத்திலும் இருக்கின்றன. 1967ம் ஆண்டளவில் இப்புத்தகங்களை நான் வாசித்திருக்கின்றேன். ஒரு பலமான கட்டடத்திற்கு உறுதியான அத்திவாரம் எவ்வளவு முக்கியமோ அது போன்றுதான் ஆரோக்கியமான அறிவாற்றல் நிரம்பிய எதிர்காலச் சந்ததிகளை உருவாக்குவதற்கு, ஒரு குழந்தை உருவாவது எப்படி என்பது பற்றியும், தாய் வயிற்றில் அச்சிசு உருவாகும் காலத்தில் தாயையும் சேயையும் எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்பதையும் எவ்வித விரசமுமின்றி அறிந்திருக்க வேண்டும் என்பதோடு அதுபற்றிய நூல்களை தேடிப் படிக்க வேண்டும் என்பதும் முக்கியமாகும்.

ஒரு மனிதனை இந்நூலில் பார்க்கலாம். அவனது நாடி நரம்புகள் சதைத் தொகுதிகள் எலும்புகள் இருதயம் மூளை என்று எல்லாவற்றையும் பார்க்கலாம். இந்நூலிலுள்ள சொற்கள் அத்தனையும் பெறுமதிமிக்கவை. மனித உடலில் உள்ள அத்தனை உறுப்புக்கள் யாவும் மனிதன் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் உலக வாழ்வை அனுபவித்து வாழ்வதற்காகவே உருவாக்கப்பட்டவை என்பதை இந்நூல் வலியுறுத்திக்கூறுகின்றது. இந்நூல் ஆசிரியர் தேடித் தேடி அரும்பெரும் நூல்களை உசாத்துணையாகக் கொண்டு தொகுத்து எழுதி வெளியிட்டுள்ளார். மிகவும் வெளிப்படையாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது என்பது மட்டுமல்ல பொருத்தமான பழமொழிகளையும், உவமானங்களையும், ஒப்பீடுகளையும் நகைச்சுவை உணர்வுகள் அடங்கிய சொற்களைப் பயன்படுத்தி மேற்கோள் காட்டியுள்ளார்.

அவற்றில் சில,

பற்களின் முக்கியத்துவம் பற்றியும் அவற்றை எவ்வாறு பாதுகாக்கவேண்டும் என்பது பற்றியும் குறிப்பிட்டு முடிவில், கனிகளைச் சாப்பிட வேண்டும் என்றால் பூக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற பல்கேரிய நாட்டு அற்புதமான பழமொழி சேர்க்கப்பட்டுள்ளது.

காது பற்றியும் ஒலி எவ்வாறு உள்வாங்கப்படுகிறது என்பதுபற்றிக் குறிப்பிடும்போது காதுமடலை சட்டலைட் சட்டிக்கு ஒப்பிட்டதுடன், வெவ்வேறு ஒலிகளின் அளவைக் குறிப்பிடும்போது காதலிக்கும் பெண்ணோடு மெதுவாகப் பேசினால் அது 30 டெசிபிலஸ்களைக் கொண்டது என்பதாக இரசனையோடு குறிப்பிட்டுள்ளார்.

மனிதனின் சகல வியாதிக்கும் மூல காரணம் இரத்தம் என கீபுரு நாட்டுப் பழமொழி சோக்கப்பட்டுள்ளது.

கல்லீரலில் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடுகையில், உலகின் பல பாகங்களிலும் உள்ள அதிசிறந்த விஞ்ஞானிகளும், வைத்திய நிபுணர்களும் ஒன்று சேர்ந்தாலும் எமது ஈரல் போன்ற இரசாயணத் தொழிற்சாலையை உருவாக்கவே முடியாது. எனவே இது ஓர் அற்புதமான தொழிற்சாலை எனக் குறிப்பிட்டுள்ளார்.

முதுகெலும்பின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்ட இந்நூல் ஆசிரியர், இவ்வுறுப்பு பலவீனமானதாக இருப்பதற்கு காரணம் எமது மூதாதையர் அவசரப்பட்டு இரண்டு காலில் நடக்க ஆரம்பித்தமையே என நகைச்சுவையாகக் குறிப்பிடுகின்றார்.

எமது கைக்கெட்டிய தூரத்திலேயிருக்கும் உணவு மூலிகைகள் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்நூலின் இறுதியில், கரட், வெள்ளைப்பூண்டென்று சொல்லப்படும் உள்ளி, இஞ்சி, வெங்காயம் மற்றும் தேன், உடல் முக்கால் பகுதிக்கு மேற்பட்ட நீரைக் கொண்டிருப்பதையும் குறிப்பிட்டுள்ளார் இந்நூலாசிரியர். இஞ்சி, உள்ளி, வெங்காயம் இருதயத்தில் கொழுப்புப் படிவதைத் தடுக்கும் என்ற மருத்துவக் குணத்தை வலியுறுத்திக் கூறுவதுடன் அவ்வுணவு மூலிகைகள் பல்வேறுபட்ட நோய்களை முளையிலேயே கிள்ளி எறியக்கூடிய மூலிகைகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

'ஆரோக்கிய வழிகாட்டி' என்ற இந்நூல் நமது உடல் நலம் நமது கைகளிலே என்ற முதலாவது அத்தியாயத்தில் தொடங்கி மருத்துவ வளர்ச்சியின் விந்தை என்ற முப்பத்தைந்தாவது அத்தியாயம் வரை மிக மிகத் தேவையான உடல்நல விபரங்களைக் கொண்டிருக்கின்றது.

ஒவ்வோர் அத்தியாயத்திலும் குறிப்பிட்டுள்ள உடல் உறுப்புகள் பற்றியோ அல்லது அந்த உறுப்பின் செயல்பாடுகள்பற்றியோ எமது எம் உடல்பற்றிய அக்கறையீனத்தால் ஏற்படும் நோய்கள் பற்றியோ, அந்நோய்களுக்கான நிவாரணி பற்றியோ, அவ்வுறுப்புகளுக்குத் தேவையான உணவு முறைகள் பற்றியோ விபரமாக இங்கே பேச வேண்டும் என நான் கருதவில்லை. ஏனெனில் இது ஒரு மருத்துவ நூல் போன்றது. ஆகவே இந் நூலை எல்லோரும் வாங்கி ஊன்றிப் படிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன். ஆங்காங்கே சில விடயங்களை கோடிட்டுக் காட்டியுள்ளேன்.

இந்நூலின் இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், ஒவ்வோர் அத்தியாயத்தின் இறுதிப் பந்திகளிலும் எம் உடலோடு சம்பந்தப்பட்ட பொதறிவு விடயங்கள் சேர்க்கப்பட்டிருப்பதேயாகும். சில நோய்கள் எம் அலட்சியத்தால் ஏற்படுபவை. அவற்றில் நீரிழிவு நோயும், கொலஸ்ரால் நோயும் முக்கியமானவை. இந்நோய்களுக்கு, இந்நோய் வராமல் தடுப்பதற்கான வழிமுறைகளை இந்நூல் அற்புதமாகச் சொல்லுகின்றது.

இறுதி அத்தியாயங்களில் பூமித்தோற்றம், உயிரினத் தோற்றம் மனித உருவின் படிமுறை, பரிணாம வளர்ச்சி போன்றவை எல்லோருக்கும் விளங்கக்கூடிய விதத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.

விபரத்தை, அதன் முக்கியத்துவத்தை, உங்கள் உறவினர்கள், நண்பர்கள், அறிந்தவர், தெரிந்தவர் போன்றவர்களுக்கும், தொலைபேசி உரையாடலின்போதோ அல்லது எம்மவர்களின் பல்வேறுபட்ட விழாச் சந்திப்புக்களின் போதோ தெரியப்படுத்துமாறு வேண்டுகிறேன். இந்நூல் உங்கள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய கைமருந்தாகும்.

**– ஏலையா முருகதாசன் யேர்மனி**

## கவிதைக் களம்

**எனது ஆசை,**

பத்து மாதம் சுமந்து பெற்று
பாலுடன் வீரத்தையுமா
ஊட்டினாய்... அம்மா...?
இந்த மண்ணின் விடுதலையே
என்றும் தேவை அம்மா

பந்த பாசம் துறந்து – நான்
நாட்டில் பற்று வைத்தேன் அம்மா
கவலைப் பட்டு நீங்கள் கண்ணீர்
சிந்த வேண்டாம் அம்மா

என் புகழுடல் வந்திடும்
போதிலும் துவண்டிடாதே அம்மா
என் போன்ற போராளிகளை
நேசித்திடு அம்மா

இம் மண்ணின் மாவீரர் !
கால்களில் பூச்சொரிந்து
வணங்கிடுங்கள் அம்மா
மலரப்போகும் தமிழீழத்தில்

துள்ளி வருவேனம்மா...
அள்ளி அணைத்து என்னை
சிரித்து மகிழ்ந்திடு அம்மா...

### கனவு

விடிகின்ற காலைப் பொழுதொன்று
விடுதலை நாளாக எமக்கு மாறாதோ?
ஏக்கம் நிறைந்த எம் நெஞ்சத்தில்
இருள் கலையாதோ...?
விடுதலை மலராதோ....?

அடையாள அட்டை
இல்லாமல் வாழ்வதற்கும்
அகதிகள் என்ற அவலப் பெயர்
சொல்லாமல் இருப்பதற்கும்....
காலம் மாறாதோ....?

எமது ஆசை தமிழீழம்
அந்த ஆசை நிறைவேறும் வரை
ஆவலுடன் தூக்கமின்றி
இல்லை.... இல்லை...

தூக்கத்தைத் துரத்தி விட்டு
துப்பாக்கி கையில் ஏந்தி
நிற்கிறோம் காவலரணில்.

**புலம் பெயர்ந்து வாழும் என் இனிய உறவுகளுக்கு !**

காலத்தின் தேவையை...
கண்டும் நீங்கள்...
ஒதுங்கி ஓடலாமா ?
நில்லுங்கள் !
ஒருகணம்..

சிந்தியுங்கள்.... !
இருட்டதில் தெரியுமாம்
வெளிச்சத்தின் அருமை
ஓ....

காலங்கள் ஓடத்தான்
தெரியும் எம் அருமையும்
காலம் மாறும்....
அன்றும் எம் கல்லறைகள் பேசும்...
ஏன்.... காலத்தின் குரலை
செவிமடுக்க மறந்தீர் என்று....

எமது உறவுகளின் கரம்
உயர்ந்தால் எம் தலைவன்
கரம் பலமாகும்
தலைவன் கரம் பலமானால்
நிச்சயம் தமிழீழம் மலரும்

**– போராளி சுமித்திரா**
**நவம் அறிவுக்கூடம்**

# ஏன் பெண்ணென்று பிறந்தாய்?




`எண்ணமெல்லாம் நெய்யாக
எம்முயிரினுள் வளர்ந்த வண்ண
விளக்கிது மடியத் திருவுளமோ?`

**- பாரதி -**

இளஞ்சூரியன் அடிவானை விட்டு மெல்ல மெல்ல எழுந்துகொண்டிருந்த அந்த இளங்காலைப் பொழுதில், கணவனையும் பிள்ளைகளையும் அலுவலகத்துக்கும் பாடசாலைக்கும் ஆயத்தம் செய்து அனுப்பியபின் காலை நேர அமளி ஓய்ந்து வீட்டில் அமைதி சூழ்ந்திருந்தது. பொருட்களை ஒதுக்கி வீட்டைத் துப்பரவு செய்து கொண்டிருக்கையில், அறையினுள்ளே மெத்தையின் ஸ்பிரிங் கிரீச்சிட செய்த வேலையை அப்படியே போட்டுவிட்டு அந்த அறையினுள் வந்தாள் சாவித்திரி.

கட்டிலில் அவள் புரண்டு கொண்டிருந்தாள். அவளது நெற்றியை வருடி முடியைக்கோதி 'கீத்து' என்றாள் பாசமாய். தாயின் குரலை இனம் கண்டு கொண்டதன் அடையாளமாகவோ, நித்திரை கலைந்துவிட்டதன் காரணமாகவோ முகத்தில் அர்த்தம் புரியாத ஒரு மலர்வு பரவிற்று. அரைக் கண் திறந்து பார்த்தாள்.

கண்கலங்க மகளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டாள் சாவித்திரி.

அவசரமாய்ப் போய் சக்கர நாற்காலியை எடுத்துவந்தாள். 'எழுந்திரம்மா' வழமை போல் பெயருக்குக் கூறியவாறே மகளை அணைத்துத்தூக்கி சக்கரநாற்காலியில் இருத்தினாள். பதின்மூன்று வயதுக்கு மீறிய வளர்ச்சி. சற்று அதிக சதைப் பிடிப்பான உடலமைப்பு. ஆனால் கீர்த்தனாவைத் தூக்குவதில் சிரமம் தெரியவில்லை சாவித்திரிக்கு. இவள், கீத்து என்கின்ற இந்தக் கீர்த்தனாவைக் கருவாய் வயிற்றில் சுமக்க ஆரம்பித்த நாளிலிருந்து இன்றுவரை தொடர்ந்து சுமப்பதால், கீர்த்தனா வளர வளர பாரம் ஏறிக்கொண்டிருந்ததே தவிர சாவித்திரிக்கு அவள் பாரமாய் தெரியவில்லை.

ஒருவேளை அவளை உடலால் சுமக்கும் பாரத்தைவிட, அவள் காரணமாய் சாவித்திரி மனதில் சுமக்கும் பாரம் அதிகமென்பதால் உடற்பாரம் தெரியவில்லையோ என்னவோ?

பெருமூச்சுடன் படுக்கையை உதறினாள் சாவித்திரி. இரவில் படுக்கை ஈரமாகவில்லை என்பதை உறுதிசெய்து கொண்டு, அவசரமாய் மகளை கழிப்பறைநோக்கி நாற்காலியுடன் தள்ளிச் சென்றாள். மகளின் காலைக்கடன் கவனித்து, பின் பல் துலக்கி குளிக்க வைத்து உடை மாற்றி, தலை வாரிப் பொட்டிட்டு, உணவைப் பிசைந்து வாயிலூட்டியபோது, இரண்டு கவளம் உள்ளே போனதும் வாந்தியாய் தாயின் முகத்தின் மீதே வாரியடித்தாள்.

தாய் திடுக்குறவில்லை. தடுமாறவில்லை. கீர்த்தனா சிறு வயதிலிருந்தே இப்படித்தான். ஊட்டிய அதே வேகத்தில் உணவு வாந்தியாய் வெளியே வந்துவிடும். ஆரம்பத்தில் அவள் வாந்தியெடுத்துவிட்டுச் சோர்ந்து, துவண்டு கிடக்கையில் ஏதோ விபரீதம் நடந்துவிடப்போகும் பதட்டத்தில், கீர்த்தனாவைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு வைத்தியரிடம் ஓடியிருக்கிறார்கள்.

இப்படியே பலமுறை அவர்கள் பதகளித்து ஓடிவருவதைப் பார்த்துவிட்டு, ஒருமுறை வைத்தியர் அவர்களை இருத்தி வைத்து அமைதியாக விளங்கப் படுத்தியிருந்தார். 'எங்களால் எங்கள் உடம்பு நிலையை உணர்ந்து கொள்ள முடியும். அதைவெளியால சொல்லவோ, செயற்படவோ முடியும். பசிச்சா சாப்பாடு தேடி சாப்பிடமுடியும். வயிறு சரியில்லேன்னா வயிற்றைக் காயப் போட்டோ மருந்து சாப்பிட்டோ நிவாரணம் தேடமுடியும். சாதாரண குழந்தை கூட பசிச்சா பாலுக்கழும். பசியில்லேன்னா கொடுத்த பாலைக்கூட தட்டிவிடும். ஆனா கீர்த்தனாவால அந்தளவுக்குச் சிந்திக்கவோ செயற்படவோ முடியாது.

நேரம் குறிச்சு வைச்சு நீங்க உணவு ஊட்டுறீங்க. அந்த நேரம் இந்தக் குழந்தைக்குப் பசி உள்ளதா இல்லையா? எதுகும் உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அந்த நேரம் உணவை ஏற்கிற நிலையில உடல் இல்லையென்றால் இப்படி வாந்தியாய்த் தான் வெளிவரும். கீர்த்தனாவின் உள்ளுறுப்புகள் எதுவும் எந்தவிதப் பழுதுமில்லாமல் சரியாய்த்தான் இயங்குகின்றன. உள்ள ஒரே குறை, இந்தக் குழந்தையால் சிந்தித்துச் செயற்பட இயலாது. மற்றப்படி இந்த வாந்திபற்றி நீங்கள் பயப்பட ஏதுமில்லை'.

வைத்தியரின் இந்த அறிவுரை மனதில் எழுந்து, கீர்த்தனா எப்போது வாந்தியெடுத்த போதும் சாவித்திரி பதட்டப் படாமல் அமைதிப்படுத்திவிடும். ஆனாலும் இப்போது சில வாரங்களாகக் கீர்த்தனா அடிக்கடி வாந்தியெடுப்பதும் சோர்ந்து போவதுமாக இருந்தாள். உடல்கூட சற்று மெலிந்திருந்தது. ஒரு தரம் வைத்தியரிடம் எடுத்துச் செல்வது நல்லதென்று பட்டது சாவித்திரிக்கு.

வழமையாக வைத்தியப் பரிசோதனை முடிந்ததும், 'சீர்செய்ய முடியாதபடி அவள் வரும்போதே வாங்கிவந்த வரமாய் சிந்திக்கும் திறனற்ற குறைதவிர மற்றப்படி உடல்நிலை சீராகவே இருப்பதாகச் சொல்லும் வைத்தியர்' அன்று சற்று யோசனையுடன் இருப்பது போற்பட்டது. அவரது சிந்தனை நிறைந்த முகம் பெற்றோருக்குப் பதகளிப்பை ஏற்படுத்தியது.

உடனடியாக மகப்பேற்று வைத்தியரைப் பார்க்கும்படி கடிதம் தந்தார். பெற்றோர் புரியாமற் பார்த்தபோது 'எனக்கு எதையும் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. நீங்கள் லேடி டொக்ரரைச் சென்று பாருங்கள்' என்றார். அடிநுனி இல்லாமல் பெற்றோர் எத்தனை பதட்டப்பட்டபோதும் வைத்தியரின் முகம் இறுகியே இருந்தது.

பெற்றோரைப் பயம் கௌவிற்று. கீர்த்தனாவை எடுத்துக்கொண்டு மகப் பேற்று மருத்துவரைத்தேடி ஓடினார்கள். 'கடவுளே என்னாயிற்று இவளுக்கு புதிதாய் உடலில் ஏதாவது கோளாறு ஏற்பட்டுவிட்டதா' என மனம் பதறினார்கள்.

வைத்தியரின் பரிசோதனை அறையினுள்ளே திரை மறைவுக்கப் பாலிருந்த படுக்கையில் கீர்த்தனாவைக் கிடத்திவிட்டு வெளியே காத்திருக்கையில் மனம் பதறிற்று. பெற்றோர் ஆதரவாய் ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டார்கள். 'கீத்துவின்ர உடம்பில புதிதாய் ஏதாவது கோளாறு ஏற்பட்டிருக்குமாப்பா?' பதட்டமாய்க்கேட்ட மனைவியின் கைவருடி ஆறுதற்படுத்த முயன்றான் கணவன்.

கீர்த்தனா பிறந்த நாளிலிருந்தே சிந்திக்கத் தெரியாத, பேச, நடக்கத் தெரியாத ஒரு பொம்மைதான். ஆனால் அவள் அவர்களின் மகள். அவர்களது உதிரத்தில் விளைந்தவள் அந்தப் பாசமும், அவர்களது ஏனைய குழந்தைகளைவிட பெற்றோரின் கவனிப்பையும் கரிசனையையும் அதிகமாகப் பெற்றுக் கொண்டிருப்பவள். பெற்றோரின் இயக்கத்திலேயே இயங்கிக் கொண்டிருப்பவள். அவள் மூலம் அவர்கள் எந்தச் சந்தோசத்தையும் அனுபவிக்காத போதும் அவளை இடையில் இழந்துவிட அவர்கள் தயாராகவில்லை.

திரைமறைப்புக்கப்பாலிருந்து கழுவிய கையைத் துடைத்தவாறே வைத்தியர் வெளிப்பட்டபோது, பதைபதைப்பும் பதகளிப்புமாக வைத்தியரின் முகம் நோக்கினர் பெற்றோர். வைத்தியர் சற்று நேரம் நிதானமாய் பெற்றோரின் முகம் நோக்கினார். பின் அவர் அதை.... அந்த உண்மையை... அவளது உயிர்பற்றி இவர்கள் பயந்து கொண்டிருக்கையில், அதைவிடப் பயங்கரமான, கொடூரமான, அதிர்ச்சிதரும் அந்தத் தகவலைக் கூறியபோது இருவரும் அதிர்ந்து 'டொக்ரர்' என ஏக காலத்தில் கூவியகுரல் அவர்களைச் சுற்றியே எதிரொலித்தது.

பெற்றோர் சிறிது சகஜ நிலைக்கு வரும் வரை பொறுத்திருந்த வைத்தியர் பின் நிதானமான குரலில் 'ஆமாம் உங்கள் மகள் தாய்மையடைந்திருக்கிறாள். நம்ப முடியாதுதான் ஆனால் அதுதான் உண்மை' என்றார் நிதானமாய். முகம் வியர்த்துக் கறுக்க துவண்ட தாயைத் தோளில் சாய்த்து சிலையென அமர்ந்திருந்த தந்தையைப் பரிதாபமாகப் பார்த்தார் வைத்தியர்.

'உங்கட மனநிலை எனக்குப் புரியுது. பரிசோதனையின் போது நான் கூடத் திடுக்குற்றுத்தான் போனேன்' என்றார் ஆறுதலாக.

'ஆனால் ஒன்றில் மட்டும் நீங்கள் தெளிவாய் இருக்கவேண்டும். நேர்ந்தது கொடூரமான தவறுதான். ஆனால் அந்தத் தவறில் உங்கள் மகளுக்கு ஒரு சதவீதம்கூடப் பங்கில்லை. சொந்தமாய் சிறுநீர் கழிப்பதைக் கூட உணரமுடியாத உயிருள்ள இந்தப் பொம்மைக்குழந்தை இதற்கு எந்தவிதத்திலும் பொறுப்பில்லை. நீங்கள் கொஞ்சம் கவனமாக இருந்திருக்கலாம்' என்றார் வைத்தியர்.

'கவனமாய்த்தான் டொக்ரர் இருந்தோம். அவளைக் கண்ணுக்குள் வைத்துத்தான் பாதுகாத்தோம். எப்படி ஆச்சென்று தெரியவில்லையே' புலம்பினார் தந்தை. 'ஒரு சாதாரண பெண் ஒருவனுடன் சிரித்துப் பேசித்திரிந்தாலே கை கால் வைத்துப் பேசும் இந்த சமூகத்தில் இப்போ.... இவளை.... இந்த நிலையில்.... வேண்டாம் டொக்ரர் எங்கட பொம்மைக் குழந்தைக்கு... அதுகும் இந்தப் பதின்மூன்று வயதில் ஒரு வாரிசு வேண்டாம். வேண்டவே வேண்டாம். கலைச்சிடுங்க டொக்ரர்...' ஆவேசமாய் தாய் கதறியபோது வைத்தியர் அருகே வந்து ஆதரவாய் கரம் பற்றினார்.

'முடியாது. குழந்தை வளர்ந்திட்டுது. உங்கள் மகளின்ர நிலையில இதை அழிக்கிறது உங்கள் மகளின் உயிருக்கே ஆபத்தாய் முடியலாம்' என்று வைத்தியர் கூறியபோது அதிர்ந்து அமைதியாகினர் பெற்றோர். 'இந்தக்குழந்தையின் அத்தனை தேவைகளும் உங்களைச் சார்ந்தே இருப்பதால் நீங்கள் ஆரம்பத்திலேயே இதைக் கண்டுபிடித்து வைத்திய உதவியை நாடியிருந்தால் ஏதாவது செய்திருக்க முடியும்' என்றார் வைத்தியர்.

கீர்த்தனா பெரியவளாகி, இந்த ஒன்றரை வருடங்களில் மூன்று நான்கு மாதங்களுக்கு ஒருமுறைதான் அவளுக்கு 'அந்த நாட்கள்' வருகின்றன. மற்றக் குழந்தைகள் போல் ஓடியாடாது ஒரே இடத்தில் கிடப்பதால் தொப்பை விழுந்து போன அவளது உடலமைப்பும் என்னை சந்தேகம் கொள்ளத் தூண்டவேயில்லை டொக்ரர்.

அதையும்விட.... குழந்தைப் பருவம் தாண்டாத இந்த வயதில் இப்படி ஒரு விபரீதம் நேரும் என்பதையோ, அதிலும் உயிருள்ள இந்தப் பொம்மைக் குழந்தைக்கு இப்படியொரு கீழ்த்தரமான செயலைச் செய்யுமளவு கொடியவர்கள் உலவும் பூமி இதுவென்றோ நான் கனவிலும் நினைக்கலையே டொக்ரர். இத்தனை தூரம் பூமியில் மனிதம் மரணித்துப் போயிற்றா டொக்ரர்?' கதறிக் குமுறியழும் தாயை ஆதரவாகப் பார்த்தார் வைத்தியர்.

'நடந்தது நடந்தாயிற்று. இனி அழுது பயனில்லை. இனிமேல் நாம் செய்ய வேண்டியது என்ன என்று முடிவெடுத்து அதைச் சரியாகச் செயற்படுத்த வேண்டும். இனிமேல்தான் இந்தக் குழந்தையை இன்னும் அதிக கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். முறையான மருத்துவக் கவனிப்புகளைக் கொடுத்துப் பராமரிக்க வேண்டியதுதான் இப்ப முக்கியம்' என விளங்கப்படுத்தியவர் மேலும் பல அறிவுரைகளுடன் அனுப்பி வைத்தார்.

வீட்டுக்கு வரும்வரை உணர்வுகளே மரத்துவிட்டாற்போல் அடித்துப் போட்ட பாங்கில் காரில் அமர்ந்திருந்தாள் சாவித்திரி. கண்கள் மட்டும் விடாமல் பொழிந்துகொண்டிருந்தன. வீட்டிற்கு வந்து மகளைப் படுக்கையிற் கிடத்தியவள், அவளருகே அப்படியே குப்புறக் கவிழ்ந்து குமுறிக்கதற ஆரம்பித்தாள். இப்படி ஒரு குறையுடன் கீர்த்தனாவைப் பெற்றுப்போட்டபோது அழுததை விட பன்மடங்கு குமுறிக் கதறினாள்.

தனக்கு, தன்னைச்சுற்றி, நடக்கும் எந்த விடயங்களின் பாதிப்புகளுமின்றி வழமைபோல் அரைக்கண் திறந்து, மெல்லிதாக உதடு பிரித்துச் சிரிக்கும் பாங்கில் மோனலிசா ஓவியம் மாதிரி மர்மப் புன்னகை புரிந்துகொண்டிருந்தாள் கீர்த்தனா. மனம் வெதும்ப, கண்கள் பொங்கி வழிய, மகளையே வைத்தகண் வாங்காது பார்த்திருந்தாள் தாய். பதின்மூன்று வயதுக்கு மீறிய வளர்ச்சி. பார்ப்போரைச் சுண்டியிழுக்கும் நிற அழகுமாய் சாவித்திரியின் குழந்தைகள் அனைவரிலுமே இந்தக் கீர்த்தனாதான் அப்படி ஓர் அழகு. ஓர் அழகு தேவதையே வந்து பிறந்த மாதிரி. 'ஏன்... ஏன் இப்படி இத்தனை அழகும் சுமந்து ஏன்... ஏன் இப்படிப்பிறந்தாய்...' மனம் துடிக்க மகளையே பார்த்துக் கொண்டிருந்தபோது, இப்போது தெரிந்தது, மெதுவாய் மேடிட்டிருந்த அடிவயிறு.

'எப்படி... எப்படி கீத்தும்மா, எப்படிம்மா இப்படியாச்சு. நீ பிறந்த நாளிலிருந்து என் கண்பார்வைக்கப்பால் உன்னை விலகவே விட்டதில்லையேடா. எப்படிம்மா இந்த நிலைக்கு ஆளானாய்? ஒருவேளை... நான்... இந்தப் பூமியில் பெரிய பெரிய பாவங்கள் ஏதாவது செய்திட்டேனா? அதுக்குத் தண்டனையாகத்தான் நீ இப்படிப் பிறந்தாயாம்மா? தொடரும் இத்தனை அவலங்களும் அதனாற்தானா? நான் வேதனைப்பட வேணும் என்பதற்காக ஆண்டவனின் அத்தனை தண்டனைகளும் உனக்காடா என் செல்வமே...' குமுறிக் கதறும் மனைவியின் தலையை வருடி கணவன் அணைத்தபோது 'நான் மனமறிஞ்சு எந்தப் பாவமும் செய்ததாய் எனக்கு நினைவில்லையேப்பா' என்று கதறினாள்.

கணவனின் மார்பில் முகம் மோதி 'எப்படிப்பா எப்படி..... இப்படியாச்சு. இந்த வீட்டுக்குள் நுழைந்த மிருகம் எது? இந்தப் பசுந்தளிரை ஈவிரக்கமற்று மேய்ந்து விட்டுப்போன எருமை எது? பச்சைக் குழந்தைக்கும் பருவப் பெண்ணுக்கும் வித்தியாசம் தெரியாத அந்தக் காட்டேறி எது...? பிணத்தோடும் புணரக் கூடிய அந்தக் கீழ்த்தரமான வெறிபிடித்த ஜென்மம் எது...?` முகத்திலறைந்து கதறும் மனைவியைப் பரிதாபமாகப் பார்த்தான் கணவன். அந்தக் கீழ்த்தரமான வெறிபிடித்த மிருகம் எதுவென்று தெரிந்தால் இத்தனைக்குள் அதன் குடலை உருவி மகள் காலடியில் போட்டிருப்பாரே தந்தை. அத்தனை ரௌத்திரத்தையும் விழுங்கிக் கொண்டல்லவா அவர் வளைய வந்துகொண்டிருக்கிறார்.

**(மிகுதி அடுத்த வாரம்)**

**- அரியாலையூர் மாலினி-வஸந்த்**

பாகம் - 2

10

# வலிகாமம் இருந்து வன்னி வரை

**- கவிஞர் நாவண்ணன்**

சக்கர நாற்காலியில் வந்த சிறுமியை அந்த வாகனம் தாண்டிய வேளையில் மக்கள் நெருங்குண்டு அவள் மீது விழவும் அவள் இருந்து வந்த அந்த நாற்காலி ஒரு புறம் சாய்ந்து கவிழும் நிலைக்கு வரவும் அவள் கீச்சிட்டுக்.... கத்தினாள் மறு பக்கமும் சனம் நெருக்கமாக வந்தபடியால் நாற்காலி விழாமல் தப்பியது. ஆனால் அந்தச் சிறுமி அச்சத்தில் இருந்து விடுபடவில்லை. தான் தொடர்ந்தும் சக்கர நாற்காலியில் இருந்து வரமாட்டேன் என்று அடம்பிடித்தாள். அவள் கொடுத்த தொல்லையும் பிடிவாதமும் அவளோடு கூட வந்தவர்களுக்குப் பெரும் சங்கடத்தைக் கொடுத்தது. ஆயினும் என்ன செய்வது?

இறுதியில் அச்சிறுமியின் தந்தையின் சைக்கிளின் முன் சட்டத்தில் இருந்த முதியவர் சக்கர நாற்காலிக்கு மாற்றப்பட்டார். சக்கர நாற்காலியில் இருந்த அச்சிறுமி தனது தந்தையின் சைக்கிளுக்கு மாற்றப்பட்டாள். அந்த முதியவருக்கு வயது எண்பதுக்குக் குறையாமல் இருக்கும் என்பது எனது கணிப்பு.

மழைகொட்டிக் கொண்டிருந்தது. ஆயினும் அனைவருக்கும் தண்ணீர்த்தாகம், மனித வெக்கைக்குப் போலும் பல பிள்ளைகள் தண்ணீர் கேட்டு அழுவது என் காதில் விழுந்தது. நானும் அதே நிலையில்தான் இருந்தேன். சிலர் குடைபிடித்துக் கொண்டிருந்தார்களாகையால் மழைத் தண்ணீர் குடை மீது விழுந்து வழியவும் அதைக் கைகளில் ஏந்தி தாமும் குடித்து, பிள்ளைகளுக்கும் கொடுத்த

> *சிலர் குடைபிடித்துக் கொண்டிருந்தார்களாகையால் மழைத் தண்ணீர் குடை மீது விழுந்து வழியவும் அதைக் கைகளில் ஏந்தி தாமும் குடித்து, பிள்ளைகளுக்கும் கொடுத்தனர். வேறு சிலர் குடையைக் கவிழ்த்துப்பிடித்து அதில் தண்ணீரை ஏந்திக் குடித்தனர். அதை அந்த நேரத்தில் தேவாமிர்தமாக நினைத்துக் குடித்துக்கொண்டனர்.*

னர். வேறு சிலர் குடையைக் கவிழ்த்துப்பிடித்து அதில் தண்ணீரை ஏந்திக் குடித்தனர். அதை அந்த நேரத்தில் தேவாமிர்தமாக நினைத்துக் குடித்துக்கொண்டனர். எனக்குக் கூடத் தண்ணீர்த்தாகமாகத்தான் இருந்தது. சைக்கிளை இரண்டு கைகளினாலும் பிடித்துக்கொண்டிருந்த என்னால் தண்ணீரை ஏந்தவோ குடிக்கவோ முடியாதவனாக நாக்கை நீட்டி மழைத் தண்ணீரில் நனைத்து உதடுகளை நாவினால் தடவிக்கொண்டேன்.

சுமார் ஒரு மணிநேரம் நின்றிருப்பேன். அப்படியே நின்று பயனெதுவுமில்லை மற்றவர்களோடு நானும் ஒருவனாகப் பாலத்தைக் கடந்து போயே ஆகவேண்டும். எனவே சைக்கிளையும் உருட்டிக்கொண்டு கூட்டத்தோடு கூட்டமாக நானும் உள் நுழைகின்றேன். என் உடம்பு குளிரால் வெடவெடத்துக்கொண்டிருந்தது.

பாலத்தில் நகர்ந்து கொண்டிருந்த எமக்குள் எல்லாம் ஒரே பயம் எந்த வேளையிலும் எறிகணை வந்து எம்மிடையே விழுந்துவிடலாம் என்ற அச்சம். குழந்தைகள் வேறு வீறிட்டு அழுதுகொண்டிருந்தன. எமக்கு முன்னு-க்கோ, பின்னுக்கோ என்ன நடக்கிறது என்பதைக்கூட அவதானிக்க முடியவில்லை. ஏனெனில், சிறிதும் பெரிதுமான வாகனங்கள் மக்கள் கூட்டத்தின் நடுவே வந்து கொண்டு இருந்தன. திடுமென எமக்கு முன்னே பயங்கரமான வெடிச்சத்தம்.

'டுமீர்'

மறுகணம், முன்னே சென்றவர்கள் பின்னே பாய்ந்து திரும்பவும் மக்கள் நெருங்குண்டு விழவும் ஒருவரை ஒருவர் ஏறி மிதித்துக்கொண்டு ஓடவும் 'ஐயோ! அம்மா! கடவுளே! முருகா! பிள்ளையாரே! இயேசுவே! மாதாவே!' என்று அனைத்துத் தெய்வங்களையும் கூவி அழைப்பதுமாக ஒரே அல்லோலகல்லோலம்.



எறிகணைதான் விழுந்து வெடித்துவிட்டதோ என்ற தவிப்பில் மக்கள் தம்மைக் காப்பாற்ற மற்றவர்களை தள்ளி மிதித்து அப்படியிருந்தும் ஒரு அடிதானும் பின்னே ஓட முடியாமல் இடறி விழுந்தார்கள். சைக்கிளில் கட்டிய சுமையுடன் வந்த என் மீதும் மோதினார்கள். ஏற்கனவே சைக்கிள் சுமையோடு என்னைக் கட்டுப்படுத்த முடியாமல் வந்த எனக்கு மக்கள் விழுந்து தாக்குவதற்கு ஈடுகொடுக்க முடியாமல் இருந்தது. தடுமாறிக்கொண்டிருந்த நான் பாலத்தின் பக்கக் கம்பியோடு சாய்ந்துகொண்டு பாலத்துக் கம்பிக்கும் சைக்கிளுக்குமிடையில் நின்றுகொண்டேன். அதனால் என்னைப் பாதுகாத்துக்கொள்ள முடிந்தது.

இத்தனைக்கும் அங்கு வெடித்தது எறிகணை அல்ல முன்னே சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்றின் ரயர் தான் என்பதை மக்கள் தெரிந்துகொள்ள வெகு நேரம் பிடித்தது. நேரம் விடிவை நோக்கி விரைந்துகொண்டிருந்தது. இப்பொழுது நான் பாலத்தின் மையப் பகுதியில் நின்றுகொண்டிருந்தேன்.

அங்கே பாலத்தின் ஒரு பக்கக் கம்பியுடன் சாய்ந்து நின்றபடி வயதான ஒருவர் ஏதோ உரக்கச் சொல்லிக் கொண்டிருந்தார். மக்கள் இரைச்சலில் அவர் சொல்வது முதலில் விளங்கவில்லை. என்றாலும் அவரை நெருங்கிய போது அவர் சொல்வது தெளிவாக விளங்கியது. அவர் சொல்லிக்கொண்டிருந்தார் என்பதைவிட அழுது ஓலமிட்டுக்கொண்டிருந்தார் என்பதுவே பொருந்தும். அவர் கூறிய வார்த்தைகள்:

'தம்பி செந்தூரா! அம்மா செத்துப் போய்ற்றாடா, அடேய் தம்பி செந்தூரா! அம்மா செத்துப் போய்ற்றாடா'

இப்பொழுது விடயம் தெளிவாக விளங்கியது. அவர் மனைவியோடும், மகனோடும் வந்திருக்கவேண்டும். அந்த மக்கள் கூட்டத்தில் மகன்

அவர்களைப் பிரிந்திருக்கக்கூடும். இந்நிலையில் அவரது மனைவி அந்த நெரிசலில் இறந்துவிட்டார் போலும். அவர் காலடியில் அந்த அம்மாவின் பிணம் கிடக்கிறதா என்று கூடப் பார்க்க முடியவில்லை. அவரின் நிலையைக் கண்டு இரங்குவார்கூட யாருமில்லை. அவரது குரலைக் கேட்டதோடும், பார்த்ததோடும் சரி. நாம் நகர்ந்து கொண்டே இருந்தோம்.

அந்தப் பெரியவரின் வயது என்னுடைய பப்பாவின் வயதாகத்தான் இருக்கும். சட்டென எனக்கு நோயாளியான என் அம்மா என் மனதில் வந்துபோனார். ஒருவேளை என்னுடைய அம்மாவுக்கும் இப்படி ஏதாவது....?

என் உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிந்தது 'கடவுளே! அப்படியொன்றும் நடந்துவிடக்கூடாது' என்று வேண்டிக் கொண்டேன்.

நிலத்தில் ஓங்கி அடிக்க அடிக்கத் தரை இறுகி வைரம் பாய்வது போல சுமார் பத்து மணித்தியாலங்களாக அந்த நெரிசலில் இடிபட்டுக்கொண்டு வரும் என் மனமும் என்னை அறியாமலே வைரம் பாய்ந்துகொண்டு வந்தது. போராளியாக இருக்கும் என் தங்கை வேணியை நினைத்துக்கொண்டேன். என்னிலும் ஒரு வயதே குறைந்தவள். அவள் இப்பொழுது எங்கே இருக்கின்றாள் என்பதுவும் தெரியாது. அவளும் ஒருவேளை இப்பொழுது தனது போராளிகளுடன் இடம்பெயர்ந்து கொண்டு இருக்கலாம். ஆனால் அவளது நகர்வு மற்றவர்களையும், மண்ணையும் காப்பதற்கானது எனது நகர்வோ என்னைக் காப்பதற்கானது. அது விடிகாலைப் பொழுது கிழக்கு வெளிக்கத் தொடங்கிவிட்டது. எனக்குள்ளும் ஏதோ விடிவில் கீற்று வெளிக்கிளம்புவது போலவிருந்தது.

நாவற்குழிப் பாலத்தை நான் கடந்தபோது நேரம் மறுநாள் காலை மணி பத்து. அப்பாடா ஒருவாறு பாலத்தைக் கடந்துவிட்டோம் என்ற நிம்மதி ஒடுக்கமான குழாய் வழியாக பாய்ச்சப்பட்ட தண்ணீர் குழாயை விட்டு வெளியேறும்போது ஏற்படும் வேகம்போலும் சலசலப்போடும் மக்கள் பாலத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

பாலத்தைக் கடந்து இன்னும் வந்து சேராத உறவினர்களுக்காகவும், நண்பர்களுக்காகவும் முன்னரே வந்து சேர்ந்துவிட்டவர்கள் காத்துக்கொண்டு நின்றனர். தமக்குத் தெரிந்தவர்களை வரக்கண்டபோது தம்மவர்களைக் கண்டீர்களா என்ற விசாரணைகள் ஒருபுறம் நடந்துகொண்டிருந்தன. காத்திருந்த அந்த மக்களிடையே நான் எனது நண்பனையும், மனைவியையும் தேடினேன். நான் எதிர்பார்த்தது வீண்போகவில்லை. எனது நண்பன் எனக்காகக் காத்துக்கொண்டிருந்தான். அவனது மனைவி சற்றுத் தொலைவில் வீதி ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு இருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் அவர்கள் கொண்டு வந்த பிரயாணப் பைகளும், சைக்கிலும் இருந்தன. அவற்றுக்குத் தன் மனைவியைக் காவல் வைத்துவிட்டு அவன் என் வருகைக்காகப் பாலத்தடிக்கு வந்து காவல் நிற்கின்றான்.

அவர்களைக் கண்டதும் எனக்கும், என்னைக் கண்டதும் அவர்களுக்கும் மகிழ்ச்சி. நான் உருட்டிக்கொண்டு வந்த சைக்கிளை என்னிடமிருந்து வாங்கி அவன் உருட்டிக்கொண்டு முன்னே நடந்தான். நான் அவனைப் பின் தொடர்ந்து சென்றேன். அவன் மனைவி இருந்த இடத்துக்கு வந்ததும் சைக்கிளை நிறுத்திவிட்டு அவன் உட்கார்ந்து கொண்டான். நான் சற்றுத் தள்ளி வீதிக் கரையிலேயே நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டேன். உடம்போ அடித்துப் போட்டதுபோன்று அத்துணை உளைச்சலாக இருந்தது. என் நண்பனின் மனைவி சுடுநீர்ப் போத்தலில் இருந்து அதன் மூடியில் தேனீர் ஊற்றிக்கொடுத்தாள். நான் இருந்த சளைப்புக்கு அந்தத் தேனீர் அமிர்தமாகவிருந்தது. சற்றுத் தள்ளி ஒரு கொட்டில் கடையில் தேனீர் வாங்கியதாகவும், நான் தாகத்துடன் வருவேன் என்று எனக்காக அதை வைத்துக்கொண்டு காவல் இருந்ததாகவும் கூறினாள். அவள் பொருட்டு என்னைப் பெற்றவர்களையும், உடன் பிறப்புக்களையும் விட்டு தன்னோடு வரும் எனக்கு இதைச் செய்யவேண்டும் என்ற உணர்வு இருப்பதை உணர்ந்துகொண்டேன்.

(தொடரும்)





விசேட விலைக் கழிவு

RHYTHM

Website
rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography

# நினைவாஞ்சலி மாலையில், பதிந்தவை, நிறைந்தவை...

ஒரு கலைஞன், வாழும்போதே வாழ்த்தப்படல் வேண்டும், கௌரவிக்கப்படல் வேண்டும் என்பது கலையியல் இலக்கணம். இதை நடைமுறையில் செயற்பாட்டு முறையில், வெளிப்படுத்திவந்தவர், 'நடிப்பிசைக் காவலர்' கலைக் கோயிலின் தர்மகத்தா, அமரர் கிறகரி தங்கராஜா அவர்கள். அவரால் கௌரவிக்கப்பட்ட, முப்பதுக்குமேற்பட்ட, கலைஞர்பட்டாளமே, இங்கு பாரீசில் சாட்சியம் கூறுவர், ஏன் நானும் உட்பட.

கவியரசர் அமரர் கண்ணதாசன் ஐயா அவர்கள், அமரர் கலைஞர் கிறகரி தங்கராஜாவை மையமாக வைத்து, தீர்க்கதரிசனமாக, எழுதியிருப்பாரோ என்னவோ?... 'ஒரு கலைஞனின் வாழ்க்கை விசித்திரமானது, இன்பமும் துன்பமும், ஏற்றமும் இறக்கமும் சேர்ந்து பௌர்ணமிக்கும்' என்கிறார். 'மோகனமும் பாடுவான், முகாரியும் பாடுவான், மோகனம் பாடமுடியாமலும் முகாரிபாட இயலாமலும் இருக்கும் வேளைகளில் சஹானா லயத்தில் சில சுருதிகளையும் மீட்டுக்கொள்ளுவான். சில சந்தர்ப்பங்களில் கானல் நீரையும் சந்திக்கிறான்' என்கிறார். 'கனி வீழ்ந்தாலும், கல்லெறி வீழ்ந்தாலும், தாங்கிக்கொள்ளும் தலையுள்ளவன்தான் கலைஞன்' என்கிறார். இந்த உவமான உவமேயங்கள் என் நெஞ்சில் பதிந்தவை, நிறைந்தவை!

மக்கள் மனங்களில் மரணிக்காத இக்கலைஞனின், நான்காவது அமரத்துவ நினைவாஞ்சலி இளமாலை நிகழ்வு, 07.03.2004 ஞாயிற்றுக்கிழமை, வழமைபோன்று, 'கிறீன் கிங்ஸ் கழகம்' நடாத்திவைத்தது. நிகழ்ச்சிகள், குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பிக்க இயலாதமை, எம்மோடு ஒட்டிப்பிறந்த, பாரம்பரிய சம்பிரதாயமுறை. இதற்கு, ஒலிவாங்கியின் ஒத்துளைப்பும், கைகொடுத்துதவியதைக் காணக்கூடியதாயிருந்தது. இருந்தாலும் நேரப்போக்கில் 'மக்ஸ் டோமி' (Max Dormy) மண்டபம் நிறைந்து வழிந்ததும், ஆசனத்தட்டுப்பாடு தென்பட்டமையும், 'கிறீன் கிங்ஸ்' கழகத்தினர்க்கு ஒரு நற்சான்றிதளேதான்!! மறைந்தும், மக்கள் மனங்களில் நிறைந்தவன், அமரர் கலைஞன் கிறகரி தங்கராஜன் என்பதை அன்றைய நிகழ்வுகள் மீழ்வலுவுறுத்தியுள்ளமை, பதிந்தவை, நிறைந்தவையேதான்.



வரவேற்புரை குறுகியதாய் இருந்தாலும், நித்திய தர்ப்பனா நடனக் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம், பரதாலயா நடனக் கல்லூரி மாணவிகளின் தில்லானா நடனம், இவற்றின் சாஸ்திரீதியான வெளிப்பாடுகள் பரவசமூட்டியிருந்தன என்றுதான் கூறவேண்டும்.

எழுச்சிப்பாடல், 'அன்னை பூபதி' இதற்கு அபிநயம் காட்டிய செல்வி கீர்த்தனா லோகு, அனைவரையும் பிரமிக்க வைத்துள்ளார், அபாரமான வெளிப்பாடு!

A.B.C. வானொலியின் ஆஸ்தானக் கவிஞர் வண்ணைத்தெய்வம் அவர்களின் கவிதாஞ்சலி இடம்பெறவில்லை, அவ்விடத்தை சிறுகதை எழுத்தாளர், முன்னணிக்கவிஞர் சிவலிங்கம் சிவபாலன் அவர்கள் கைகொடுத்து நிரப்பினார்கள். முன்னணிக் கலைஞர் யாழ் தேவன் வருகை தந்திருந்தார். ஆனால் 'பாட்டுடன் கலந்து' அவர் வராதமை, மின்இழைஒளி நாடா கைகொடுக்காதமைதான் காரணமாயிருந்திருக்கலாம்.

அமரர் கிறகரி தங்கராஜாவின் சக மாணவன், இணைபிரியா நண்பன் சமகால கலையுலகத்தோழன், நாடகாசிரியர் எம். அரியநாயகம் அவர்களின் இயக்கத்தில் இரு, தனிநடிப்பு நாடகங்கள் மேடையேறின. 'அம்மா' எனும் குறும் நாடகத்தில் செல்வி நிரோணி சந்திரமோகன் இடம்பெற்றிருந்தார். வளரும் பயிரை முளையிலே தெரிந்தது. இருந்தாலும், மிகக் குறுகிய காலப்பயிற்சியென்பதும் தெட்டத்தெளிவாயுமிருந்தது. 'மாறாத மாற்றங்கள்' எனும் நாடகத்தில், திருமதி வீனா ஜெயக்குமார் பங்கேற்றிருந்தார். லாவகமான நடிப்பின் மூலம், பண்பட்ட அனுபவ முத்திரை பளிச்சிட்டுக் காட்டியது. இருந்தாலும், இங்குகூட, குறுகிய காலப் பயிற்சியென்பதும், மேலோட்டமாகப் புலப்பட்டது. இவ்விரு நாடகங்களும், கருவின் காத்திரங்களும், புலம்பெயர் வாழ்வில் மீட்கப்படும் அபசுரங்களும், அவலங்களும், மையமாகக்கொண்டிருந்தபோதிலும், இப்படியான ஓர் அமரத்துவமடைந்த நாட்டுக்கூத்துக் கலைஞனின் நினைவாஞ்சலி. விழாவிற்குப் பொருத்தமானதா என்ற கேள்விக்குறியும், ஒரு சில பார்வையாளர் மத்தியிலும் எழத்தான் செய்தது.

நாட்டுக்கூத்து சக்கரவர்த்தி பூந்தான் யோசேப்பு, காலடிச்சுவடுகளைப்பற்றி வளர்ந்து வந்த அமரர் கிறகரி தங்கராஜா, ஏராளமான வடமோடி தென்மோடி நாட்டுக்கூத்துக்களில் பிரகாசித்தவர். அவர் பங்கேற்ற சில நாடக வடிவங்களில் ஏதாவது ஒன்றோ இரண்டோ, சிறு கட்டங்களை, நாடகாசிரியர் உட்புகுத்தியிருந்தால், நினைவாஞ்சலியில், அமரருக்குச் செலுத்திய காணிக்கையாக இருந்திருக்கும். கிறீன் கிங்ஸ் கழகத்தினர் இது கவனித்திருக்கவேண்டியதொன்று. கிறீன் கிங்ஸ் சிறுவர்கள், இளைஞர்களின் பாடலுக்கு ஆடல் நடன நிகழ்ச்சிகள், சோர்வுற்றிருந்தவர்களைச் சற்றுத் தட்டிக்கொடுத்தது. ஆனால், அவர்களின் நாடகத்தில் நகைச்சுவைக்குத் தட்டுப்பாடு இருந்திருக்கிறது. மிகைப்படுத்தல், அவசரம், ஆழமின்மை இவை தோன்றியமை, ஒழுங்குமுறையான நெறியாக்கம் இருந்திருக்கவில்லை என்பதுதான் அர்த்தம். இவ்விளங்கலைஞர்கள், ஆர்வம் மிக்க இளைஞர்கள், வளர்ந்துவரும் இளம் கலைஞர்கள், பண்பட்ட நெறியாளர்களால் கையாளப்படுவார்களானால், இவர்களுக்கு நல்ல எதிர்காலமுண்டு.

இந்த நினைவாஞ்சலி விழாவிற்கு, கிரீடம் வைத்ததுபோல் அமைந்தது முன்னாள் இலங்கை வானொலி புகழ், தற்போது , ரீ.ரீ.என். (TTN) தொலைக்காட்சிச் சேவையில் பங்காற்றி வருபவர், திருமிகு. டேவிட் ராஜேந்திரன் அவர்களைப் பாராட்டிக் கௌரவித்தமையேதான்! இப்படியான முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்சிகள், இடைவேளையின்போது அல்லது இடைவேளையை அடுத்து இடம் பெற்றிருக்கவேண்டும். இறுதி நிகழ்ச்சிக்கு முன் நிகழ்ச்சியாக இந்நிகழ்ச்சியமைந்ததனால் முற்றுமுழுதாக நிறைந்திருந்த மண்டபம் முக்கால் பங்காகக் குறைந்திருந்தமை வேதனைதான். தங்கள் தங்கள் வசதிக்கேற்ப வருதலும், வெளியேறுதலும் எம் சமுதாயத்தின் `மாறாத மாற்றங்களில் ஒன்று.

கலைஞர் டேவிட் ராஜேந்திரன் அவர்கள் கௌரவிக்கப்பட்டார். வழக்கமான கௌரவ உரை, சிறப்பு விருந்தினர்கள் உரைகள், பொன்னாடைகள் போர்த்தப்படுதல், ஏற்புரைகள், வரிசையாக இடம்பெறத் தவறவில்லை. அமரர், நடிப்பிசைக்காவலர் கிரகறி தங்கராஜா அவர்களின் இலட்சியம் `கலைஞர்கள் வாழும் பொழுதே, வாழ்த்திக் கௌரவிக்கப்பட வேண்டும்.` என்பதே! அதை இவ்வருடமும் செயல் முறைப் படுத்திய கிறீன் கிங்ஸ் கழகம், பாராட்டுக்குரியது. வருகை தந்தோர் அனைவரினதும் நெஞ்சங்களில் அனைத்தும் நிறைவாகப் பதிவானது.

**– பார்வையாளன் 'முகத்தான்'**

# உலகெங்கும் பரபரப்பூட்டும் யேசு!
# 'The Passion of Christ'

உலகெங்கும் திரையிடப்பட்டுத் தற்போது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'The Passion of Christ' திரைப்படம், அதன் தயாரிப்பாளரான மெல் ஜிப்சனுக்கு ஏராளமான ஆதாயத்தைக் கொண்டு வந்து கொண்டிருக்கும் அதே வேளையில் பலவிதமான கோணங்களில் பலவிதமான சர்ச்சைகளைத் தோற்றுவித்த வண்ணமாகவேயுள்ளது.

யேசுவின் காலத்தைய மொழியான அராமேன் இலும் லத்தீனும் தயாரிக்கப்பட்ட, இரண்டு மணி ஏழு நிமிடங்கள் நீடிக்கும் இத்திரைப்படம் யேசுவின் இறுதிப் பன்னிரண்டு மணி நேர வாழ்க்கையையும்



வர்ணிக்கிறது. சுவிசேசங்களை மையப்படுத்திய கதையாடலுடன், மிகவும் குரூரமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள இத்திரைப்படம் பார்த்தவர்கள் பலரை அதிர வைத்திருக்கிறது.

கொடூரங்களையும், குருதியாற்றையும், சித்திர வதைகளையும் மலிவாகவே வாரி வழங்கியிருக்கும் இத்திரையோவியம் கத்தோலிக்க உயர்பீடங்களால் கண்டனத்துக்கும் உள்ளாகியுள்ளது.

சவுக்கடிகளின் உக்கிரத்தால் உடலெங்கும் தசை பிடுங்கப்பட்டு சிலுவையின் தாங்கொணாத சுமையில் நசியும் யேசுவின் அதியுச்சத் துன்பநிலை கண்டு அழுதவர்களும், படத்தைப் பார்க்க முடியாது அரைகுறையாக விட்டுப்போனவர்களுமாய் எவரையும் இத்திரைப்படம் சினிமாவிற்குள் உள்ளே நுழைந்தவர்கள் போல் பார்வையாளர்களை வெளியே செல்ல அனுமதிக்கவில்லை என்பது மறுக்க முடியாததாகும்.

கடந்த இருபத்தைந்து வருடங்களாக இதுபோன்ற யூத எதிர்ப்புவாதத் திரைப்படம் ஒன்றும் உருவாக்கம் கொள்ளப்பட்வில்லை என்பது அமெரிக்க யூத இனத்தைச் சேர்ந்த புத்தி ஜீவிகளின் காரசாரமான விவாதமாகும். நாசிகள் யூதர்களைக் கடவுள்கொல்லிகள் எனப் பிரச்சாரம் செய்தது போன்றே இப்படமும் செய்கிறது எனவும் தீவிர விமர்சனங்கள் செய்யப்பட்டுள்ளது.



உண்மையில் சினிமா வரலாற்றில் இதுவரையிலும் யேசுவைச் சிலுவையில் அறையும் காட்சி இத்தனை யதார்த்தமாகவும் குரூரமாகவும் காட்சியாக்கப்படவில்லை. அதுமட்டுமன்றி, அளவிற்கதிகமான, வேண்டுமென்றே திட்டமிட்ட வகையில் காட்சிகள் குரூரத்தையும் வக்கிரத்தையும் வாரியிறைக்கின்றன என்பதும் மறுக்கமுடியாததாகும்.

யூதமதக் குருக்களே யேசுநாதருக்குத் தண்டனை வழங்குதவற்கு அனைத்து முயற்சிகளையும் முன்னெடுத்தார்கள் என்றும், ரோம் சாம்ராஜ்ஜியப் ஆட்சிப்பிரதிநிதியான பிலாத் இதில் எவ்வகையிலும் ஈடுபடவில்லையென்பதும் போலான பாணியில் உருவாக்கப்பட்டிருக்கும் கதையோட்டதில், பிலாத்தைப் பற்றிய ஒரு சிறந்த அபிப்பிராயத்தை உருவாக்கி ஒட்டு மொத்தமாக யூதர்களே யேசுவின் சிலுவையேற்றத்திற்கும் காரணமானவர்கள் எனும் கருத்து உருவாக்கம் செய்யப்பட்டிருப்பது வரலாற்று ரீதியாவே பொய்யானது என விமர்சனம் முன்வைக்கப்படுகிறது.

அதுமட்டுமன்றி விவிலியக் கால ஆய்வு நிபுணர்கள் பிலாத்தை மிகவும் கோரமான கொடுங்கோலன் எனும் கருத்தைப் பெருமளவில் ஏற்றுக்கொண்டுள்ளதை இப்படம் மூடிமறைக்கிறது எனவும் கூறப்படுகிறது.

யேசுவின் சிலுவைத்துன்பத்தை, இத்தனை தூரம் கொடூரமாகக் காட்சியாக்கியிருப்பது அவரின் துன்பங்களைக் கூச்சமின்றி, மரியாதையின்றி வெளிப்படுத்துவதாக உள்ளதென்று பல கத்தோலிக்கள் இத்திரைப்படத்திற்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

மத்தியாஸின் சுவிசேசத்தின்படி, யேசுவின் வழக்கின்போது 'இம்மனிதனின் இரத்தம் சிந்தலில் நான் குற்றவாளியல்ல, இனி இது உங்கள் விடயம்' என்று பிலாத் கைகழுவி விடுவதும் பின்னர் யூதமக்கள் கூட்டம் 'அவனின் குருதி எம்மிலும் எம்பிள்ளைகளிலும் கவியட்டும்' என்று கூறுவதும் இத்திரைப்படத்தில் சற்று மிகைப்படுத்தியே காட்டப்பட்டுள்ளது.



உளவியல் ரீதியில் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்குமிடையிலான பகையை துல்லியப்படுத்தும் இதுபோன்ற விவிலியக் கூற்றுகள் அதீதப்படுத்தப்பட்டு யூதர்களை இரத்த வெறியர்களாகக் காட்டுவதற்கு தீவிர கிறிஸ்தவரான மெல் ஜிப்சன் முயன்றிருக்கிறார் எனும் குற்றச்சாட்டுப் வெளிப்படையாகவும் அழுத்தமாகவும் கூறப்பட்டள்ளது.

அமெரிக்கர்களின் திரைப்படங்கள் இரத்தமின்றி உருவாக்கப்படவில்லையென்பது எவ்வளவு தூரம் உண்மை என்பதை உறுதிசெய்யும் பாணியில் இப்படம் 'அமெரிக்க இரத்தப்' பாணியில் உருவாக்கப்பட்டுள்ளது என அலட்சியமாகக் கூறுவாரும் உளர்.

எது எவ்வாறிருப்பினும், தீவிர யூத எதிர்பைச் சுமந்து வரும் திரைப்படம் என்ற விளம்பரம் இப்படத்திற்கு அரபு நாடுகளில் எதிர்பார்க்க முடியாத அமோக வெற்றியை ஏற்படுத்தியிருக்கிறது.

அமெரிக்காவில் இப்படம் வெளியாகியதன் பின்னர் யூத எதிர்ப்பு வாதம் மேலோங்கியுள்ளதெனவும் கருத்துக் கணிப்புகள் வெளிப்படுத்துகின்றன.


ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இத்தனை துராம் எதிர்ப்பலைகள் எழுந்துள்ளபோதும் பல நாட்களாக இத்திரைப்படத்தைக் காண்பிக்கும் திரையரங்குகள் நிரம்பி வழிந்ததையும், இத்திரைப்படத்திற்கான முதலீட்டுடன் ஒப்பிடுகையில் அது இருபது மடங்குகளுக்கும் மேலான வருவாயைக் கொண்டு வந்திருப்பதும் முரண்பாடன விடயங்களாகத் தென்படுகின்றன.



# சிறுவர் முற்றம்

## குறுங்கதை

### இயக்கம்



இரவு.
கடலில் வந்துகொண்டிருந்த படகுகளில் ஒன்று மற்றதைப் பார்த்துக் கேட்டது:
'அதோ... கடற்கரையில் தன்னந்தனியாக நின்று ஒளிவீசும் கலங்கரை விளக்கத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'
'தெரியவில்லையே....' என்றது இரண்டாம் படகு.
முதல் படகு சொன்னது:
'கூட்டமாகத்தான் பணி ஆற்றலாம் என்பதில்லை தன்னந்தனியாகக் கூட ஒருவர் தொண்டாற்றலாம் என்று நமக்கு அது கூறவில்லையா?'
வார்த்தைகளை அது நறுக்கி வைத்தது:
'தனி என்றிருப்பினும் பணி என்றிரு.'

- காசி ஆனந்தன்.

## கவிதை முற்றம்

### க... க... கா கி.. கி... கீ

காகம் கரையுது கக்கக்கா – அது
கூடி வாழுது ஆஹா ஹா!
கிளியும் பேசுது கிக் கிக் கீ – அது
சொன்னதைச் சொல்லும் ஒலிபெருக்கி!
குயிலும் கூவுது குக் குக் கூ –அது
கூவும் அழைப்பு யாருக்கு?
குழந்தையும் சிரிக்குது கெக் கெக் கே –அது
குதிக்குது ஓடுது ஆங்காங்கே!
அன்புடன் உதவிடும் கை கை கை –நீ
என்றும் செய்திடு நற்செய்கை!
கூவுது சேவல் கொக்கரக்கோ–அதி
காலையில் எழுப்புது எழுந்திருங்கோ!
நாயும் குரைக்குது வௌ வௌ வௌ –நீ
நெஞ்சில் ஒழுக்கம் கௌவிக்கொள்!
வாத்துக்கள் ஒலிக்குது க்வாக் க்வாக் க்வாக் – அவை
தினமும் போகுது மார்னிங் வாக்!

வரத. சண்முக சுந்தர வடிவேலு



## தகவல் முற்றம்


### தெரியுமா உங்களுக்கு?

* அன்னம் நூறாண்டுவரை வாழும்.
* பெண் கொசு ஒரு தடவைக்கு 300 முட்டை வரை இடும்
* கருவில் கண்கள்தான் முதலில் தோன்றும்
* சிப்பியில் முத்து விளைய 15 ஆண்டுகள் ஆகும்
* ஒட்டகப் பால் கறந்ததுமே கட்டியாகிவிடும்
* கொசுவின் ஆயுள் மூன்றுவாரங்கள்
* ஈயின் ஆயுள் 10 நாட்கள்
* கழுகு எதையும் கொல்லாது, இறந்ததையே தின்னும்
* ஒரு தலைமுறை என்பது 33 வருடம்
* திரை அரங்குகள் இல்லாத நாடு பூட்டான்
* உலகிலேயே வேகமாக வளரும் தாவரம் மூங்கில்
* சிரிப்பூட்டும் வாயு நைட்ரஜன் ஆக்ஸைடு

## கதை முற்றம்

### கேள்வியும் பதிலும்

ஓர் ஊரில் ஓர் ஆள் இருந்தான். அவன் காலையிலிருந்து கடும் குளிரில் நடந்த களைப்பினால் மாலையில் ஒரு வீட்டைக் கண்டதும், அதன் கதவைத் தட்டினான். வீட்டுக்காரன் கதவைத் திறந்தான். அவனைப் பார்த்து, பயணி 'காலையிலிருந்து நடந்ததால் மிகவும் களைப்பாக இருக்கிறது. அதோடு குளிரும் மிகவும் அதிகமாக இருக்கிறது. இனி தெருவில் இருப்பது என்பதும் முடியாது. ஆகவே இன்று இரவு மட்டும் தங்குவதற்கு இடமும் கொடுத்து, சாப்பாடும் போட்டால் நீங்கள் கேட்கும் பணத்தைக் கொடுக்கத் தயாராக



இருக்கிறேன்' என்றேன்.

அதற்கு வீட்டுக்காரன், 'உனக்கு சாப்பாடு போட்டு படுக்க இடம் கொடுப்பதில் எனக்கு மறுப்பேதும் இல்லை. ஆனால் எனக்குப் பணம் வேண்டாம். அதற்குப் பதில் நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் நீ சரியான பதில் சொல்ல வேண்டும். தப்பாக பதில் சொன்னால் கன்னத்தில் ஓர் அறை அறைவேன்' என்றான்.

வேறு வழியின்றி பயணி இதற்கு ஒப்புக்கொண்டான்.

வீட்டுக்காரன் பயணிக்கு வயிறு நிறையச்



சாப்பாடு போட்டான். தானும் வயிறு நிறையச் சாப்பிட்டான். பிறகு இருவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில், வீட்டுக்காரன், ஒரு மூலையில் படுத்திருந்த ஒரு பூனையைச் சுட்டிக்காட்டி, 'அதுஎன்ன?' என்று கேட்டான். 'அது பூனை' என்றான் பயணி. உடனே வீட்டுக்காரன் பயணியின் கன்னத்தில் ஓர் அறை அறைந்து, 'உன் பதில் தப்பு அது பூனையல்ல வெண்மை' என்றான்.


சிறிது நேரத்திற்கெல்லாம் வீட்டுக்காரன் தூக்குச் சட்டியில் இருந்த தண்ணீரைக் காண்பித்து, 'அது என்ன?' என்று கேட்டான்.

'தண்ணீர்' என்று பதிலளித்தான் பயணி.

'உடனே வீட்டுக்காரன் பயணியின் கன்னத்தில் ஓர் அறை அறைந்து. 'உன் பதில் தப்பு, அது தண்ணீர் இல்ல, சுத்தம்' என்றான்.

சிறிது நேரத்திற் கெல்லாம் வீட்டுக்காரன், கணப்பு அடுப்பில் எரிந்துகொண்டிருந்த நெருப்பைச் சுட்டிக்காட்டி, 'அது என்ன?, என்று கேட்டான்.

'நெருப்பு' என்றான் பயணி. உடனே



வீட்டுக்காரன் பயணியின் கன்னத்தில்

மறுபடியும் ஓர் அறை அறைந்து, 'உன் பதில் தப்பு, அது நெருப்பு அல்ல, சுகம்' என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வீட்டுக்காரன் பரணைச் சுட்டிக்காட்டி 'அது என்ன?' என்று கேட்டான்.

'பரண்' என்றான் பயணி. உடனே வீட்டுக்காரன் கன்னத்தில் மீண்டும் ஓர் அறை அறைந்து, 'உன் பதில் தப்பு, அது உயரம்' என்றான்.

பாவம் பயணிக்கு வலி பொறுக்க முடியவில்லை. ஆகவே வீட்டுக்காரனைப் பார்த்து 'என் மூளை சற்று மழுங்கிவிட்டது என்று நினைக்கிறேன். அதனால் தான் உன் கேள்விக்கு என் பதில்கள் எல்லாம் தப்பாகவே போய்விட்டன. நான் சற்று வெளியில் சென்று இளைப்பாறி விட்டு வருகிறேன், அதற்குப் பிறகாவது நீ கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்ல முடிகிறதா என்று பார்க்கிறேன்' என்றான்.

வீட்டுக்காரன் சரியென்று சொல்லவே பயணி வெளியில் சென்றான். அவன் வெளியே வந்ததும் பூனையும் வெளியே வந்தது.



வெகு கோபமாக இருந்த பயணி பூனையைப் பிடித்து, அதன் வாலில் ஒரு சுள்ளிகளைக் கட்டி அதில் நெருப்பு வைத்தான். நெருப்பைக் கண்டு பயந்து பூனை பரண்மீது தாவிற்று.

உடனே பயணி உள்ளே வந்து, வீட்டுக்காரனைப் பார்த்து, 'வெண்மை சுகத்தை எடுத்துக்கொண்டு உயரத்திற்குப் போயிருக்கிறது. ஆகவே உடனே சுத்தத்தைக்கொண்டு சுகத்தை அகற்று' என்றான்.

வீட்டுக்காரன் ஒன்றும் புரியாமல் திகைத்தான். 'என்ன சொல்லிக்கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டான்.

அதற்கு பயணி அவன் கன்னத்தில் ஓர் அறை அறைந்து, 'இவ்வளவுதானா உன் புத்திசாலித்தனம்! உன் வீடு தீப்பற்றிக்கொண்டு எரிகிறது' என்று சொல்லி விட்டு சென்றுவிட்டான்.

(இது ஒரு யூகோஸ்லாவியக் கதை)

## அறிந்து கொள்ளுங்கள்

### நாடுகளின் சுதந்திரதினம்

| | | |
|---|---|---|
| 1. | ஆப்கானிஸ்தான் | யூலை 4 |
| 2. | ஆஸ்திரேலியா | ஜனவரி 4 |
| 3. | பர்மா (மியான்மர்) | ஜனவரி 4 |
| 4. | பெல்ஜியம் | யூலை 21 |
| 5. | கனடா | யூலை 1 |
| 6. | இலங்கை | பெப்ரவரி 4 |
| 7. | சீனா | ஒக்டோபர் 10 |
| 8. | பின்லாந்து | டிசம்பர் 6 |
| 9. | கிரீஸ் | மார்ச் 25 |
| 10. | இந்தியா | ஓகஸ்ட் 15 |
| 11. | இந்தோனேசியா | ஓகஸ்ட் 17 |
| 12. | இஸ்ரேல் | ஏப்ரல் 3 |
| 13. | இத்தாலி | மார்ச் 26 |
| 14. | ஜப்பான் | ஏப்ரல் 29 |
| 15. | மெக்சிகோ | செப்டம்பர் 16 |
| 16. | நோர்வே | மே 17 |
| 17. | பாகிஸ்தான் | ஓகஸ்ட் 14 |
| 18. | போலந்து | மே 3 |
| 19. | போர்த்துக்கல் | ஒக்டோபர் 5 |
| 20. | பிலிப்பைன்ஸ் | யூலை 4 |
| 21. | சுவிட்சர்லாந்து | ஓகஸ்ட் 1 |
| 22. | ஸ்பெயின் | ஏப்ரல் 10 |
| 23. | தாய்லாந்து | யூன் 24 |
| 24. | துருக்கி | நவம்பர் 1 |
| 25. | அமெரிக்க ஐக்கிய நாடுகள் | யூலை 4 |

- எம். ஹேமா சந்திரன்.

## விடுகதை முற்றம்

### கடந்தவார விடைகள்

1. வைக்கோல் – நெல்
2. ரயில்
3. கத்தரிக்கோல்
4. மெழுகுவர்த்தி
5. முருங்கைமரம்
6. சிலந்திவலை
7. பம்பரம்
8. நிலைக்கண்ணாடி
9. முள்



# எமது விடிவிற்காகத் தமது உயிர்களை...

## மேஜர் எமர்சன் - திருவருள்

பசுமை பொங்கும் வீரஞ்செறிந்த யாழ் வல்வெட்டித்துறையிலே அப்புத்துரை வள்ளிக்கொடி தம்பதியினருக்குப் பதினோராவது செல்வப்புதல்வனாக அவதரித்தவன்தான் எமர்சன். இவனுக்குப் பெற்றோர் இட்ட பெயர்தான் சிவாதனந்த மூர்த்தி. சிவா என்றே வீட்டில் செல்லமாக அழைக்கப்பட்டான்.

வீரஞ்செறிந்த மண்ணில் தவழ்ந்து விளையாடிய இவன் தனது ஆரம்பக் கல்வியை யாழ். மகளிர் மகாவித்தியாலத்திலும் பின்னர் சிதம்பராக்கல்லூரியிலும் கற்கத் தொடங்கினான். பாடசாலையில் எந்தவொரு விளையாட்டானாலும் சரி, பங்கு கொண்டு பரிசில்கள் பெற்றுப் பாராட்டப்படுவான். இவன் படிப்பை விட விளையாட்டிலேயே அதீத திறமை மிக்கவனாக விளங்கினான்.

அவ்வாறு படித்துக் கொண்டிருக்கும்போதுதான் இவனின் ஐந்தாவது சகோதரியின் கணவரை இந்திய அமைதிப்படை என்ற போர்வையில் எமது மண்ணை ஆக்கிரமித்த அரக்கர்கள் இவன் கண்ணுக்கு முன்னால் துடிக்கத்துடிக்கச் சுட்டுக் கொன்றனர்.

அப்போது சிறுவனாக இருந்த போதும் அமைதிப்படையின் இனவெறியாட்டங்களைக் காணத் தவறவில்லை. அதன் பின்னர் தான் இவனுக்குப் போராட்ட எண்ணம் விஸ்வரூபம் எடுத்தது. தன் அத்தானைக் கொன்ற இனவெறியாளர்களைத் தானும் சுட்டுக் கொல்ல வேண்டும் என உறுதியெடுத்துக் கொண்டான்.

உறுதியெடுத்துக் கொண்ட இவன், பின் வந்த காலப்பகுதியில் தன்னை முழுமையாகத் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைத்துக்கொண்டான். அண்ணனின் அணியில் இணைந்து கொண்டான். அண்ணனின் அணியில் இணைந்து கொண்ட இவனுக்கு எமர்சன் எனப் பெயரிடப்பட்டது. இவன் தனது ஆரம்பப் பயிற்சியை யாழ். நகரில் பெற்றுக்கொண்டான். பாசறையில் இவன் மிகவும் துடியாட்டமும் கல்வியில் திறமையும் மிக்கவன். குறும்புகள் செய்து தண்டனைகள் வாங்குவதில் மட்டுமல்லாது ஆசிரியரிடம் நன்மதிப்பும் பெற்றிருந்தான்.

பயிற்சியை முடித்துக் கொண்ட இவன் சில காலம் வரை எதிரியின் நிலைகளை அவதானிக்கவெனப் பலாலி காப்பரணில் விடப்பட்டான். தனக்கு இடப்பட்ட பணியைத் திறமையாகவும் பொறுமையாகவும் செய்தான். எமர்சனின் துடியாட்டத்தையும் திறமையையும் கண்ட பொறுப்பாளர், இவனை ஆகாய வெளிச் சமருக்காக ஓர் அணியின் பொறுப்பாளராக அனுப்பி வைத்தார். அக்களம் அவனுக்கு முதற்களமாக இருந்த போதிலும் மிகத்திறமையாகத் தன் பணியைச் செய்து கொண்டிருந்த வேளை விழுப்புண் ஏற்று மருத்துவ மனைக்கு அனுப்பட்டான். காயத்தை மாற்றி கொண்ட இவனைப் பொறுப்பாளர் கண்ணிவெடிப் படிப்பிற்காகத் தெரிவு செய்யப்பட்ட போராளிகளுடன் அனுப்பி வைக்கிறார்.

இவன் படிப்பில் மிக ஆர்வமாகச் சக தோழர்களுடன் போட்டி போட்டு படிக்கலானான். போராளிகளிடத்தில் அன்பாகவும் ஆதரவாகவும் பழகுவதில் எமர்சனுக்கு நிகர் எமர்சனே தான். இவனுக்கு எவ்வளவு பயிற்சியானாலும் சரி, வேலையானாலும் சரி எப்போதும் சிரித்த முகத்துடனே தென்படுவான். எந்தவொரு கலைநிகழ்வானாலும் சரி தனக்கென்று ஓர் இடத்தை தக்க வைத்திருந்தான். இவன் படிப்பில் சிறந்த புள்ளிகளைப் பெற்றவன் என்ற பெயரில் தேசியத்தலைவர் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டுப் பாராட்டப்பட்டான்.

பின்னர் சிறு காலம் வரை கண்ணிவெடிப் பிரிவினிலே பல கண்ணிவெடிகளை எதிரிக்கு எதிராகப் புதைத்து அவர்களின் முன்னேற்றத்தைத் தடைசெய்தான். இவனது நுண்ணியமான திறமையைக் கண்ட பொறுப்பாளர் இவனை விசேட வேவுப்பிரிவுக்கு அனுப்பி வைத்தார்.எமர்சன் அங்கேயும் தன் திறமையைக் காட்டத் தயங்கவில்லை. இவன் தந்திரோபாய ரீதியில் நிதானமாக எதிரியின் எல்லைக்குள் பல தடைகளைத் தாண்டி அமைதியாகச் செயற்பட்டு வந்தான். இப்படியே இவனது பணி சிலாபத்துறை, மன்னார், காரைநகர், பலவேகய-2, யாழ்தேவி, எனத் தொடர்ந்து கொண்டே சென்றது. இவன் தனக்கு இட்ட பணியைத் திறமையாகவும் உறுதியாகவும் ஆர்வத்துடன் செய்து முடிப்பான். அதே நேரம் தான் செய்யும் பணியில் திருப்தி பெறும் வரை கஸ்ரப்பட்டுக் கொண்டே இருப்பான்.இப்பிரிவிலும் எமர்சன் தலைவரிடம் பரிசில்கள் வாங்கினான். இப்படியாகத்தான் இவனது போராட்டச் சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. இறுதியாக இவன் தன் பணியை யாழ் நகரை அபகரித்த இராணுவத்திற்கெதிராகச் செயற்பட வாய்ப்புத்தரும் படி பொறுப்பாளரிடம் கேட்டுக்கொண்டான். பொறுப்பாளர் அவனுடைய எண்ணத்தைச் செயற்படுத்தத் தவறவில்லை.

எமர்சனுக்குத் தன் ஆசை நிறைவேறுவது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஆம், அவன் புலனாய்வுப் பிரிவிற்குத் தெரிவு செய்யப்பட்டான். தன் நிலத்தை அபகரித்த எதிரியை அழிப்பதையிட்டு எல்லையில்லா மகிழ்வில் துள்ளிக்குதித்தான். பின்னர் இவன் பல இராணுவ காவலரண்களுக்கு மத்தியில் தன் பணியை உற்சாகமாகவும் திறமையாகவும் செய்யத்தொடங்கினான். இப்படியாகச் செய்து கொண்டிருந்த போது தான், எமர்சனின் உயிரை பலியெடுக்க எண்ணியது சிங்களம். 26.08.2000 அன்றும் அவன் வழமைபோல் தன் பணிக்காகச் சென்று கொண்டிருந்தான். அவ்வேளை இராணுவவெறியர்கள் இவனைச் சுற்றிவளைத்து உயிருடன் பிடிக்க முற்பட்ட போது இறுதிவரை சண்டையிட்டு எம்மையும் எம்மக்களையும் விட்டுப்பிரிந்து ஆயிரமாயிரம் மாவீரர்கள் வரிசையில் தன்னையும் ஒருவனாக இணைத்துக் கொண்டான்.

அண்ணா! நீ நேசித்த தாயக பூமி விரைவில் விடியும். அதுவரை உனது இலட்சியங்களைத் தாங்கி அதே உறுதியுடன் இன்னும் பல போராளிகள். நிச்சயம் விடிவு கிட்டும்.

**- போராளி சர்மாவதி** (லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடிப் பிரிவு)

# உன்னத இலட்சியத்திற்காக உயிர் நீத்த அன்னை

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே தியாகதீபம் அன்னை பூபதியின் ஈகம் தனித்துவமானதாகும். இந்திய வல்லாதிக்கம் தமிழீழப் பிரதேசம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டது மட்டுமல்லாது, தமது பிரசாரப்பலத்தைப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திக் கொண்டிருந்தது. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டதை மட்டுமல்ல, லெப்.கேணல் தியாகி திலீபனின் காந்தீய வழியைப் பின்பற்றித் தொடுத்த அகிம்சைப் போரைக் கூட இந்தியாவில் காந்தீயவாதிகள் எனக் கூறிக்கொள்ளும் சிலரைப் பயன்படுத்தித் தனது பிரசாரச் சாதனங்களினூடாக இழிவுபடுத்திக் கொண்டிருந்தது. இவ்வாறான ஒரு நிலையில் தனது மாபெரும் படையை, அமைதிப்படை என்ற பெயரில் தமிழீழ மண் எங்கும் அங்குலம் அங்குலமாக நிறுத்தி மக்களை அச்சுறுத்திக் கொண்டு, தேசவிரோதிகளை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அவர்களின் அராஜகச் செயல்களுக்கு உலக அங்கீகாரம் பெற்றுக்கொடுக்க முயன்றது. எவ்வாறாயினும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்தே தீருவது எனக் கங்கணம் கட்டிச் செயற்பட்டுக்கொண்டிருந்த வேளையில்தான், தன்னால் இயன்ற வகையில் அகிம்சைப் போரின் வழியிலே ஈழத்தமிழர்களின் ஆத்ம ஏக்கத்தை இந்திய தேசத்திற்கு உணர்த்த முன்வந்தார் அன்னை பூபதி.

அன்னை பூபதி ஒரு போராட்ட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட போராளி அல்லர். ஓர் அரசியல்வாதி அல்லர். தீவிர அரசியலோடு தன்னைத் தொடர்புபடுத்திக் கொண்டவரும் அல்லர். பதவி மற்றும் அற்ப ஆசைகளுக்கு அடிமைப்பட்டவரும் அல்லர். அவர் முதுமையின் எல்லையைத் தொட்டு நின்ற ஈழத்தாய். பொதுமக்களில் ஒருவர்.

ஒருபுறம் இந்தியப் படைகள், மறுபுறம் சிறீலங்காப் படைகள், மற்றொரு புறம் தேசவிரோதக் கும்பல்கள் எனக் கொடுத்த நெருக்கடிகளுக்கெல்லாம் சலிக்காது தமது போராட்டத்தை ஒரு மாதகாலம் தொடர்ந்தவர் அன்னை பூபதி அவர்கள்.

- அமைதி காக்க வந்த இந்தியப்படை அதற்கு மாறாகத் தமிழீழத்தில் மேற்கொண்டுவரும் மனித வேட்டைகள் நிறுத்தப்படவேண்டும்,

- நாட்டில் சாந்தி, சமாதானம் ஏற்பட்டு சுமுகநிலை தோன்றத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு நடத்தவேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு அன்னையர் முன்னணி ஏற்பாடு செய்த அகிம்சை வழிப் போராட்டத்தில் 1988ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் திகதி அன்னை பூபதி அவர்கள் தனது உறுதிமிக்க உண்ணாநோன்பில் இறங்கினார்.

மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றிலில் அவர் ஆரம்பித்த போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஆயிரக் கணக்கான தமிழீழ மக்கள் அங்கு வந்து தமது ஆதரவைத் தெரிவித்து இந்தப் போராட்டத்திற்குப் பாதுகாப்பாகவும் நின்றிருந்தனர். எவ்வாறாயினும் மிரட்டி இப்போராட்டத்தைக் குழப்பிவிட இந்தியப் படைகளும் தேசவிரோதக் குழுக்களும் முயன்றவேளையில் அன்னை பூபதி அவர்களினது உறுதியானது, இவற்றையெல்லாம் செயலிழக்கச் செய்துவிட்டது.

இரு கோரிக்கைகளை முன்வைத்து மூட்டப்பட்ட இத்தியாக வேள்வியில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தனது இலட்சியத்தை அடையவேண்டும் என்ற இலக்கில், உணவை இந்த பொய் உடலுக்கு ஊட்டி உயிர் வாழ அவர் விரும்பவில்லை. தமிழ் மக்களின் உரிமைக்கான கோரிக்கைகள் நிறைவேறுவதே தனது இலட்சியம், அதுவே தமிழீழ மக்களுக்குத் தான் செய்யும் தியாகம் என்ற கோட்பாடு அவரது தியாகத்திற்கு அடிநாதமாக விளங்கியது.

இந்திய வல்லாதிக்கப் படைகள் இரக்கம் காட்டவில்லை. அன்னையின் அகிம்சையினை இழிவுபடுத்தினார்கள். அவர்களுக்குப் பெண்களின் மனோதைரியத்தின் வலிமையை உணர்த்தி





நின்றவர் பூபதித்தாய். ஒரு மாதகாலம் அவர் உறுதி தளராது போராட்டம் நடத்தித் தனது இலட்சியப் பற்றையும் தமிழ் மக்களின் விடுதலை உணர்வையும் உலகிற்கு, குறிப்பாகப் போராட்டத்தை அழித்து விட முயன்ற வல்லாதிக்கத்திற்கு உணர்த்தி 1988ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி தனது வித்துடலை இந்த ஈழமண்ணுக்கு ஈந்து சரித்திரத்தில் சங்கமித்தார் அன்னை பூபதி.

பெண்களின் மனோதைரியத்தின் வலிமையை உணர்த்தி நின்ற பூபதித்தாய், தனது இனத்தின் மீதும் தமிழர்களின் விடிவின்மீதும் கொண்ட அளவுகடந்த நேச வைராக்கியத்தினால் தன்னுயிரை விலையாகக் கொடுத்துள்ளார். இவரின் மனத்துணிவு, தேசப்பற்று என்பவற்றின் முன் அமைதிப்படை கதிகலங்கி நின்றது.

இவரது அகிம்சைவழிப் போராட்ட வரலாறு தமிழ் மக்களால் காலங்காலமாகப் போற்றப்படவேண்டியது, போற்றப்படுகின்றது, எதிர்காலத்திலும் போற்றப்படும்.

அன்னை பூபதி தனது அகிம்சைப் போராட்டத்தில் தன்னைத் தற்கொடையாக்கி ஆண்டு பதினாறாக ஆகிவிட்ட போதினிலும் அன்னை தூண்டிவிட்ட சுதந்திரத் தீ சுடர்விட்டு எரிகின்றது. தமிழர் நீண்ட வரலாற்றில் அன்னை நீங்காது நிலைத்திருப்பார்.

வீடுகள், நிலம் மற்றும் Appartements வாங்க
மிகக் குறைந்த வட்டி வீதத்தில் கடனுதவி பெற்றுத்தரப்படும்.

# சம்யுக்தா

*Finance & Investements*
*La Chapelle - Tél. Port.: 06 68 24 61 61*



# மாயோன் எழுதுவது...

மனிதர்கள் உயிர்க்க வேண்டும்
மானுடம் தளிர்க்க வேண்டும்
மனிதருக்கு மேலொரு தெய்வமுமில்லை
மானுடம் போலொரு மெய்மையுமில்லை.

இதனைப் பாடியவர் சித்தர். சில நூற்றாண்டுகளின் முன் வாழ்ந்த கவி வித்தகர் மானுடத்தின் மேன்மையைப் போற்றியவர். மானுடத்தின் வெற்றியினை வெளிக்காட்டியவர்.

இராம இராச்சியத்தைத் தன் மேலான இலட்சியமாகக் கொண்ட கவிச்சக்கரவர்த்தி கம்பன் கூட **மானுடம் வென்றதம்மா** என்று மானுட வெற்றியைத்தான் பாடுகின்றார். மானுடம் வெல்லவேண்டும் என்னும் தன் விருப்பைத்தான் கூறுகின்றார். அவ்வாறு அவர் விரும்பியதும் இப்போது அல்ல, எப்போதோ சொன்னார். சொல்லியும் ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன. அப்போதே, ஆண்டவன் மேல் அதீத நம்பிக்கை கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே- விஞ்ஞானம் வியத்தகு சாதனை புரியாத அந்தக் காலத்திலேயே- மனித மேன்மை தெரியாத அந்தக் காலத்திலேயே மனிதர் அடிமைகளாக நடாத்தப்பட்ட அந்தப் பொழுதிலேயே கம்பரால்

மானுடம் வென்றதம்மா என்று பாட முடிந்தது.

**வெஞ்சமரில் வெற்றி கண்டு**
**அஞ்சலிக்கும் மக்களுக்கு விண்ணுயர் பெரும் கோயில்**
என்று சொல்லப்படுகின்ற தஞ்சைப் பெரும் கோயிலை

இராஜ இராஜசோழன் கட்டியபோது நூற்றுக் கணக்கான மக்கள் அதற்காகப் பலியாகினர் என்று சொல்லப்படுவதுண்டு. இராஜ இராஜசோழன் தனது கௌரவத்திற்கான, அதிகார வெறிக்கான, ஆணவச் செருக்குக்கான சின்னமாகவே தஞ்சைப் பெரும் கோயிலைக் கட்டினான். அதற்காக நூற்றுக்கணக்கான மக்கள் உயிரைச் சிந்தினார்கள். அவர்களினது உடல்களின் மேல்தான் தஞ்சைப் பெருங்கோயிலின் அத்திவாரமே எழுந்தது.

அதே காலத்தில்தான் அவ்வாறு மக்கள் அடிமைகளாக்கப்பட்ட அதே காலத்தில்தான், கவிச்சக்கரவர்த்தி கம்பர் **மானுடம் வென்றதம்மா** என்று பாடுகின்றார். நமது காலத்தில் நமது கவிஞர் **முருகையன்** இப்படிப்பாடுகின்றார்.

**மனிதர்கள் உயிர்க்க வேண்டும்.**
**மானுடம் தளிர்க்க வேண்டும்.**

ஓம். மனிதர்கள் உயிர்க்க வேண்டும். மானுடம் தளிர்க்க வேண்டும். இவையெல்லாம் மனிதர் மீதான- மானுடம் மீதான- பற்றினை வெளிக்காட்டுகின்றன.

மானுடம் வெல்ல வேண்டும், மானுடர் விடுதலை பெற வேண்டும் என்னும் வீறாப்பினை உலகிற்குச் சொல்கின்றது. அதனைத்தானே நம்மூர் **மகாகவியும்** சொல்கின்றார். **வேருக்குள் உறுதி கொண்ட வேம்புகள் மனிதர்.**

மானுடம் ஏன் வெல்ல வேண்டும்? மனிதர் ஏன் விடுதலை பெறவேண்டும்?

இப்படி ஆயிரம் ஆயிரம் கேள்விகள் எழும். மானுடம் மானுடம் என்று நாம் வாய் ஓயாமல் கூறும் மந்திரத்தில் அர்த்தம் இல்லையோ என்று சந்தேகம் வரும். அல்ல, நாம் சும்மா சொல்லவில்லை அர்த்தமற்று ஏதும் பேசவில்லை. மானுடம் மீதான தீராக் காதலில் இருந்தே எம்பாடல் எழும். கார்ல் மார்க்ஸ் என்றால் என்ன, மகாத்மா காந்தி என்றால் என்ன, லெனின், ஸ்ராலின், மாசேதுங், சேகுவேரா போன்ற தோழர்களாயிருந்தாலென்ன, ஈ வே ரா பெரியாராக இருந்தாலென்ன, புத்த பிரான், முகம்மது நபி, இயேசு நாதர் என்கின்ற இறைவன் அவதாரங்கள் என்று எண்ணப் படுபவர்களாயிருந்தவர்கள் என்றால் என்ன, யாவருமே மானுட மேன்மை பற்றி, மனித குல விடுதலை பற்றியே பாடினார்கள்.

இந்தப் பூமி சுழல்வது எதனால், இந்த உலகு இயங்குவது யாரால், இந்த வாழ்வு வளம்பெறுவது எவற்றால், வசந்தம் வருவது யாருக்காக, தென்றல் வீசுவது எதற்காக, சூரியன் தன் சுடர் தருவது ஏன், மழை பொழிவது எதற்கு? இவற்றுக்கெல்லாம் பதில் இறைவன் என்பாயா? இயற்கை என்பாயா? இல்லை என்பேன் நான். இந்த உலகே மனிதர்களுக்கானவை என்பேன் நான். இன்னும் அதனை உறுதியாகச் சொல்வேன். படைக்கப்பட்ட யாவும் மனிதர்களுக்கானவை.

இவற்றுக்கெல்லாம் ஆன்மீகத்தில் அர்த்தம் கிடையாது. விஞ்ஞானத்தில் தான் விளக்கம் உண்டு. **புவியியல் அறிவில்தான் புரிதல் உண்டு. உயிரியல்** விஞ்ஞானத்தில் தான் உண்மை உண்டு. மேலும் நாம் புரிய முயல்வோம்.

ஓர் உணர்வு நம் எல்லோருக்கும் ஒத்துவரக்கூடியதுதான். யாவருமே அதனுள் மூழ்கி எழுவார்கள்தாம். மனிதர் மாத்திரமல்ல, மாடு, ஆடு, பல்லி, பறவை எவைதான் என்றாலும் அந்த உணர்விலிருந்து அவை தப்பி விடமுடியாது.

என்னதான் அந்த உணர்வு? எதனுள்தான் நாம் மூழ்கி எழுகின்றோம்?

சந்ததியை நாம் பெருக்குகின்றோம். அதுதான் அந்த உணர்வு. சந்ததியைப் பெருக்குவதற்கான அந்த சாகசத்தில் நாம் மூழ்கி

எழுகின்றோம். ஆயிரம் சொற்கள் நம்மிடம் உள்ளன. மனிதர்களிடம் உள்ளன. அத்தனையும் சந்ததியைப் பெருக்கும் சாகசத்திற்கான சொற்களே. அழகு என்கின்றோம். வீரம் என்கின்றோம். ஆண்மை என்கின்றோம். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று நாற்குணங்களைச் சொல்கின்றோம். சிற்றிடை என்றும், அகன்ற தோள்கள் என்றும் இன்னும் அங்கங்களை எல்லாம் அழகாக வர்ணிக்கின்றோம். அத்தனையும் சந்ததி பெருக்கும் சாகசச் சொற்களே!

அட, காதல் என்ற சொல்லில் கூட ஒளிந்திருப்பது காமம்தான். காமத்தின் இறுதி இலக்கு சந்ததி பெருக்கல்தான். மனிதராக இருந்தமையால், பகுத்தறிவு மிகுந்தமையால் நாகரிகம் தெரிந்தமையால், சந்ததி பெருக்கும் சாகசச் சொல்லை காதல் என்று கண்ணியமாய்ச் சொல்கின்றோம். மிருகங்களிடம் சந்ததி பெருக்கும் இந்தச் சாகசச் சொல் இல்லை என்று நம்புகின்றோம். சொல் இல்லையோ செயல் இருக்கும். அது நமக்குத் தெரியாது. ஆனால் தாவரங்கள் முதலான ஏனைய உயிரிகள் தம் சந்ததியைப் பெருக்க எத்துணை சாகசம் செய்கின்றன. ஒன்றா, இரண்டா, ஒவ்வொன்றாய்ப் பார்ப்போமா?

தேங்காயைச் சுற்றி பொச்சு சூழ்ந்திருக்கும் மர்மம் என்ன? தென்னையானது நீர் நிலைகளின் அயலில் முளைக்கும் ஒரு தாவரம். தென்னை தன் சந்ததி பெருக்க வேண்டுமெனில் அதன் வித்து நீரில் மிதக்கும் ஆற்றல் பெற்றிருக்கவேண்டும். நீரில் மிதந்து, இன்னோர் இடம்பெயர்ந்து, நீர் நிலைகளின் அருகில் நிலத்தில் ஒதுங்கி, நிலைபெற்று சந்ததி பெருக்கும்.

பொச்சு இருக்கும் காரணம் அது மாத்திரம் தானா? இல்லை, இன்னோர் காரணமும் உண்டு. தேங்காய் ஓடால் ஆனது. தென்னை உயரே இருப்பது உயரே இருக்கின்ற தென்னையிலிருந்து விழும் தேங்காய் உடையாது இருப்பதற்காக, உடைந்து தம் சந்ததி பெருக்க வசதியில்லாமல் போய்விடக்கூடாது என்பதற்காகத் தேங்காயைக் சூழ்ந்து பொச்சு இருக்கிறது.

தென்னை போன்ற அதே உயரம்தானே பனையும். அது ஏன் அப்படி இருக்கவில்லை? அதாவது பனம்பழமும் பொச்சு சூழ்ந்து இருக்கவில்லை. அதன் அம்சம் வேறு விதமாகவல்லவா இருக்கின்றது.

தென்னை நீர் நிலைகளின் அயலில் வளருமெனில் பனை வரண்ட நிலத்தில் அல்லவா வளர்கின்றது. தென்னையின் வித்து நீரில் மிதந்து இடம்பெயருமென்றால், வறண்ட நிலப் பனையின் வித்து இடம்பெயர வசதியில்லையே! அதனால்தான் பனையினது பழம் இனிமையாக இருக்கின்றது. முகர்ந்து பார்த்தால் அதன் மணம் மூக்கைத் துளைக்கின்றது. விலங்குகள் விரும்பி வரத்தக்க அத்தனை

அம்சங்களையும் அது தன்னுள் வைத்திருக்கின்றது. இனிமை நிறைந்த பனம்பழத்தைச் சப்பியபடியே ஆடு, மாடு போன்ற விலங்குகள் நடைபயில்கின்றன. பனம் விதையை வேறு இடத்துக்கு நகர்த்துகின்றன. விதை விட்ட இடத்திலிருந்து பனை முளைக்கின்றது. அங்கிருந்து அவை சந்ததி பெருக்குகின்றன.

பனைமரம் உயரமாய் இருந்தாலும் பனம் விதையின் ஓடு தடிப்பாக உள்ளது. அதனால் உயரே இருந்து விழுந்தாலும் உடையாது.

அப்படித்தான் மாம்பழம், பலாப்பழம், பப்பாசிப்பழம் என்று இனிமை நிறைந்த எல்லாப் பழங்களும், தம் சந்ததி பெருக்குகின்றன.

அப்படியென்றால் இனியனவாய் உள்ள வாழைப்பழம் விதைகொண்டு விளையவில்லையே!

அதனால்தான் அந்த வாழை தன் அடியிலிருந்து, அதாவது தன் கிழங்கிலிருந்து குட்டிகுட்டியாய் ஈன்று சந்ததி பெருக்குகின்றது. நாயுருவியும், பூனைவிறாண்டியும், நாம் அணியும் ஆடையிலும், ஏனைய விலங்குகளின் தோலிலும், கவ்விப்பிடித்து கூட வருவதன் மர்மமும் சந்ததி பெருக்கம் சாகசம்தானே?

நெருஞ்சியும், சப்பாத்தியும், இன்னும் எஞ்சிய எல்லா முள்ளுகளும், நம் காலில் குத்தி, கடுப்பு வரச்செய்து, நாம் அதனைப் பிடுங்கித் தூர எறிய, விழுந்த இடத்திலிருந்து அவை சந்ததி பெருக்குகின்றன. இல்லையா? விலங்குகளின் கால்களில் முள் தைத்து, விலங்குகள் வேறிடம் நகர்ந்து, அங்கு காலை உதற, அங்கு உயிர் முளைக்கின்றது. சந்ததி பெருகுகின்றது.

குருவிச்சையின் விதை ஒட்டும் தன்மை கொண்டதன் அர்த்தமும் அதுவே. குருவியும், கிளியும், குயிலும் , மைனாவும், தான் அமர்ந்த மரத்தில், குருவிச்சம்பழம் கண்டு, அதைக் கொத்தி உண்டு, இன்னோர் மரத்திற்குப் பறந்து அமர்ந்து, தன் சொண்டை அந்த மரக்கிளையில் தேய்க்கின்றபோது, ஒட்டிவந்த குருவிச்சை விதை, அந்த மரத்தில் ஒட்டிக்கொள்கின்றது. உயிர் எழுகின்றது.

கொவ்வைப் பழம் சிவந்து இருப்பதும் மாம்பழம் மஞ்சளாய் கனிந்து இருப்பதும், பறவைகளைக் கவரத்தானே! கவர்ச்சி காட்டி தம் சந்ததியைப் பெருக்கத்தானே!

மலரினில் மணம் இருப்பதும், பூவினுள் தேன் இருப்பதும், மலர் பல்வகை நிறம் கொண்டிருப்பதும் எதற்காக? யாவும் தம் சந்ததி

பெருக்க.

மலர் மணமாய் இருந்தால், நல்ல வாசனை வீசினால் வரும் வண்டைக் கவரலாம். பல்வகை நிறம் கொண்டு அழகுற இருந்தால், பறவைகள் பூச்சிகளைக் கவரலாம். அதனுள் தேன் இருப்பது, வந்த வண்டு, பூச்சி, பறவை உண்ணுவதற்காக தேன் உண்பதற் ஊடாக மகரந்தச் சேர்க்கை நிகழ்கின்றது. மகரந்தச் சேர்க்கையினூடாக பிஞ்சு வைக்கின்றது. காயாகின்றது. கனிகின்றது. விதையாகின்றது. விளைகின்றது. சந்ததி பெருகுகின்றது.

**இலவம் பஞ்சு காற்றில் பறப்பதும்**
**இலந்தைப் பழம் இனிப்பாய் இருப்பதும்**
**உலவும் தென்றல் மகரந்தம் சுமப்பதும்**
**உடைபடாது தென்னம் பழம் வீழ்வதும்**
**அலகில் பறவைகள் விதைகள் சுமப்பதும்**
**அணில்கள் ஓடிப் பழங்கள் கோதுவதும்**
**உலகில் நிகழும் அனைத்துச் செயலும்**
**ஒன்றே சொல்லும். சந்ததி பெருக்கும்.**

மனிதர் கூட இத்தனை சாகசம் செய்வர். தம் சந்ததி பெருக்க. ஆடை அணிகலன் பூண்டு தம் அழகைப் பெருக்குவர். வாசனைத் திரவியம் பூசி மற்றோரை வசீகரிக்கச் செய்வர். தம்மைக் கவர்ச்சிப் பொருளாய் பிறர் காணச் செய்வர். அத்தனையும் எதற்கு? அதைச் சொல்வதில் என்ன வெட்கம்? சந்ததிப் பெருக்கம்தான் இந்த சாகசத்தை நிகழ்த்துகின்றது. இதனைக் கொச்சையாகப் பார்க்க எந்தத் தேவையும் எழவில்லை. ஒன்றை உணர்வோம். இது உண்மை. இது இயற்கை. இது யதார்த்தம். இதில் கூச்சப்படவோ சொல்வதில் வெட்கப்படவோ எதுவும் இல்லை.

சந்ததி பெருக்குவோம். அது சரிதான். வல்ல சந்ததியாம் வாழ்வை வெல்லும் சந்ததியாய், நல்ல சந்ததியாய், நன்மை விளைக்கும் சந்ததியாய் ஆக்குவோம்.

வாழ்வுதானே முக்கியம். அதன் வளம்தானே முக்கியம். மானுட மேன்மை மிகுந்த, மானுட விடுதலை நிறைந்த வாழ்வுதானே வேண்டும். அதுதானே நம் ஏக்கம்.

ஆனால் பாருங்கள். இதனைக் கேளுங்கள். நம்மீது திணிக்கப்பட்ட சமரினால் சந்ததிகள் அழிக்கப்படுகின்றன. வேரோடும், வேரடி மண்ணோடும், விழுது விட்ட வாழ்வோடும், வீசி எறிபடுகின்றோம். வீணே அழிகின்றோம். வாழ்வு கருகுகின்றோம்.

உலகம் முழுவதும் இதுதானே நிகழ்கின்றது. பெரும்பான்மையோர் ஒடுக்கப்படுகின்றனர். அடக்கப்படுகின்றனர். மானுடம் மிதிக்கப்படுகின்றது. மனிதம் அழிக்கப்படுகின்றது. அதிகாரவர்க்கம் தன் அனைத்து வளங்களையும் பயன்படுத்தி, அதனைத் தானே செய்கின்றது. மானுட சந்ததியைச் சாக்காட்டுகிறது.

மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால், நிறத்தின் பெயரால், குலத்தின் பெயரால், மானுடம் கருக்கப்படுகின்றது.

அல்ல என்று நாம் எழமாட்டோமா? ஆகாவென்று பொங்கமாட்டோமா? சீறிச் சினக்கமாட்டோமா? சீற்றம்கொள்ள மாட்டோமா? வாழ்வு நமதாக வேண்டும் அல்லவா? வசந்தம் வீசவேண்டுமல்லவா? வாருங்கள் தோழர்களே. நாளை நமக்காக்குவோம். இந்த நாட்டையும் நமதாக்குவோம். மனிதர்களுக்காக்குவோம்.

வாருங்கள் தோழர்களே.

# குழந்தை வளர்ப்பு: ஒரு திறவு கோல்

## மேலைத்தேயக் குழந்தை வளர்ப்புப் பற்றிய ஒரு பார்வை

## - சில பிரச்சினைகள் -

ஜெயசக்தி பத்மநாதன்


*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

இப்போது பெற்றோர் 'நீ எம்மில் தங்கியில்லாமல் தனியாக உன் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள ஆரம்பிக்கலாம். ஆனால் எம் அன்பும், நேசிப்பும், அக்கறையும் உன் மீது எப்போதும் இருக்கும் என்பதை மறவாதே' என்பதை பிள்ளை உணரும்வகையில் நடந்து கொள்ள வேண்டும். இப்பருவத்தில் நீ உன்னைப்பற்றி சிந்திக்கவும், தனியாக தங்கியிருக்காமல் வாழ ஆரம்பிக்கத் தொடங்குவது பற்றி எனக்கு மகிழ்ச்சி. நீ கோபம் கொள்ளாமல் ஆனால் அது உன்னையோ, மற்றவர்களையோ பாதிக்கக் கூடாது என்பதற்காக உன்னைக் கவனிக்க என்னை அனுமதி. நீ இல்லை-வேண்டாம் போன்ற வார்த்தைகளை அவை உண்மையாக உனக்குத் தேவையாக இருக்கும் பட்சத்தில் பாவிக்கலாம். நீ உன்னைப் பற்றி உன்னைச் சூழ உள்ளவை பற்றி சிந்திக்கவும் தீர்மானம் எடுக்கவும் ஆரம்பிக்கலாம். நீ இப்போது ஒரே நேரத்தில் சிந்திக்கவும் உணரவும் கூட முடியும். உனக்கு எப்போது எது வேண்டும் என்பது பற்றி உனக்குத் தெரியக்கூடும். அதுபற்றி எனக்கும் சம்மதமே. அதே நேரம் உனக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் என்னைக் கேட்கலாம் என்பதை மட்டும் மறவாதே' என்பதை அறியப்படுத்தும் விதமாகப் பெற்றோர் நடந்துகொள்ளவேண்டும்.

### 3-6 வயது வரை (தனித்து சுய அடையாளமும்)

'இந்தப் பருவத்தில் குழந்தை தனக்கான அடையாளத்தைப் பெற்றுக்கொள்கின்றது. இந்தப் பருவத்தில் உன் சுய அடையாளம்-தனித்துவம் எதுவாக இருந்தபோதும் உன்னை உனக்காக நான் நேசிக்கிறேன் என்பதை பிள்ளை உணரும்படி பெற்றோர் நடந்துகொள்ளவேண்டும்' என்று ஜான்





கூறுகின்றார். 'நீ உன்னை `யார் என்று அடையாளம் கண்டு கொள்ளும் உன் போராட்டத்திற்குத் தேவையான நேரத்தையும் இடைவெளியையும் எடுத்துக்கொள். அதே நேரம் மற்றவர்கள் அவர்களின் அடையாளங்கள் எது என்பதையும் அறிய முயற்சி செய். நீ உன் சக்தியை உணர்ந்தவனாக வளரலாம். அதே நேரம் நீ உன் இயல்பான அடையாளத்தை உணர்ந்து கொள்ளும் போராட்டத்திற்கு உதவும் வகையிலான எந்த உதவியையும் தர நான் தயாராக இருக்கிறேன் என்பதை நீ மறவாதே. அதில் வெற்றியடைய நீ பல முயற்சிகளைச் செய்யலாம். அது தவறில்லை. உன் நடத்தைகளின் முடிவுகள் எவ்வாறு இருக்கும் என்பதைக் கூட அதிலிருந்து நீ கற்றுக்கொள்வாய். உதாரணமாக, சக பிள்ளை ஒன்றை அடித்தால் அது தவறு என்பதை மற்றவர்கள் உனக்கு உணர்த்துவர். அந்த செயற்பாட்டிலிருந்து 'நீ அடித்தல் தவறு' என்ற பாடத்தைக் கற்றுக்கொள்கின்றாய். பின் நாளில் அது உன் நடத்தையைத் தீர்மானிக்கும். உன் எல்லா உணர்வுகளையும் நான் மதிக்கிறேன். நீ எது உண்மை என்பதையும், எது தேவை என்பதையும் அதிலிருந்து கற்றுக்கொள்கிறாய். நீ யாராக உருவாகிறாயோ அவனையே நான் விரும்புகின்றேன்' என்பதை போன்ற செய்திகளைப் பிள்ளை உணரும் வண்ணமாக நடந்து கொள்ளவேண்டும்.

பிள்ளையின் இந்த உருவாக்கச் செயற்பாட்டில் பெற்றோரின் பங்கு கணிசமானது. அதன் சீர்படுத்தப்பட்ட நடத்தைக்கான பொறுப்பு பெற்றோரையே சார்ந்தது. பிள்ளை தானாக உருவாவதில்லை. அது பார்த்ததை, உணர்ந்ததை, கேட்டதைப் பார்த்தே உருவாகின்றது. பிள்ளைக்கான சரியான சீர்படுத்தல் பிள்ளையின் ஆளுமை உருவாக்கத்தில் கணிசமான பங்கை வகிக்கின்றன. உதாரணமாக, கெட்ட வார்த்தைகளைச் சாதாரணமாகப் பேசும் குடும்பத்தில் உருவாகும் பிள்ளை கெட்ட வார்த்தைகளைப் பேசுதல் இயல்பானது. அது குழந்தையின் தவறல்ல. பெற்றோரின் தவறு. அதனைக் குழந்தையின் சுய அடையாளமாகப் பார்த்தல், தவிர்க்கப்படவேண்டும். குழந்தையின் சுய அடையாளம் என்பது இதிலிருந்து வேறுபட்டது. அது குழந்தையின் தனிப்பட்ட திறமை, பலம், ஆற்றல் போன்றவற்றோடு சம்பந்தப்பட்டது. உதாரணமாக, குழந்தை ஒன்று இயல்பாகவே அனைவரோடும் கலந்து பழகுதல் அல்லது குறிப்பிட்ட ஒரு விளையாட்டுப் பொருளில் ஆர்வம் காட்டுதல் குழந்தையின் தனிப்பட்ட அடையாளம். இவை போன்றவற்றிலிருந்து குழந்தையின் சுய அடையாளத்தைக் காணக் கூடியதாக இருக்கும். ஆனால் பொருட்களை வீசி எறிதல், அழுது சாதித்தல் போன்றவை பழக்கத்தாலும் சூழலாலும் பெற்றோரின் நடத்தையாலும் உருவாகுபவை. இந்த அடிப்படைவேறுபாட்டை பெற்றோர் புரிந்துகொள்ளவேண்டும்.

வளர்ந்த நாடுகளில் குழந்தை வளர்ப்பு முறையை எடுத்துப் பார்த்தால் தனித்துவம் (own idendity), சுதந்திரத்திற்கான உரிமை (Independant) ஆகியவற்றுக்குக் கூடுதலாக அக்கறை செலுத்தப்படுவதை அவதானிக்கலாம். ஆனால் வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை அதன் பண்பாடு, சூழல், சமூகப் பின்னணி, பாரம்பரிய சிந்தனைகள், விழுமியங்கள் என்பன குழந்தைகளைத் 'தங்கிவாழும்' நிலைக்கே தள்ளியுள்ளன. இறுக்கமான நம் சமூகக் கட்டமைப்பு, உறவுகளுக்கு நம் சமுதாயம் கொடுக்கும் முக்கியத்துவம் ஆகியன இன்னமும் அந்நிலையைப் பேண உதவுகின்றன. தியாகத்துவம்,பொறுப்புணர்வு என்ற பதங்களுக்கு நம் சமூகம் கொடுக்கும் அர்த்தம் மகத்தானதும் தனித்துவமானதுமாகும்.

குறிப்பாக நம் தாய் நாட்டில் பல தாய்மார் பாசத்தின் நிமித்தம் 3 1/2, -4 வயதிலும் குழந்தைக்குச் சாப்பாடு தீத்திக்கொண்டிருக்கும் காட்சியைச் சாதாரணமாகப் பார்க்கலாம். அதன் வளர்ச்சிப் போக்கை அன்பு என்ற பெயரால் அடைத்து பிள்ளைக்கு கெடுதலையே செய்துகொண்டு இருக்கிறார்கள். இதில் அவதானிக்க வேண்டிய அம்சம் என்னவென்றால் அன்பு என்ற அம்சமே வளர்ந்த நாடுகளில் தனித்துவத்தை வளர்க்க அதுவே வளர்முக நாடுகளில் Depandancy ஐ (தங்கி வாழ்தலை) வளர்த்து விடுகின்றதென்பதாகும். 1 1/2, -2 வயதுக் குழந்தை தன் உணவைத் தானே உண்ணும் என்பதும், 3 வயதுப் பிள்ளை தன் உடையை தானே போட்டுக் கொள்ளவும் தன் சப்பாத்துக்களை தானே அணிந்துகொள்ளவும் முடியும் என்பதும் ஒரு கசப்பான உண்மையாக இருக்கலாம்.

குறிப்பாக, அவுஸ்திரேலியா போன்ற வளர்ந்த நாடுகளில் சொந்த-தனக்குள் இருக்கின்ற தன்னை (own Idendity) ஐ குழந்தைகள் கண்டுபிடித்துக்கொள்வதற்கு குழந்தைகளுக்கான கதைப் புத்தகங்கள் கணிசமான பங்கை ஆற்றுகின்றன. உதாரணமாக, Who You are என்ற 3-5 வயதுக்கிடைப்பட்ட குழந்தைகளுக்கான புத்தகம் ஒன்றிலிருந்து சுருக்கமான சாராம்சத்தின் ஒரு பகுதியைக் கீழே தருகிறேன். அது சிலவேளை பிள்ளைகளுக்கு மட்டுமன்றி வளர்ந்தவர்களுக்கும் இது பொருத்தமாக இருக்கலாம்.

> *மேலைத்தேய நாடுகளில் தனித்துவத்தை ஊட்டி வளர்ப்பதன் எதிர்விளைவு சுயநலம் என்ற எல்லைக்கோட்டைப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தொட்டு விடுகின்றன. இத்தகைய நாடுகளில் 13–14 வயதுகளில் பிள்ளைகள் தம் வாழ்வை அமைத்துக்கொண்டுபோய் விடுவதிலும் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் பெற்றோர் தனியார் விடுதிகளில் தம் இறுதிக் காலத்தைக் கழிக்க நேரிடுவதிலும் போய் முடிந்து விடுகின்ற அதேவேளை நம் நாட்டுக் குழந்தைகள் தம் வாழ்நாளில் பெரும் பகுதியைப் `பெற்று வளர்த்த கடமையை` கழிப்பதிலேயே கழித்து விடுகின்றன என்பதும் விவாதத்திற்குரிய விடயமாகும்.*

நீ யார்?

நீ நீதான்

உன்னைப் போல் இந்த உலகில் வேறொருவர் இல்லை.

நீ மற்றவர்களில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறாய் என்று எப்போதாவது சிந்தித்ததுண்டா?

நீ தனித்துவமானவன்

உனக்கெனத் தனியான நிறமும் தலை மயிரும், கண்களும் உள்ளன.

வேறொருவரும் மிகச் சரியாக உன்னைப் போலில்லை.

நீ சிலவேளை நீ ஓரளவு உன் அம்மாவை போலவோ அப்பாவைப் போலவோ அல்லது சகோதரனைப் போலவோ சகோதரியைப் போலவோ இருக்கலாம்.

சில வேளை ஒரே மாதிரியான நிறம், கண்கள், கூந்தலை நீ கொண்டிருக்கலாம்.



இரட்டையர்களில் கூட ஊன்றிப் பார்த்தாயானால் வேறுபாட்டை நீ காண்பாய் என்பது உனக்குத் தெரியுமா?

உனக்கென்று தனியான பெயர் உண்டு.

உனக்கென்று சொந்தக் குரலும் சிந்தனைகளும் நோக்குகளும் உள்ளன.

உனக்கு எது பிடிக்கும்

எது பிடிக்காது என்பது பற்றி உனக்குத் தெரியும்.

உனக்கு மட்டுமே தெரியும்.

ஆனால்

நீ எதை உணர்கிறாய் என்பது உனக்கு மட்டுமே தெரியும்.

நீ எப்போதாவது கவலையாகவோ, பயமாகவோ உணர்ந்தால் அதனை யாராவது உன் குடும்பத்தில் ஒருவருக்கு அல்லது உன் நம்பிக்கையான நண்பருக்கு அதனை தெரியப்படுத்து.

மனதில் உள்ளதைக் கதைப்பது உன்னை இலகுபடுத்தும்.

பொம்மையை அணைத்துக்கொள்வது அல்லது ஒரு செல்லப் பிராணியை வருடிக்கொடுப்பது கூட உன்னைச் சமாதானமுறச் செய்யும்.

நீ மிக முக்கியமானவன்

உன் குடும்பத்தினரும். நண்பர்களும் உனக்கு முக்கியமானவர்களாக இருப்பதுபோல் நீயும் மிக முக்கியமானவன்.

### பண்பாட்டு முரண்பாடுகள்

இத்தகைய வளர்ந்த நாடுகளில் வளர்ப்பு முறையை நம் நாட்டுப் பண்பாட்டின் பின்னணியில் பார்க்கும்போது சில பண்பாட்டு முரண்பாடுகளைப் புறக்கணித்து விட்டுப் போக முடியாத நிலை ஒன்று உள்ளது.

உதாரணமாக, மேலைத்தேய நாடுகளில் தனித்துவத்தை ஊட்டி வளர்ப்பதன் எதிர்விளைவு சுயநலம் என்ற எல்லைக்கோட்டைப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தொட்டு விடுகின்றன. இத்தகைய நாடுகளில் 13-14 வயதுகளில் பிள்ளைகள் தம் வாழ்வை அமைத்துக்கொண்டுபோய் விடுவதிலும் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் பெற்றோர் தனியார் விடுதிகளில் தம் இறுதிக் காலத்தைக் கழிக்க நேரிடுவதிலும் போய் முடிந்து விடுகின்ற அதேவேளை நம் நாட்டுக் குழந்தைகள் தம் வாழ்நாளில் பெரும் பகுதியைப் `பெற்று வளர்த்த கடமையை` கழிப்பதிலேயே கழித்து விடுகின்றன என்பதும் விவாதத்திற்குரிய விடயமாகும்.

அதே வேளையில் மேலைத்தேய பண்பாட்டுச் சூழலில் வாழும் தமிழ் குழந்தை ஒன்று அந்நியப் பண்பாட்டின் குறிப்பிட்ட ஒரு செயற்பாட்டில் ஆர்வத்தையும் திறமையையும் வெளிக்காட்டும்போது அதற்கு நாம் எத்தகைய ஆர்வத்தை அல்லது தடையை ஏற்படுத்தப் போகிறோம் என்பதும் அடுத்த விவாதத்திற்குரிய அம்சமாகும். உதாரணமாக, ஆங்கிலப் பாடலையும் ஆங்கிலேய நடனத்தையும் இயல்பாக வெளிக்காட்டும் தமிழ் பெண் குழந்தை ஒன்று எத்தகைய சவாலைச் சமூகத்தில் சந்திக்கப் போகிறது? அதனுடைய ஆர்வம், திறமை, அதனை வெளிப்படுத்த அக்குழந்தை ஏற்படுத்திக்கொண்ட முயற்சிகள் (அவுஸ்திரேலிய பண்பாட்டில் அது ஒரு திறமையான விடயமாகும்) ஒரு புறமாகவும், நம் நாட்டுப் பின்னணியில் பெண்பிள்ளை, 'அதன் இத்தகைய போக்கு?' இவ்வாறு வளருமிடத்து அப் பெண் பிள்ளையின் எதிர்காலம் திருமணம் போன்ற அம்சங்கள், நம் சமூகம் அப்பெண் குழந்தையை எத்தகைய விதத்தில் ஏற்றுக்கொள்ளும் என்பதும் கூட ஒரு விவாதத்திற்குரிய அம்சமாகவே உள்ளது.

நன்றி: மல்லிகை

# RESTAURANT HARIHARAN

## குறைந்த விலையில் சிறந்த உணவுகள்

25 அல்லது 50 சாப்பாடுகள் உடனுக்குடன் தயார் செய்து கொடுக்கப்படும்



**இறைச்சிச் சாப்பாடு**

பிரியாணிச் சோறு
ஆட்டிறைச்சிக் கறி
கோழிக்கறி
கத்தரிக்காய்க் கறி
பருப்பு
வெங்காயச் சம்பல்
கோழிப் பொரியல்
நண்டு வறை
Salade ஜெலி பலவகை கலர்கள்

**சைவச் சாப்பாடு**

1. Basumathi அரிசியில் சோறு
3. கத்தரிக்காய் கறி
4. கரணைக்கிழங்கு பிரட்டல் கறி
5. பருப்பு பால் கறி
6. கோவா அல்லது வெங்காயப்பூ சுண்டல்
7. வெங்காயச் சம்பல்
8. அச்சாறு
9. வடை
10. பாயாசம்
11. அப்பளம்
12. மிளகாய்ப் பொரியல்
13. வாழைக்காய் பொரியல்

**சிற்றுண்டிகள்**

| | |
|---|---|
| வடை | 00 € 50 |
| Rol | 00 € 60 |
| Samusa | 00 € 60 |
| Samusa மரக்கறி | 00 € 60 |
| கடலைவடை | 00 € 50 |
| பகோடா | 4 € 70 |
| மிக்சர் | 5 € 20 |
| கேசரி | 00 € 50 |

**அன்பளிப்பு**

* 200 சாப்பாடுக்கு
20 சாப்பாடு இலவசம்
* 300 சாப்பாடுக்கு
30 சாப்பாடு இலவசம்


**அன்பளிப்பு**

* 500 சாப்பாடு எடுத்தால் T.T.N தொலைக்காட்சி பார்ப்பதற்கான ஒரு அட்டை அன்பளிப்பு
* பிறந்தநாள் கொண்டாட்டமாக இருந்தால் - பிறந்தநாள் நடைபெறுபவரின் பிறந்தநாள் வாழ்த்து T.T.N இல் இலவசமாக எம் மூலம் ஒளிபரப்பப்படும்.

- 100 க்கு மேல் சாப்பாடு எடுத்தால் இல்லம் தேடி கொடுக்கப்படும்
- எம்மிடம் சாப்பாடு எடுத்தால் சாப்பாடு பரிமாறும் சில்வர் தட்டுக்களை நாங்கள் தருவோம். (500 சாப்பாட்டுக்கு 500 தட்டு)
- கறிகள் போடும் சில்வர் பாத்திரங்கள் எம்மிடம் வாடகைக்கு உண்டு

**உரிமையாளரின் நேரடி கவனிப்பில் இன்றே நாடுங்கள்**

# ஹரிகரன்



**20, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle.**
**Telephone: 01 42 09 06 30 / Portable: 06 67 14 46 39 - Mahendran**

# T.M.S. SATELLITE

## தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு

## சிறப்பு மலிவு விற்பனை

2 காட் (Carte) போடக் கூடிய

**PIXX** டிஜிட்டல் டெக்கோடர்

~~280€~~

**149€**




**NOKIA**

2 காட் (Carte) போடக் கூடிய

NOKIA 230S Mediamaster

~~310€~~

**225€**



*Recevez tous les programmes satellite numériques.*

**TTN Carte ம் பெற்றுக்கொள்ளலாம்**

இச் சலுகை →

30.04.2004 வரை

**T.M.S.**

**33, Bd. de la Chapelle**
**75010 Paris.**
**Tél: 01 53 26 38 12**
**Portable: 06 11 15 30 00**

விடுதலையையும் அதற்காக நடாத்தப்பட்டுவரும் போராட்டத்தையும் நேசிக்கும் உலகில் வாழும் ஒட்டு மொத்தமான தமிழ்மக்களையும் கவலை கொள்ள வைத்த, பதற்றமுற வைத்த ஒரு பிரச்சினை நீக்கப்பட்டுள்ளது.

கருணாவினால் தோற்றுவிக்கப்பட்ட அந்த நெருக்கடி நிலை, தமிழ் மக்கள் சற்றும் எதிர்பார்த்திராத ஒன்று. பிரச்சினை வெளியே இருந்து எப்பவும் வரலாம் என்பது போராடும் தமிழ்மக்கள் எதிர்பார்த்திருக்கும் விடயம்தான். உள்ளேயிருந்து இப்படி ஒரு வடிவத்தில் வரும் என எவரும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

தமிழோசைக்கு வழங்கிய பேட்டியொன்றில் தான் தனது பிரதேசத்திலிருந்து வெளியேறப் போவதில்லை எனச் சூளுரைத்தார்.

'விடுதலைப் புலிகள் இயக்கம் எவ்வளவு கடும் போக்கான இயக்கம் என்பது உங்களுக்குத் தெரியும், நான் எனது உயிரை துச்சமென மதித்தே இந்த முடிவினை எடுத்தேன்' என்று அவர் கூறினார். இந்தியப் பத்திரிகையொன்றிற்குப் பேட்டியளிக்கையில், தன்னையொரு போரியல் நிபுணராகப் பிரகடணம் செய்தார். நடைபெற்ற பல வெற்றிகரமான சமர்களில் தானே பிரதான பாத்திரம் வகித்ததாகவும் அவர் கூறினார். தான் செய்த பாரிய தவறுகளை

பல சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வந்துள்ளனர். அச்சிக்கல்களை முறியடித்து மீள்கையில் புலிகளின் எழுச்சி அதிக வீச்சுக்கொண்டதாக அமைந்து வந்துள்ளன. அந்த வரிசையில் கருணாவின் விவகாரமும் அடங்குகிறது. கருணாவின் பிரச்சினையைக் கையாண்டு வெற்றி கொண்ட புலிகளின் தலைமையை ஊடகங்கள் பாராட்டுகின்றன, புகழாரம் சூட்டுகின்றன. தான் ஒரு பிரகாசமான நட்சத்திரம் என்பதை பிரபாகரன் மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளார் என இந்தியச் சஞ்சிகையொன்று எழுதியுள்ளது.

உண்மையில், போரைவிட சமாதானக் காலம்

# கருணாவின் நெருக்கடிநிலை களையப்பட்டவிதம் உலகத்திற்கும் ஒரு செய்தியைக் கூறியுள்ளது!

இந்தச் சிக்கலை விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் பெரும் சண்டையின்றி பெரும் இரத்தக் களரியின்றி, இரண்டொரு தினங்களில் `வலு சிம்பிளாக' முடித்து விடுவார்கள் என்பதும் எவரும் எதிர்பார்த்திராத ஒன்றுதான்!

குருதியினாலும் தியாகங்களினாலும் கட்டி வளர்க்கப்பட்ட ஒரு விடுதலைப் போராட்டத்தில் சாபக்கேடாகத் தலையெடுத்தவொரு பிரச்சினை கெட்டகனவுபோல் தோன்றிக் கலைந்து போய்விட்டது.

கடந்த மார்ச் மாதம் நான்காம் திகதியளவில் மட்டு - அம்பாறை மாவட்டத்திலுள்ள விடுதலைப் புலிகள் தனித்து இயங்கப் போவதாகக் கருணாவினால் அறிவிக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தை வன்னித்தலைமை புறக்கணிப்புச் செய்வதாகக் கூறியே கருணாவினால் இவ்வறிவிப்பு விடுவிக்கப்பட்டது. தமிழ் மக்கள் சொல்லொணா அதிர்ச்சியிலும், கவலையிலும் மூழ்க, விடுதலைப் புலிகளுக்கெதிரான சக்திகள் மகிழ்ச்சியிலாழ்ந்தன. ஆறாம் திகதி விடுதலைப் புலிகளின் அரசியல்துறை இப்பிரச்சினை குறித்து விளக்கமளிப்பதற்காகக் கிளிநொச்சியிலுள்ள தமது [illegible]வெப் பணியகத்தில் பத்திரிகையாளர் மாநாட்டினை [illegible]ட்டியது. மட்டு-அம்பாறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினை கருணா என்கிற தனி நபரால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினை எனவும், அதனால் கருணா விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டது. அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இப் பத்திரிகையாளர் மாநாட்டில் மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ், அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட கிழக்கு மாகாணத்தில் முக்கிய தளபதிகள் பலரும் கலந்து கொண்டனர். ஊடகவியலாளர்கள் துருவித் துருவிக் கேட்ட கேள்விகளுக்கு விளக்கமான முறையில் அவர்கள் பதிலளித்தனர். அந்த மாநாட்டில் கருணாவிற்குத் தெளிவான ஒரு அறிவிப்பும் விடுக்கப்பட்டது.

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதையும், அவர் இந்த மண்ணிலிருந்து வெளியேற வேண்டும் என்பதையும், வெளிநாடொன்றிற்குச் சென்று வாழவிரும்பினால் அவரின் உயிருக்கு உத்தரவாதம் தரப்படும் [illegible]பதையும் புலிகளின் தலைமை உத்தியோக பூர்வமாக அறிவித்தது. ஏதிரிகளை மன்னித்தாலும் துரோகிகளை மன்னிக்க விரும்பாத விடுதலைப் புலிகளின் தலைமை இவ்வாறு அறிவித்தமைக்கு முக்கிய காரணம் - இரத்தக் களறியின்றி இந்தப் பிரச்சினையைக்கையாள வேண்டும் என்கிற ஒரே நோக்கம்தான். கருணா என்கிற தனி மனிதனால் மட்டு-அம்பாறைப் போராளிகள் எவ்விதத்திலும் பாதிப்புக்குள்ளாகி விடக்கூடாது என்கிற அக்கறை விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திற்கு இருந்தது.

> *கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதையும், அவர் இந்த மண்ணிலிருந்து வெளியேற வேண்டும் என்பதையும், வெளிநாடொன்றிற்குச் சென்று வாழவிரும்பினால் அவரின் உயிருக்கு உத்தரவாதம் தரப்படும் என்பதையும் புலிகளின் தலைமை உத்தியோக பூர்வமாக அறிவித்தது.*

தலைமைப் பீடத்தின் இந்த அறிவிப்பைக் கருணா முற்றாக நிராகரிப்பதாக அறிவித்தார். ஊள்ளூர், வெளிநாட்டு ஊடகங்களுக்கு மிகவும் பரபரப்பான முறையில் பேட்டிகளையளித்தார். பி.பி.சி.

மறைப்பதற்காகவும் அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் தன்னை ஒரு பிரதேசத்திற்கான தலைவானாக நிலை நிறுத்த முயன்றார். பேரினவாத ஊடகங்களுக்கும் வெளிநாட்டு புலனாய்வுச் சக்திகளினால் இயக்கப்படும் ஊடகங்களுக்கும் கருணா தேவையான அளவிற்குத் தீனிபோட்டார்.

முன்னுக்குப் பின் முரணாக வழங்கப்பட்ட அவரின் பேட்டிகளூடாகவே அவரது பொய்கள் தமிழ்மக்களுக்கு அம்பலமாகத் தொடங்கின. உதாரணத்திற்கு இரண்டைக் கூறலாம். கிழக்குப் பிரதேசம் அபிவிருத்தியின்றிப் புலிகளின் 'வன்னித்தலைமை'யால் புறக்கப்படுவதாலேயே தாம் தனித்து இயங்கப் போவதாகக் கூறிய அவர், பின்னர் நிதிப்பிரிவுப் பொறுப்பாளர் தமிழேந்தி, காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் ஆகியோரை இயக்கத்திலிருந்து நீக்கினால் தான் இணைந்து செயற்பட முடியும் என்றும் கூறினார். அடுத்தது சமாதானத்தை முறித்துக்கொண்டு சண்டையைத் தொடங்குவதற்காக புலிகளின் தலைமை தம்மிடமிருந்து ஆயிரம் போராளிகளை உடனடியாகக் கேட்டதாகக் கூறிவிட்டு, பின்னர் ஐந்து வருடங்கள் பேச்சுவார்த்தை என்று கூறிக் காலத்தைக் கடத்தி விட்டால் அக்காலகட்டத்தில் ஆயுதங்களைச் சேகரித்துவிட்டுச் சண்டையை ஆரம்பிக்கலாம் என தலைவர் தன்னிடம் கூறியதாகவும் இன்னொரு ஊடகத்திற்குப் பேட்டியளித்தார். இவ்வாறான செய்திகளினூடாகக் கருணாவின் பொய்கள் மிகத் தெளிவாகப் புலப்படத் தொடங்கின.

உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் என மக்களை பலிக்கடாக்களாக்கி அட்டகாசம் செய்து கொண்டிருந்த கருணா பிரதேசவாதப் பூதத்தையும் உருவேற்றிவிட்டார். அதன் உச்சக் கட்டமாகவே மட்டக்களப்பில் வடபகுதி வர்த்தகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் வெளியேற்றப்பட்டமையும் அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டமையும் நடந்தன. பிரதேசவாதம் என்கிற ஆயுதம் தனக்குக் கைகொடுக்கும் என கருணா இறுதியாக நம்பியிருந்தார் கருணாவின் இறுதிக் கட்ட நடவடிக்கைகள் இந்திய இராணுவம் தமிழர் தாயகத்தில் நிலை கொண்டிருந்த காலங்களில் அவர்களால் அழைத்து வரப்பட்ட தமிழ் ஆயுதக் குழுக்களை மக்களுக்கு நினைவூட்டின. அதாவது, இந்திய இராணுவம் வெளியேறிக்கொண்டிருந்த வேளையில் அவர்களோடு தப்பிச்செல்லும் இறுதிக் கட்டத்தில் அவர்களின் அட்டகாசங்களும் கருணாவினது போலவே அமைந்தன.

இறுதி நேரத்தில் தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கருணா கருதிய போராளிகள் அவரை விட்டு ஒதுங்கத் தொடங்கினர். மட்டு, அம்பாறைப் பகுதிகளில் புலிகள் மேற்கொண்ட நுட்பமான நகர்வுகள் போரியல் நிபுணர் எனத் தம்மைப் பீற்றிக் கொண்ட கருணாவிற்குக் கலக்கத்தை உண்டுபண்ணியது.

தனது சில சகாக்களை அழைத்துக்கொண்டு இராணுவத்தின் உதவியுடன் இறுதியில் மண்ணை விட்டுத் தப்பியோடினார். இப்போது கருணாவின் சகாக்கள் எனக் கருதப்பட்ட சிலரே மீண்டும் புலிகளுடன் வந்து இணைந்து வருகின்றனர். புலிகள் மட்டு, அம்பாறை பகுதிகளைத் தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதுடன் இடம்பெயர்ந்த மக்களது இயல்பு வாழ்வுக்கான ஒழுங்குகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் தமது போராட்ட வரலாற்றில்

விடுதலைக்காகப் போராடுகின்ற அமைப்புகளுக்குப் பல சிக்கல்களைக் கொண்டுவரும். இலங்கையில் ரணில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கை அரசாங்கத்திற்குப் பல நன்மைகளைக் கொண்டு வந்தது. சிங்கள தேசத்தின் அபிவிருத்தி, இராணுவ கட்டமைப்பைப் பலப்படுத்தல், வெளிநாடுகளுடனான இராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொள்ளல் என அவை நீண்டன. அதே நேரம் சர்வதேசத்துடன் விடுதலைப் புலிகள் நேரடித் தொடர்புகளையும் மேற்கொள்ள இடமளிக்கப்பட்டது. இதனை வைத்துத்தான் சந்திரிகா புலிகளுக்கு அதிக சலுகைகளை ரணில் வழங்குகிறார் எனக் குற்றஞ் சாட்டினார். ரணில் புலிகளைச் சர்வதேசத்துடன் உறாவாட அனுமதித்தமைக்கு முக்கியமான காரணமுண்டு.



[illegible]க்களப்பிற்குச் சென்றிருந்த [illegible] அணிப் போராளிகள்

சமாதானம் குழப்பப்பட்டால் அல்லது, மீண்டும் ஒரு போர் ஏற்பட்டால் புலிகளைச் சர்வதேசத்திற்குப் பதில் சொல்ல வேண்டியவர்களாக்க இதனை ரணில் அனுமதித்தார் என்பதே உண்மை இதே வேளையில் இந்தச் சமாதான காலத்தில் விடுதலை ப்புலிகள் அமைப்பைப் பலவீனப்படுத்த, அதில் பிழைகளை ஏற்படுத்த சர்வதேச, பிராந்திய உள்ளூர் புலனாய்வு சக்திகள் பல நயவஞ்சகமான செயற்திட்டங்களைத் தீட்டியிருந்தன. இந்தப் புலனாய்வுச் சக்திகளின் முக்கிய தளமாகக் கிழக்குப் பிராந்தியமே இருந்து வருகிறது. தமிழ், முஸ்லிம் மக்கள் கலந்து வாழ்வதால் இச் சக்திகள் தமது கைவரிசையை அங்கே காட்டுவது சுலபமானது என எண்ணியிருக்கலாம்.

சமாதான காலத்தில் எதிரியினால் மேற்கொள்ளப் படுகின்ற CONTAINMENT உபாயமும், புலனாய்வுச் சக்திகளின் நயவஞ்சகச் செயற்பாடுகளும் போரியல் மேதையான வே.பிரபாகரன் அவர்கள் தெரிந்திராத விடயங்களல்ல. இந்தச் சமாதான காலத்தை அரசு தமக்கேற்றவாறு பாவித்ததற்கு மேலாக விடுதலைப் புலிகள் சர்வதேச ரீதியாக தமது அரசியல் பலத்தைப் பெருக்கப் பயன்படுத்தி வருகிறார்கள்.

கருணாவின் விவகாரத்தை சுமார் ஒரு மாதத்திலேயே ஒரு முடிவிற்குக் கொண்டு வந்து இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட்ட புலிகளின் செயற்பாடு, புலிகளைப் பலவீனப்படுத்த முனையும், போராட்டத்தை நசுக்க முனையும் உள்ளூர், வெளிநாட்டுச் சக்திகளுக்கும் உரத்த குரலில் ஒரு செய்தியைக் கூறியுள்ளது. புலிகளின் அரசியல் பலமும் போரியல் பலமும் உறுதியாகவே உள்ளது என்பதுதான் அது.

**- வன்னியிலிருந்து விவேக்.**

# சந்திரிகாவால் சமாதானம் செய்ய முடியுமா?

– நிலாந்தன் ஈழநாதம்

கடந்த இரு தசாப்த காலத்துள் நடந்த எல்லாத் தேர்தல்களிலும் தேர்தல் முடிந்த கையோடு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படாத ஒரே தேர்தல் நடந்து முடிந்த தேர்தல்தான்.

யுத்த காலங்களில் தேர்தல் என்றாலே வாக்குகளுக்குப் பதிலாகக் குண்டுகள்தான் எண்ணப்படும். அல்லது பிணங்கள் எண்ணப்படும். ஆனால் இம்முறை அப்படி எதுவும் நடக்கவில்லை.

இதற்குக் காரணம் சிங்கள அரசியல்வாதிகள் திடீரென்று கூர்ப்படைந்து விட்டார்கள் என்பதோ அவர்களுடைய அபிமானிகள் திடீரென்று மனந்திருந்தி விட்டார்கள் என்பதோ அல்ல.

மாறாக நிலவும் யுத்த நிறுத்தத்தின் விளைவே இது. ஒரு விதத்தில் இத்தேர்தலே யுத்த நிறுத்தத்தின் விளைவுதான். எவ்வாறெனில், யுத்தநிறுத்தத்தைக் கொண்டுவந்து விக்கிரமசிங்க புலிகளுக்குச் சலுகைகள் செய்துவிட்டார் என்று குற்றம் சாட்டியே அவருடைய அரசாங்கம் கலைக்கப்பட்டது. அதன் விளைவே இந்தத் தேர்தல்.

அதே சமயம் யுத்த நிறுத்தம் நீடித்திருப்பதால்தான். இத்தேர்தலை மிகவும் ஆறுதலாகவும், பயமின்றியும் நடாத்த முடிந்திருக்கிறது.

இது ஒன்றைக் காட்டுகிறது. தமிழர்களுக்கு அமைதி இல்லை என்றால் சிங்களவர்களுக்கும் அமைதி இல்லை. தமிழர்களுக்கு நிம்மதி இல்லை என்றால் சிங்களவர்களும் நிம்மதியாக இருக்க முடியாது.

ஆனால் இந்தத் தவிர்க்கப்படவியலாத யதார்த்தம், நடந்து முடிந்த முடிவுகளில் பிரதிபலிக்கப்படவில்லை என்பதே இங்குள்ள பயங்கரம்.

அதிகமதிகம் இனமுரண்பாடுகளை மிகக் கூர்மையாக வெளிப்படுத்திய ஒரு தேர்தல் இது.

தமிழர்கள் எதற்காக வாக்களித்தார்களோ பெருமளவிற்கு அதற்கெதிராகவே சிங்களவர்கள் வாக்களித்திருக்கின்றார்கள். முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்கள் தமக்கேயான நலன்களை முதன்மைப்படுத்தி வாக்களித்திருக்கிறார்கள்.

இதைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

தமிழர்கள் தமது போராட்ட இலக்குகளுக்காகவும், அவற்றை அடைவதற்கான ஓர் ஊடகம் என்ற வகையில் சமாதானத்துக்காகவும் வாக்களித்திருக்கும் வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழர்கள் பெருமளவிற்கு ரணிலுக்கு வாக்களித்தது என்பதே அவர் சமாதானத்தின் பக்கம் நிற்பதால்தான்.

முஸ்லிம்கள் ரணிலை ஆதரித்திருப்பது என்பது ஒரு வர்த்தக சமூகம் என்ற வகையில் சமாதானத்தின் நன்மைகளை அனுபவிப்பதற்காகத்தான்.

ஆனால் சிங்களவர்களோ, ரணிலுடைய சமாதான முயற்சிகளை நிராகரித்திருக்கிறார்கள். யுத்த நிறுத்தத்தைக்கொண்டு வந்து அவர் புலிகளுக்கு இரகசியமாக எதையோ கொடுத்துவிட்டார் என்று சந்திரிகா கிளப்பிய ஐயங்களையும், பயங்களையும் அப்படியே விழுங்கி ரணிலைத் தோற்கடித்துவிட்டார்கள்.

ரணிலுக்குக் கிடைத்த தோல்வி எனப்படுவது அவர் செய்த சமாதானத்திற்குக் கிடைத்த தோல்வியும்தான்.

ரணிலை அவர்கள் தோற்கடித்ததைவிடவும் பயங்கரமான மற்றொரு விசயம் ஹெல உறுமயவுக்கு அவர்கள் கொடுத்த வெற்றிதான். இது இரண்டு பிரதான கட்சிகளின் மீதும் அவர்கள் சலிப்புற்றதின் விளைவாகவும் இருக்கலாம். ஆனால் இப்பத்தியில் சில வாரங்களுக்கு முன்பு கூறப்பட்டதைப்போல் அதி தீவிர, மதவாதச் சக்திகள் மூன்றாவது அணியாக எழுச்சிபெற்றுவிட்டன.

இத்தகைய சக்திகள் பேரம் பேசும் பலத்தோடு நாடாளுமன்றத்துக்கு வந்திருப்பது என்பது சமாதானத்தின் வழியில் தோன்றியிருக்கும் புதிய துர்க்குறியே. எனவே தேர்தல் முடிவுகளின்படி நாம் பின்வரும் ஏதோ ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

முதலாவது, கடந்த இரு தசாப்தகால யுத்தத்திலிருந்து பெரும்பாலான சிங்கள வெகுசனம் எத்தகைய ஒரு பாடத்தையும் கற்றிருக்கவில்லை என்பது.

இரண்டாவது, அவர்களுக்கு மறதி மிக அதிகம் என்பது.

மூன்றாவது, பௌத்தத்தை மிகவும் தவறாகப்புரிந்து வைத்திருப்பதைப்போல சமாதானத்தையும் மிகத் தவறாகப் புரிந்து வைத்திருக்கின்றார்கள் என்பது.

நாலாவது, அவர்கள் மிக மோசமாகக் குழம்பிப்போய் இருக்கிறார்கள் என்பது.

இதில் எது சரி? ஒவ்வொன்றும் அதற்கேயுரிய விகிதங்களில் சரிதான். இப்பத்தியில் ஏற்கனவே கூறப்பட்டபடி சிங்கள வெகுசனத்தை மிகவும் குழப்பிய ஒரு தேர்தல் இது. ஒருபுறம் அவர்கள் ரணிலைத் தோற்கடித்திருக்கின்றார்கள். இன்னொருபுறம் அவர்கள் சந்திரிகாவுக்கு பெரு வெற்றியைக் கொடுக்கவில்லை.

அதேசமயம் இரண்டு பெருங்கட்சிகளுக்கு வெளியே ஒரு மூன்றாவது அணியை அவர்கள் தேடியிருக்கிறார்கள். கொழும்பில் இருக்கும், அரசியல் ஆய்வாளர் றொகான் எதிரிசிங்கவின் கூற்றின்படி ரணில் விக்கிரமசிங்கவிற்கு Cha-risma -ஜனவசியம் குறைவு என்று இதைத் தவிர, நகர்ப்புறச் சிங்கள பெருமுதலாளிகளைத் திருப்திப்படுத்திய அளவுக்கு நாட்டுப்புறச் சிங்களவர்களையும் இது முதலாளிகளையும் குறிப்பாக விவசாயிகளையும் அவர் திருப்திபடுத்தத் தவறிவிட்டார் என்றும் கூறப்படுகின்றது.

ரணிலைவிடவும் சந்திரிகா ஜனவசியம் மிக்கவர் என்று றொகான் எதிரிசிங்க கூறுகிறார். சந்திரிகாவைப் போலன்றி ரணில் அமைதியானவர், பெரிய பெரிய இலட்சியங்களைக் கதைப்பதில்லை. அதோடு சாதாரண சனங்களை நெருங்கிச் சென்று உறவாட முடியாதவர் என்றும் அவர் கூறுகிறார்.

மெய்தான், ரணிலுடைய துருத்திக்கொண்டு தெரியாத, காட்டூணிஸ்ட்களுக்குச் சோதனையாக அமைந்துவிட்ட மிகச் சாதாரண முகம். மற்றும் கவர்ச்சியும் மிடுக்கும் குறைந்த குரல், நடை உடை பாவனை போன்றவற்றை வைத்துக் கூறுமிடத்து றொகான் எதிரிசிங்க நம்புவது போல் ரணில் விக்கிரமசிங்க ஜனவசியம் குறைந்தவராக இருக்கலாம்தான்.

சந்திரிகாவைப்போல பொய் சொல்லவோ அல்லது குழம்பிக்கதைக்கவோ அல்லது தருணமறிந்து மன்னிப்புக் கேட்கவோ அல்லது கிராமிய வழக்கில் சொன்னால், மாய்மாலம் கொட்டவோ ரணிலால் முடியாதுதான். ஆனால் ரணிலின் மிகப்பெரிய கவர்ச்சி அவருடைய கண்ணுமல்ல, மூக்குமல்ல. குரலுமல்ல நடையுமல்ல, மாறாக அவர் சமாதானத்தின் நண்பனாகத் தோன்றியதுதான் இதனை வைத்துத் தனக்கு வெற்றி நிச்சயம் என்று அவர் நம்பினார்.

தனது கணவரைக் கொன்ற J.V.P. யுடன் அவர் கூட்டுச்சேர முடியுமென்றால், புலிகளுடன் சமாதானம் செய்யமுடியாதென்றில்லை. அல்லது அமெரிக்காவை நெருங்கிவர முடியாதென்றுமில்லை. அவரைப் பலப்படுத்தும் ஒரு சமாதானத்துக்காக அவர் எதையும் செய்வார். யாரோடும் கூட்டுச்சேர்வார். சில சமயம் அந்தச் சமாதானத்துக்காக முன்பு ஒருமுறை செய்தது போல யுத்தமும் செய்யக்கூடிய ஆள் அவர்.

இப்பத்தியிலும் கூட முன்பு சில தடவைகள் சமாதானத்தின் பெயரால் ரணில் வெல்லக்கூடும் என்று கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் சிங்கள வெகுசனங்களின் தீர்-ப்போ வேறு விதமாய் அமைந்துவிட்டது ஆயின் எங்கே பிசகியது?

முதலாவதாக ஒன்றைச் சொல்லவேண்டும். ரணில் சமாதானத்தின் நண்பன் போலத்தோன்றினாரே தவிர, அவரும்கூட மெய்யாகவே சமாதானத்துக்கு விசுவாசமாயிருக்கவில்லை.

அவர் சமாதானத்தை வர்த்தக மயப்படுத்துவதில் காட்டியளவு அக்கறையைச் சமாதானத்தை மக்கள் மயப்படுத்துவதில் காட்டியிருக்கவில்லை.

சுமார் இரு தசாப்த காலமாக யுத்தம் மக்கள் மயப்பட்டுவரும் ஒரு நாட்டில் இரண்டே இரண்டு ஆண்டுகளில் சமாதானத்தை மக்கள் மயப்படுத்துவது என்பது யாரும் மந்திரவாதிகளால்தான் முடியும்.

ஆயினும் அப்படிச் சமாதானத்தை மக்கள் மயப்படுத்தும் திட்டம் எதுவம் ரணிலிடம் இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் அவர் சமாதானத்திற்கு விசுவாசமாக இருந்ததைவிடவும் தனது மேற்கத்தேய எஜமானர்களுக்கும், தனது கட்சியின் பிரகாசமான எதிர்காலத்துக்கும் குறிப்பாகத் தனது தனிப்பட்ட எழுச்சிக்குமே விசுவாசமாகக் காணப்பட்டார்.

மேலும் இரண்டாண்டுகளுக்குப் பேச்சு வார்த்தைகளை இழுத்துக்கொண்டு வந்து முடிவில் சமாதானத்தின் பெயரால் சனாதிபதியாகும் ஒருகனவே அவரிடம் இருந்தது. அவரைப் பொறுத்தவரை சமாதானம் எனப்படுவது அதிகபட்சம், எதிர்காலத்தில் சனாதிபதியாக வருவதற்குரிய ஓர் ஏணியே. எனவே விசுவாசம் இன்றி சமாதானம் செய்த அவருடைய அரசாங்கத்தால் அதை மக்கள் மயப்படுத்த முடியாமற் போனது தவிர்க்க முடியாததே.

இப்பொழுது அவர் தனது தோல்விகளுக்குத் தனது கட்சியின் ஊடகப்பிரிவைக் குறைகூறுகிறார். 96 கோடி ரூபாய் செலவழித்து SLFE மீதும் J.V.P. மீதும் சேறு பூசுவதில் காட்டப்பட்டுள்ள தீவிரம் கட்சியின் கொள்கைகளைப் பரப்புவதற்குக் காட்டப்படவில்லை என்று இப்பொழுது கூறப்படுகின்றது.

அதாவது, அவர்களிடம் சமாதானத்தை வெகுசன மயப்படுத்தும் நடைமுறைச் சாத்தியமான திட்டங்கள் எவையும் இருக்கவில்லை. இதை இன்னும் திருத்தமாகச் சொன்னால் சமாதானத்தைக் குறித்த தரிசனம் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை. யுத்தத்தை ஒத்தி வைப்பதைத்தான் அவர்கள் சமாதானம் என்று காட்ட விரும்பினார்கள் போலும்.

எனவே சமாதானத்தை நோக்கி சனங்களை வசியம் செய்ய அவர்களால் முடியாது போயிற்று. இதனால் சந்திரிகா J.V.P. கூட்டு சனங்களை வெற்றிகரமாகக் குழப்ப முடிந்தது. இதன் விளைவே ரணிலுக்குத் தோல்வி கிடைத்தது.

இப்பொழுது சமாதனம் சந்திரிகாவின் கையில்-எதைச் சாட்டாக வைத்து ரணிலின் ஆட்சியைக் கவிழ்த்தாரோ அதை-சமாதானத்தை - அவர் இப்பொழுது பொறுப்பெடுக்க வேண்டிய ஒரு நிலை. உண்மையில் அவர் எதிர்த்தது ரணிலைப் பலப்படுத்தும் ஒரு சமாதானத்தையே. எனவே இனி அவர் தன்னைப் பலப்படுத்தும் ஒரு சமாதனத்துக்கு வரக் கூடும்.

ஒரு ஸ்திரமான ஆட்சியை உருவாக்க முடியுமானால் அவர் சமாதானத்துக்கு வரக் கூடும். அல்லது ஒரு ஸ்திரமான ஆட்சியை உருவாக்குவதற்காகவும் அவர் சமாதானத்துக்கு வரக்கூடும். அப்படி வந்தால் சில சமயம் ரணிலைவிடவும் ஸ்திரமாக அவரால் சமாதானம் செய்யக் கூடியதாக இருக்கும். ஏனெனில் கொழும்பில் இப்பொழுது ஓர் அதிகார மையம் தான் இருக்கின்றது. அதோடு ரணில், சமாதானத்தின் வழியில் குறுக்கே நிற்கும் வாய்ப்புகளும் குறைவு. ஏனெனில் அவர் சமாதானத்தை ஏற்படுத்துவதாக வாக்களித்தே தேர்தலில் நின்றார்.

ஆனால் வெற்றிகரமாகச் சமாதானம் செய்வதென்றால் சந்திரிகா உடனடியாக இரண்டு தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும்.

முதலாவது, புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்வது. அதாவது நடந்து முடித்த தேர்தலில் தமிழர்கள் வழங்கிய தீர்ப்பை மதித்து நடப்பது. இதிலும் குறிப்பாகப் புலிகளின் உட்கட்சிப் பூசலில் தலையிடாதிருப்பது. மற்றது J.V.P. யையும் கூட்டாளியாக வைத்துக்கொண்டு அமெரிக்காவை நெருங்கிச்செல்வது.

இந்த இரண்டையும் அவர் செய்யமாட்டார் என்பதற்கில்லை. ஏனெனில் தனது கணவரைக் கொன்ற J.V.P. யுடன் அவர் கூட்டுச்சேர முடியுமென்றால், புலிகளுடன் சமாதானம் செய்யமுடியாதென்றில்லை. அல்லது அமெரிக்காவை நெருங்கிவர முடியாதென்றுமில்லை.

அவரைப் பலப்படுத்தும் ஒரு சமாதானத்துக்காக அவர் எதையும் செய்வார். யாரோடும் கூட்டுச்சேர்வார். சில சமயம் அந்தச் சமாதானத்துக்காக முன்பு ஒருமுறை செய்தது போல யுத்தமும் செய்யக்கூடிய ஆள் அவர்.

# கருணா ஓடியது எதற்காக?

செயற்படும் உளவியல் செயற்பாட்டுப் பிரிவு உட்பகை சார்ந்த போரின் பயனற்ற தன்மையைப் பற்றி உரையாடல்களைத் தொடங்கின. எனவே சனிக்கிழமை பின்னிரவு றெஜியாலும் றொபட்டாலும் ஒழுங்கு செய்யப்பட்ட எதிர்தாக்குதல்களும் தோல்வியில் முடிந்தன. ஞாயிறு காலை கருணாவின் படைகள் வாகரையை விட்டு சிதறியோடித் தொப்பிகலவுக்குப் பின்வாங்கின. கருணாவின் படையணிகளைத் தேடிக் கொண்டுவரும் புலிகள் A 11 பாதையைப் பாரியளவில் கடப்பதைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு சிறீலங்கா படையின் கூடுதல் படைப்பிரிவுகளை A 11 பாதையில் நிலைகொள்ள வைக்கப்பட்டன. இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் புலிகளின் இராணுவ பிரிவின் தளபதியும் கருணாவின் எதிரக் கிளர்ச்சியின்போது வெளிநாட்டிற்குச் சிகிச்சைக்காகச் சென்றவருமான ஜனார்த்தனின் தலைமையில் புலிப்படை பிரிவு ஒன்று ஞாயிற்றுக்கிழமை இரவு மட்டக்களப்பின் தெற்கில் 76 கி.மீற்றர் தொலைவில் அமைந்துள்ள திருக்கோவிலுக்கு வந்து சேர்ந்தது. அம்பாறை மாவட்டத்தின் புலிகளின் அரசியற் பிரிவின் தலைவர் குயிலன்பனும் உளவியல் நடவடிக்கைப் பிரிவினரும் ஜனார்த்தனுடன் வந்திருந்தனர். அவர்கள் விடுதலைப்புலிகளின் கஞ்சிகுடிச்சாறில் அமைந்துள்ள தளத்துடனும் வானொலித் தொடர்பை ஏற்படுத்தினர். 24 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான கலந்துரையாடல்கள், விவாதங்கள், எதிர்வாதங்கள், மனமாற்றங்களுக்குப் பின்னர் அனைத்துப் பிரிவுத் தலைவர்களும் புலிகளுடன் மீண்டும் இணைய ஒத்துக்கொண்டனர். ஒரு துவக்குசூடாவது சுடப்படவில்லை. அது ஓர் உளவியல் செயற்பாட்டின் வெற்றியாகும்.

கருணாவினுடைய முன்னாள் இராணுவ புலனாய்வுப் பிரிவின் முக்கியஸ்தரான ரமணவால் தலைமை வகித்துச் செல்லப்பட்ட புலிகளின் குழு ஒன்று வாகரையில் பெரிய வெள்ளிக்கிழமை அன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கு பகுதிகளுக்குள் பிரவேசித்துக் கடற்கரைக்கு அப்பாலுள்ள நிலப்பரப்புகளின் பெரும்பாலான பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டை நிலைகொள்ள செய்தது. அதே வேளை இயக்கத்தைக் கைவிட்ட தளபதி வாகரையினதும், அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் பிரதேசங்களினதும் வீழ்ச்சியையிட்டு தாறுமாறாகக் குழப்பமடைந்தார். ஆனால் அவர் தொப்பிகலவில் தான் பாதுகாப்பாக இருப்பதாக இன்னமும் நம்பினார். கருணா தனது பாதுகாப்பு நடவடிக்கைகளைத் திட்டமிட்டுக்கொண்டிருந்த மேற்கு வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள இரகசிய முகாமை நோக்கி ஞாயிற்றுக்கிழமை இரவு புலிகளின் விசேட படையணிகளின் தாக்குதல்கள் நடைபெற்றன. இது கட்சிமாறிய தளபதிக்கும் அவரது சகாக்களுக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. இந்த தெரிவு செய்யப்பட்டுத் துல்லியமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் கருணாவை பெரும் பீதிக்கும் குழப்பத்துக்கும் ஆளாக்கியது. தன்னுடைய பாதுகாப்பு மையங்களுக்குப் புலிகளின் விசேட படையணிகள் ஊடுருவி வந்தமை அவரால் புரிந்துகொள்ளமுடியாத புதிராகவே அவருக்கிருந்தது. அவர்கள் துரிதமாக நகர்வுகளை மேற்கொண்டனர். இந்த புது போர்முறைகளைக் கருணா அவர்கள் அடிக்கடி செல்லாத வன்னியில் ஒரு தெளிவற்ற முறையில் கேள்விப்பட்டிருந்த போதிலும் அதுபற்றி ஆழமாகச் சிந்தித்துப் புரிந்துகொள்வதற்கான அவகாசமும் நேரமும் அக்கணத்தில் அவருக்கு இருக்கவில்லை.

தரவை– வடமுனை காடுகளில் அமைந்துள்ள பிரதான முகாம்களின் பிரிவுத் தளங்கள் மீது தொடுக்கப்பட்ட விசேட படையணியின் தாக்குதல்களும் உளவியல் செயற்பாடுகளும் கருணாவைக் கிலிகொள்ளச் செய்து, எத்தகைய சந்தர்பங்களிலும் தனக்கு விசுவாசமாக இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பும் குலையவே, அவர் தனது படையணிகள் மீது கொண்டிருந்த பிடியை இழந்தார். ஞாயிற்றுக்கிழமை இரவு கொள்கைமாறிய தளபதி கிட்டத்தட்ட 12 நண்பர்களுடனும் லெப்ரினன்களுடனும் மட்டக்களப்பை விட்டு தப்பி ஓடினார். கிழக்கு மாவட்டத்தின் புலிகளின் பெண்கள் படைப்பிரிவின் தளபதியாகிய நிலாவினியும் இவர்களுடன் சேர்ந்து மட்டக்களப்பைவிட்டுத் தப்பிஓடினார்.

இவருடைய குறுகிய கால ஆயுளைக்கொண்ட எதிர்புரட்சி உண்மையிலேயே புலிகளுக்கு உதவியது என்றே சொல்லலாம். ஏனெனில் அவர்கள் சிறீலங்காவின் அரசியல் இராணுவச் சமன்பாடுகளுக்கு மேலாக ஒரு பலம்வாய்ந்த தரத்துடன் தங்களை வெளிக்காட்ட இது உதவியது என்று துணிந்து கூறலாம். `நாங்கள் கருணாவை, எங்களுடைய தலைவரின் பணிப்புரைகளுக்கு அமைவாக இரத்தம் சிந்தாமல் வெளியேற்றவே எங்களது நடவடிக்கைகளைத் திட்டமிடுகிறோம். எதிர்காலத்தில் அவர்கள் கனவிலும்கூட எதிர்ப்புக்கொடி தூக்குவதற்குச் சிந்திக்காத வண்ணம் நாங்கள் எங்கள் செயற்பாட்டைச் செய்துமுடிப்போம்.` என்று கேணல் ரமேஸ் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்.

தலைவரைத் தான் எதிர்த்து நிற்கப்போவதாக கருணா பிரகடனப்படுத்தியபின் ஊடகங்கள் வெளிக்கொண்டு இவரை போற்றிப் புகழும்போதுகூட கருணா இன்று ஒரு சிறந்த தளபதியாக்கிய அவரது குருமாரையும், அவரை இந்நிலைக்கு உருவாக்கிய அறிவுரையாளர் மனோ மாஸ்ரர் அவர்களையும் அவர்கள் மறந்துவிட்டனர் போலும். அவர்கள் மட்டுமல்ல உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் ஆய்வாளர்களும்கூட இதனைக் கவனத்தில்கொள்ளவில்லை. கருணாவை உருவாக்கியவர்கள் அனைவரும், மனோமாஸ்ரர் உட்பட, அவரை நிராகரித்துவிட்டார்கள். கருணா தோற்கடிக்கப்பட்ட முறை புலிகளால் இரண்டு வருடங்களுக்கு முதல் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட காலந்தொட்டு அவர்கள் எவ்வளவு தூரம் துணிவும் வீரமும்கொண்டு வளர்ந்திருக்கிறார்கள் என்பதை ஒரு சிறிய அளவில் வெளிக்காட்டுகிறது.

கடந்த 2 வருடங்களின்போது பிரபாகரனால் உருவாக்கப்பட்ட விசேட படையணிகளும் உளவியல் செயற்பாடுகளுக்கான பிரிவுகளும் எத்துணை வல்லமை பொருந்தியவை என மூத்த புலிகளின் தளபதியாக இருந்த கருணாவிற்குக்கூடத் தெரிந்திருக்கவில்லை.

பிணக்குக்கு நியாயபூர்மவான தீர்வை எட்டுவதற்குப் பதிலாக சிங்கள அரசு, சீர்செய்ய முடியாதுபோல் தோற்றமளிக்கின்ற விருப்பு மனச்சார்புடைய கொள்கைகளையே பேணி வளர்த்துவந்துள்ளது. அதனால்தான் அது தமிழர் பக்கம் இருக்கின்ற பிழையான குதிரையை அவ்வப்போது ஊக்குவித்து வருகின்றது. எவரும் தன்னை ஒரு ஓட்டுண்ணியாகப் பாவிக்க முடியாதபடி வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் எப்பொழுதுமே ஆயத்த நிலையிலேயே இருந்துகொண்டிருக்கிறார்.

*படைத்துறை ஆய்வாளர் – தராகி (சிவராம்)*
*நன்றி – Daily miror*


"பொய்களையே ஆயுதமாகக்கொண்டு நடத்தப்படும் சிங்களத்தின் விசமத்தனமான கருத்துப்போரை முறியடிப்பதே இன்று நாம் எதிர்கொண்டு நிற்கும் முக்கிய சவாலாகும். எமது இயக்கத்தின் வெகுசன ஊடகங்களே இந்தப் பெரும்பணியைச் செய்யவேண்டும்" - **தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள்**

## தமிழ்த் தேசிய ஊடகங்களிற்கான வளர்ச்சி நிதி

### தேசிய ஊடகங்களுக்கு வலுச்சேர்க்க சிறப்பு நல்வாய்ப்புச் சீட்டிழுப்புத்திட்டம் 2004

உலக விடுதலைப் போராட்டங்களின் முனைப்பான வளர்ச்சிப் போக்கில் தொடர்பூடகங்கள் பெரும் பங்காற்றி வருவது நாமறிந்ததே. இந்த வகையில் எமது தேசியத்தின் உண்மை நிலையை எமது மக்களின் உரிமைக் குமுறலை வெளிப்படுத்தவும், பேரினவாதம் எமது விடுதலைப் போராட்டத்தின் மீது அள்ளித் தெளித்துவரும் அவதூறுப் பரப்புகளை முறியடிக்கவும் ஊடகங்கள் அவசியமானவை.

சிறீலங்கா அதிகாரபீடத்தின் திட்டமிட்ட பரப்புரை நடவடிக்கைகளை உடனுக்குடன் ஆதாரங்களுடன் இனங்காட்டுகின்ற தேவை எமக்கு என்றும் உள்ளது. மாறிமாறி வரும் சிறீலங்கா அரசுகள் திட்டமிட்ட பொய்ப்பரப்புரைகளை மேற்கொள்வதற்கு எண்ணிறைந்த நிதியினை வாரியிறைத்து வருவது நீங்கள் அறிந்ததே. இவ்வாறு சிங்கள அரசுகள் மேற்கொள்ளும் பொய்பரப்புரையினை நம்பி மேற்குலகு கடந்த காலங்களில் எமது விடுதலைப் போராட்டத்திற்கு பங்கம் விளைவிக்கும் சில நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

அடக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டமாய் இடம்பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை, சிறீலங்கா அரசுகளின் கபட நரித்தனத்தை வெளிப்படுத்துவதற்கு எமது தேசிய ஊடகங்களினை வலுப்படுத்த வேண்டியது உலகெங்கிலும் பரந்து வாழுகின்ற தமிழ் மக்களின் கடமையாகும்.



தேசிய ஊடகங்களின் வளர்ச்சிக்காக சிறப்பு நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு ஒன்றை நடாத்தவுள்ளோம்.
இச் சீட்டிழுப்பை தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளான சனவரி பதினைந்தாம் நாள் தொடக்கம் மே முதலாம் நாள் வரைநடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
எல்லா நாடுகளிலும் விசேடமாக நியமிக்கப்பட்ட தொண்டர்கள் ஊடாக இச்சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளன. உங்கள் இல்லங்கள் தோறும் நாடி வருகின்ற தொண்டர்ரகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

தாயக மண்மீட்புப் போரில்
எம்மோடு தோளோடு தோள் நின்று
கைகொடுத்த தமிழ் உறவுகளே!
கருத்துப்போரிலும் வெற்றியை
எமதாக்க கைகொடுத்திடுவீர்!!!

### இந்நல்வாய்ப்பு சீட்டிழுப்பிற்கான பரிசுகள்:

**முதலாவது பரிசு:** 5 நபர்களுக்கான ஒரு வாரகால தமிழீழச் சுற்றுலா
*(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)*

**இரண்டாவது பரிசு:** 3 நபர்களுக்கான ஒரு வாரகால தமிழீழச் சுற்றுலா.
*(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)*

**மூன்றாவது பரிசு:** 2 நபர்களுக்கான 5 நாள் தமிழீழச் சுற்றுலா
*(விமானச் சீட்டுக்கள், தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு என்பன உள்ளடங்கலாக)*

இது தவிர கவர்ச்சிகரமானதும் பயன்நிறைந்ததுமான 20 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

ஊடகங்களின் வளர்ச்சி தாயக விடுதலைக்கு வலுச்சேர்க்கும்

# ஈழத்தில் தொடரும் 'றோ'வின் திருவிளையாடல்கள்

## அங்கம் 4

பல்வேறு நாடுகளுக்கு இந்தியத் தூதுவராகச் சென்றுள்ள றாஸ்கோத்திரா. இப்போது ஜவகர் லால் நேரு பல்கலைக்கழகத்தில் சர்வதேச விவகாரங்கள் பற்றிய பேராசிரியராகப் பணியாற்றுகின்றார். பேராசிரியர் முனியைப் போல இவரும் றோவின் சேவையில் இருக்கிறார். பண்டாரநாயக்கா மையத்தையும் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தையும் ஒன்றிணைக்கும் தீவிர பணியில் கதிர்காமருடன் இணைந்து இவர் செயற்படுகின்றார். மிகவிரைவில் இதற்கான கூட்டு ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின் தமிழ் நாட்டின் புடவை வியாபரிகள், சோதிடர்கள், மதவாதிகள், அருள்வாக்கு வழங்கும் மாதாஜிகள் தமிழர் பகுதி மீது படையெடுத்துள்ளனர். இன்னும் ஒரு சிலர் இந்திய உணவகங்களைக் கொழு-ம்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற பகுதிகளில் திறந்துள்ளனர். மேலோட்டமாகப் பார்க்கும்போது இது சின்ன விடயமாகத் தோன்றலாம், ஆனால் இதில் பெரும் சதி புதைந்துள்ளது. இவர்கள் யாழ். தீபகற்பத்துள் நுழைவதற்குக் கிளிநொச்சி ஊடாகச் செல்லும் ஏ9 நெடுஞ்சாலையைப் பயன்படுத்துவதில்லை. மாறாக இரத்மலானை-பலாலி விமான சேவையையே தெரிவு செய்து போக்குவரவு செய்கின்றனர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள சாவடிகளை விலத்திச் செல்வதே இவர்களுடைய உள்நோக்கமாகத் தெரிகின்றது.

இதில் வியப்பூட்டும் அம்சமாக ஒன்றைக் குறிப்பிடலாம். விமான மூலம் புடவை வியாபாரத்திற்கு வருகின்ற இந்தியர்கள் கால்நடையாகவே குடாவின் மூலைமுடுக்குகளுக்குச் சென்று விற்பனை செய்கின்றனர். உடனடிக் கொள்வனவுக்குப் பணமில்லாவிட்டால் இந்த வியாபாரிகள் 'உங்கள் வசதிப் போல் பணத்தைக் கொடுங்கள்' என்ற இலகு நிபந்தனையுடன் கடனுக்கு விற்றுவிடுகிறார்கள். இதுவெல்லாம் நடக்கின்ற காரியமா என்று கேளாதீர்கள். நீங்கள் றோவின் நிதியுதவியுடன் சேவை வியாபாரம் செய்தால் என்னதான் நடக்காது. உங்களுக்குத் தேவை உளவுத் தகவல், வியாபாரத்தில் இலாபம் அல்ல. விமானத்தில் வந்து கடனுக்கு வியாபாரம் செய்வதென்றால் சும்மாவா?

ஒரு நாட்டின் மீது பிறிதோர் நாடு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள முன்பு கைப்பற்றவிருக்கும் நாட்டிற்குள் பெருமளவு உளவுப்படையினரை பல்வேறு உருவங்களில் செலுத்துவது பண்டு தொட்டு நிலவும் போரியல் வழமை. புராதன காலத்திலேயே இது தொடங்கிவிட்டது. இன்றும் தொடர்கின்றது. இந்திய இராணுவம் தமிழர் பகுதிக்குள் 1987 இல் புகுந்ததாக வரலாறு ஆனால் 1983 இல் *றோ* உளவுப்படையினர் முழுத் தீவுக்குள்ளும் புகுந்து நிலையெடுத்துள்ளனர் என்பதே சரியான செய்தி. அதாவது நான்கு வருடங்களுக்கு முன்பே *றோ*வினர் தமது நடவடிக்கைகளைத் தொடங்கிவிட்டார்கள் என்பது நன்றாகக் கவனிக்கப்பட வேண்டிய வரலாற்று நிகழ்ச்சி.

றோகான் குணரத்தினா எழுதிய 'போரும் அமைதியும்' என்ற ஆராய்ச்சி நூலில் (War and Peace in Sri Lanka by Rohan Gunaratna. Published by Sri Lanka Institute of Fundamental Studies, Kandy. 1987) பின்வரும் அதிர்ச்சியூட்டும் செய்திகள் காணப்படுகின்றன. பிராந்திய வல்லரசு என்ற காரணத்தின் அடிப்படையில் சிறீலங்காவின் அரசியல் விவகாரங்களில் இராணுவரீதியாக தன்னை இந்தியா நுழைத்துக் கொண்டது. இது 1983இல் ஆரம்பிக்கப்பட்டது. 1987இல் இராணுவரீதியாக நுழையுமுன்பே இந்தியாவின் உளவுப்படை கொழும்பிலும் இலங்கையின் பிறபாகங்களிலும் செறிவாக நிலையெடுத்துள்ளது. இலங்கையின் இறைமையைச் சீர்குலைப்பதற்கு இந்தியா திட்டமிட்டு தயார்ப்படுத்தியுள்ளது. 1987ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாமல் இருந்தால் இலங்கை முழுவதையும் இந்தியப்படைகள் கைப்பற்றியிருக்கும். ஒப்பம் கைச்சாத்திடப்பட்டதால் இது தவிர்க்கப்பட்டது. சிங்களவர்கள் தம்மைத் தாமே அந்நியர்களுக்கு விலைபேசி விற்பதற்குத் தயாராக இருந்தாலும் பெரும்பாலான தமிழர்கள் இதற்குத் தயாராக இருக்கவில்லை. இலங்கையின் இறைமையைக் காத்து நின்றவர்கள் தமிழர்களே சிங்களவர்களல்ல.

1987இல் ஒப்பந்தத்தின் பிரகாரம் ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட இந்திய முப்படைகள் தமிழர் பகுதிகளை ஆக்கிரமித்தன. இதே காலப்பகுதியில் 'றோ'வின் ஆதிக்கம் மிகவிரிவாகக் காணப்பட்டது. 'றோ'வின் உள்ளூர் முகவர்களின் ஆதிக்கமும் கொலைவெறியும் உச்சக்கட்டம் அடைந்தன. இவ்வகை முகவர்களில் ஒரு சிலர் தம்மைத் தமிழினத்தின் தலைவர்களாகவும் இனங்காட்ட விளைந்தனர். ஈரோஸ் பிரமுகர் சங்கர் ராஜி என்றழைக்கப்படும் நேசதுரை திருநேசன், அண்ணாமலை வரதராஜப்பெருமாள், கதிரவேலு டக்கிளஸ் தேவானந்தா, பரந்தன் ராஜன் என்றழைக்கப்படும் ஞானராஜன் போன்றோர் இன்றுவரை 'றோ' முகவர்களாகச் செயற்படுகின்றனர். இவர்களைப் பற்றிய விபரங்களை அடுத்து வருகின்ற தொடர்களில் வெளியிடுவோம். இவர்களை விட மூத்த தமிழ் அரசியற் தலைவர்களும் 'றோ' வழங்கிய சன்மானத்தை வாங்கிக்கொண்டு வக்காலத்து வாங்கும் நிலைக்குத் தம்மைத் தாழ்த்திக்கொண்டனர்.

ஆராரோ! றோ றோவோ!

[ பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தொடர் ]

இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் டக்கிளஸ் தேவானந்தா தமிழ்நாட்டின் சூளைமேட்டில் அவ்வூர்வாசிகள் சிலரைச் சுட்டுக்கொன்றார். அப்போது இந்தியாவில் தங்கியிருந்த தமிழீழ அகதிகளுக்கு எதிரான பாரிய அளவு உணர்வலைகளைக் கிளப்பியது. இப்போது பி.ஜே.பி. அரசின் தீவிர ஆதரவாளாராகவும் இராஜீய சபை உறுப்பினராகவும் இருக்கும் பிரபல நடிகரும் பத்திரிகையாளருமான சோ.இராசமசாமி கண்டனக்குரல் எழுப்பியோருக்குத் தலைமைதாங்கினார். சோ பிரசுரித்த துக்ளக் பத்திரிகை தமிழ்நாட்டில் ஒரு இலங்கைத் தமிழராவது தங்கியிருக்கக் கூடாது என்று தலையங்கம் தீட்டியது.

டக்கிளஸ் தேவானந்தாவுக்கு எதிராகப் பொலிசார் 11ஆம் செக்சனில் வழக்கும் பதிவு செய்தனர். வழக்கை விசாரித்த மாஜிஸ்ரேட் 12வதாக ஒரு மேலதிக செக்சனை வழக்கில் இணைத்தார். சென்னை சிறைச்சாலையில் டக்கிளஸ் அடைக்கப்பட்டார். ஆனால் *றோ* அவருடைய விடுதலைக்கான முயற்சிகளை எடுத்தது. நீதிமன்றத்திற்கு அறிவித்தல் கொடுக்காமல் அவர் விடுதலை செய்யப்பட்டு விமான மூலம் கொழும்பு அனுப்பப்பட்டார். இன்றுவரை டக்கிளஸ் தேவானந்தாவிற்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட வழக்கு கிடப்பில் போடப்பட்டபடிக் கிடக்கின்றது. நீதிமன்ற நடவடிக்கைகளை முடக்கும்திறன் *றோ*வுக்கு இருப்பதை இதிலிருந்து உணரலாம்.

டக்கிளஸ் தேவானந்தாவும் அவருடைய சில தோழர்களும் கொழும்புக்கு வந்து அதிபர் பிரேமதாசாவுடன் ஒட்டிக்கொண்டனர். தமிழர் மத்தியிலிருந்து தகவல் சேகரித்து அரசுக்கும் இராணுவத்திற்கும் வழங்குவதைத் தொழிலாகக் கொண்ட டக்கிளஸ் தேவானந்தாக் குழுவினர் அதற்கான மாதாந்த ஊதியத்தையும் பெற்றுக்கொண்டனர். அரசின் துணைப்படையாகச் செயற்படும் இக்குழுவினர் *றோ* உளவுப்படையின் கண்ணும் காதுமாகவும் செயற்படுகின்றனர். கொழும்பில் எந்த அரசு பதவிக்கு வந்தாலும் அதில் ஒட்டிக்கொள்ளும் திறமை இவர்களுக்கு உண்டு.

டக்கிளஸ் தேவானந்தாவின் வளர்ச்சியை வியப்புடன் விமர்சகர்கள் நோக்குகின்றனர். அத்தோடு இந்திய அரசும் *றோ* உளவுத்துறையும் கொலைகாரனைப் பாதுகாப்பதற்குத் தயங்கியதில்லை என்ற உண்மையையும் இது எடுத்துக்காட்டுகின்றது. எம்.பி. என்றும் அமைச்சரென்றும் பதவியுயர்வு பெற்ற ஒற்றன் தமிழ் நாட்டிற்குச் சென்று சோழ ஓட்டலில் தங்கியிருந்தான். அதுமாத்திரமல்ல அந்த விடுதியில் இருந்தவாறு பத்திரிகையாளர் மாநாட்டையும் நடத்தினான். சோ.இராமசாமி, சுப்பிரமணியம் சாமி போன்றோர் வாயடைத்து நின்றார். றோவுடன் மோதும் துணிச்சல் அவர்களுக்கு இருந்தால்தானே?

தனது நாட்டிற்குள் வாழ்ந்துகொண்டு பிற நாடொன்றிற்கு விசுவாசமாக இருப்பவர்களை ஐந்தாம் படையினர்


> **தமிழர் மத்தியிலிருந்து தகவல் சேகரித்து அரசுக்கும் இராணுவத்திற்கும் வழங்குவதைத் தொழிலாகக் கொண்ட டக்கிளஸ் தேவானந்தாக் குழுவினர் அதற்கான மாதாந்த ஊதியத்தையும் பெற்றுக்கொண்டனர். அரசின் துணைப் படையாகச் செயற்படும் இக்குழுவினர் றோ உளவுப்படையின் கண்ணும் காதுமாகவும் செயற்படுகின்றனர். கொழும்பில் எந்த அரசு பதவிக்கு வந்தாலும் அதில் ஒட்டிக்கொள்ளும் திறமை இவர்களுக்கு உண்டு.**

என்று அழைப்பார்கள். டக்கிளஸ் தேவானந்தா, அண்ணாமலை வரதராஜப்பெருமாள், பரந்தன் ராஜன் எனப்படும் ஞானராஜன் போன்றோர் இந்தியத்தூதரகத்தின் தொடர்புடைய ஐந்தாம் படையினரே. இந்திய இராணுவம் எமது தாயகத்தை ஆக்கிரமித்தபோது இவர்களுடைய அட்டகாசம் உச்சக் கட்டத்தை அடைந்தது. காட்டிக் கொடுப்பவர்களாகவும், தாமே கொலைகாரர்களாகவும் ஈபிஆர்எல்எவ் குழுவினர் இடம்பெற்றனர். இந்த அமைப்பின் தத்துவாசிரியன் போன்று செயற்பட்ட செல்லையா லோகநாதன் மகன் கேதீஸ்வரன், தாயகத்தில் திட்டமிட்டு சாதிக்கலவரங்களையும் மோதல்களையும் அக்காலப்பகுதியில் உருவாக்கினார். ஈபிஆர்எல்எவ் அமைப்பைப் பலப்படுத்துவதற்காகவும் *றோ* அமைப்பின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகவும் அவர் இதைச் செய்தார் என்பது வரலாறு.

1987இல் எமது தாயகத்தினுள் இந்திய ஆக்கிரமிப்புப் படை நுழைந்த காலத்தில் ஈ.என்டி.எல்.எவ். என்ற புதிய அமைப்பு தோற்றம் பெற்றது. ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ போன்ற இந்தியச் சார்புக் குழுக்களில் இருந்து பல்வேறு குற்றச் செயல்களுக்காக வெளியேற்றப்பட்ட உதவாக்கரை நபர்கள் இப்புதிய அமைப்பாக உருவாகினர். பாலியல் வல்லுறவு, நிதி மோசடி, பொதுமக்களைத் துன்புறுத்தல், படுகொலைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய பரந்தன் ராஜன் ENDLF அமைப்பின் தலைவராக தன்னைத் தானே நிலைநிறுத்தினார். இந்தியப் படைகளுக்கு உதவும் நோக்குடன் தனது சொந்த மக்களின் முழு நேர எதிரியாக இவர் மாறினார். இவருக்கும் இவருடைய தோழர்களுக்கும் *றோ* பண உதவி செய்து ஊக்குவித்தது. தமிழர்கள் துணைப்படையாகச் செயற்படும் ஊதியம் பெற்று வரலாற்றில் இது முதல் தடவையல்ல.

(தொடரும்)

நேசன் Cash and Carry



இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள்,
V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்குத் தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 3574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201

# புத்திசிகாமணி பதில்கள்

கருணாவின் விவகாரம் இவ்வளவு சீக்கிரமாக எளிதாக முடியும் என்று நினைத்தீரா புத்திசிகாமணியாரே....?

**த. இருதயகுமார் — பேர்ன், சுவிஸ்.**

நான் மட்டுமல்ல எவருமே நினைத்துப்பார்க்கவில்லை. கருணாவின் விவகாரம் விரைவில் முடிக்கப்படும். ஆனால் அதற்காக கணிசமான விலை கொடுக்கவேண்டி வரும் என்றே பலரும் எண்ணியிருந்தார்கள். கருணா இயக்கத்திலிருந்து விலகி தனியாக இயங்கப்போவதாக திடீர் அறிவித்தல் விடுத்த அன்றைய தினமே, தனது தொலை நோக்கு பேராற்றல் மூலம் இந்தப் பிரச்சினை இப்படித்தான் முடியும். முடிக்கப்படும் என மிக உறுதியாகத் தெரிந்திருந்தவர் எமது தேசியத்தலைவர் பிரபாகரன் மட்டும்தான்.

எதிர்வரும் 22ம் திகதி சந்திரிகாவின் கட்சி பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிலைநாட்டும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

**த. மணிவண்ணன் — பாரிஸ், பிரான்ஸ்.**

இதுவரை அதற்கான வாய்ப்புகள் தென்படவில்லை. ஆனாலும் சிகல உறுமய வெளியிலிருந்து தனது ஆதரவை அந்த நேரத்தில் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றது. இந்திய அதிகாரிகள் அந்தக் கட்சியுடனும் கொஞ்சிக் குழாவுவதைப் பார்த்தால் அதற்கான வேலைகள் நடப்பதாகவே தெரிகிறது. இதேவேளை அரச அமைத்தாலும் அமைச்சர் பதவி விடயத்தில் இன்னும் முறுகிக்கொண்டிருக்கும் ஜே.வி.பியினர் எந்த நேரத்திலும் ஆட்சியைக் கவிட்டு கொட்டுவதற்கான வாய்ப்புகளே அதிகமாகத் தென்படுகிறது.

கருணாவின் நெருங்கிய சகாக்களைக்கூட விடுதலைப் புலிகள் மன்னித்து ஏற்றுக்கொண்டுள்ளார்களே. இவர்களால் எதிர்காலத்தில் பிரச்சனைகள் எழுவதற்கு வாய்ப்பில்லையா?

**த. கோகிலநாதன் — பாரிஸ், பிரான்ஸ்.**

கிழக்கின் பிரச்சினை தொடங்கிய நாளில் இருந்து விடுதலைப்புலிகள் ஒரு விடயத்தை மிகத் தெளிவாக குறிப்பிட்டுவந்திருந்தார்கள். கருணா என்கின்ற ஒரு தனிமனிதனுடைய அபிலாசையாகவே கருணா விவகாரத்தை தாம் நோக்குவதாகவும் அவரைத் தனிமைப் படுத்தி எம்மண்ணில் இருந்து அப்புறப்படுத்தும் பணியை விரைவில் செய்து முடிப்போம் எனவும் உறுதிபடக் கூறியிருந்தார்கள். அந்த வகையிலே மட்டு -அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் விடுத்த பகிரங்க அறிவித்தலைத் தொடர்ந்து கருணாவால் கைவிடப்பட்ட, அவருடன் நெருக்கமாக இருந்த பலரும்கூட புலிகளுடன் இணைந்து வருகிறார்கள். அத்துடன் கருணாவுடன் தொடர்புபட்ட எவராக இருந்தாலும் அவர்கள் அனைவரும் மனிதாபிமான ரீதியில் அணுகப்படவேண்டும் என தலைவர் பிரபாகரன் கண்டிப்பான உத்தரவும் விடுத்திருக்கின்றார். இது மிகவும் வரவேற்கக்கூடிய விடயமாகும். அத்துடன் கருணா விவகாரம் விடுதலைப்புலிகளைப் பல வழிகளிலும் சிந்திக்கத்தூண்டி ஒரு பாய்ச்சலாக அடுத்த கட்ட வளர்ச்சிக்கே இட்டுச் சென்றிருக்கிறது. இதுபோன்ற பிரச்சினைகள் இயக்கத்தில் இனி மேல் எப்போதுமே எழ முடியாதவாறு புலிகள் அமைப்பில் பல மறுசீர் அமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றே நினைக்கிறேன்.

`தலைவர் பிரபாகரன் அவர்கள் ஒரு பிரகாசமான நட்சத்திரம்` என பாராட்டியிருக்கும் இந்தியாவைச் சேர்ந்த நாராயணசாமி என்பவர் யார்?

**ச. சிவகுமாரன் — செவ்ரனிஸ், பிரான்ஸ்.**

கருணா விவகாரம் மிக எளிதாகவும் வெற்றிகரமாகவும் விரைவாகவும் முடித்து வைக்கப்பட்டதானது உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளையும், வெளி நாட்டு ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது என்பதே உண்மை. அந்த வகையில் 25 வருடங்களுக்கு மேலாக செய்தியாளராக இருந்துவரும் நாராயணசாமி U.N.I, AFP செய்தி நிறுவனங்களிலும் தற்போது டெல்லியில் இந்தோ - ஏசியா செய்திச் சேவையிலும் பணியாற்றிவருகிறார். ஈழப்போராட்டத்தில் நீண்ட பரிச்சயமும் அவதானிப்பும்கொண்ட இவர் `இலங்கையில் புலிகள் (Tigers of lanka) மிக அண்மையில் `மாயமான மனசின் உள்ளே` (Inside an Elusive mind) ஆகிய இரண்டு புத்தகங்களைப் போராட்டம் பற்றியும் விடுதலைப்புலிகள் பற்றியும் எழுதி வெளியிட்டுள்ளார். நாராயண சாமியின் நீண்ட ஈழபோராட்ட அவதானிப்பின் ஊடான வெளிப்பாடுதான் `பிரபாகரன் ஒரு பிரகாசமான நட்சத்திரம்` என்ற அவரது கணிப்பீடு.

பாலஸ்தீன கமாஸ் இயக்கத்தின் இரண்டு முக்கிய தலைவர்களை ஒரு மாதத்திற்குள் இஸ்ரேல் கொலை செய்துள்ளதே. இது குறித்து உங்கள் கருத்தென்ன?

**த. மதிவாணன் — பாரிஸ், பிரான்ஸ்.**

இஸ்ரேலின் மிக மோசமான எதேச்சதிகாரச் செயற்பாடு தான் இது. தலைவர்களையும் முக்கிய உறுப்பினர்களையும் அழிப்பதன் மூலம் பாலஸ்தீன மக்களின் விடுதலை உணர்வை அழித்துவிடலாம் என இஸ்ரேல் நினைப்பது மிக மூடத்தனமானது. தொடர்ச்சியான இஸ்ரேலின் இத்தகைய மேலாதிக்க நடவடிக்கையானது இஸ்லாமிய பேரெழுச்சிக்கு வித்திட்டு இஸ்ரேலுக்குப் பல வழிகளிலும் போராபத்தையே உண்டுபண்ண வழிவகுக்கும்.

அண்மையில் பாரிசில் திரையிடப்பட்ட எமது புகலிடக் கலைஞர்களின் முயற்சியில் உருவாக குறும்படங்கள் பார்த்தீர்களா...? அவை குறித்து உங்கள் கருத்தென்ன?

**த. தமிழ்நேசன் — பாரிஸ், பிரான்ஸ்.**

எழுதாத கவிதைகள், கனவுகள், தாகம் என்கின்ற குறும்படங்களையும், ஏகலைவன் என்கின்ற நாட்டுக்கூத்தின் திரைவடிவத்தையும் நானும் பார்த்தேன். `என்னால் முடியும்` என்கின்ற நம்பிக்கையை இந்த திரை முயற்சியின் மூலம் இதில் சம்பந்தப்பட்ட கலைஞர்கள் அனைவரும் கூட்டாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களின் முயற்சி தொடர வாழ்த்துவோம். வரவேற்போம்.

## கருணா தற்போது எங்கே இருக்கிறார்?

புத்திசிகாமணியாரே! கருணா தற்போது எங்கே இருக்கிறார்?

**க. குணபாலசிங்கம் — பாரிஸ், பிரான்ஸ்.**

கருணா எங்கே இருக்கிறார் என்று இந்தியாவுக்குத் தெரிவும். அமெரிக்காவுக்குத் தெரியும். இலங்கை அரசாங்கத்திற்குத் தெரியும். விடுதலைப்புலிகளுக்கும் தெரியும். கொஞ்சம் பொறுத்திருங்கள். எல்லாம் வெளிச்சத்திற்கு வரும். நாட்டுக்காகப் போராடிய ஒரு மனுசன் நாடற்றவனாகி எதிரிகளினதும் அந்நியச் சக்திகளினதும் கைகளில் எடுப்பார்கைப் பிள்ளையாகி மீளாத அச்சமுடன் அலைக்கழிக்கப்படுவது போன்ற கொடுமை வேறெதுவுமில்லை. கருணா தற்போது மிக மோசமான சுயவதைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்.

---

ரெனிஸ்

# டேவிஸ் கிண்ணம்

1900ம் ஆண்டுமுதல் நடைபெற்றுவரும் டேவிஸ் கிண்ணச் சுற்றப்போட்டி இன்று மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வருகின்றது. அத்துடன் ஆட்டங்கள்



நடைபெறும் அந்த மூன்று நாட்களும் சம்பந்தப்பட்ட நாட்டு ஆதரவாளர்கட்கு ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம்தான். நூற்றிமூன்றாவது கிண்ணத்திற்கான காலிறுதி ஆட்டங்கள் கடந்தவாரம் நடைபெற்றது. எதிர்பார்க்கப்பட்டதுபோலவே அமெரிக்கா -சுவீடனை 4:1 என்ற ரீதியில் வெற்றி கொண்டன. ரெனிஸ் உலகில் குறிப்பிட்டுக் கூறும் அளவிற்கு வீரர்கள் அற்ற வெலறூஸ் 5:0 எனும் மிகப் பெரிய வெற்றியை ஆர்ஜென்ரீனாவுடனான ஆட்டங்களில் தமது மண்ணில் பெற்றது பெரு வியப்பிற்குரியதே.

அதேசமயம் சுவிற்சர்லாந்து பிரான்ஸ் இடையேயான ஆட்டங்களில் பிரான்ஸ் 3:2 எனும் நிலையில் வெற்றிபெற்றது. உலகின் முதல் தரவீரரான றொயபெடறர் சுவிஸ் அணியில் இடம் பெற்று ஒற்றையர் ஆட்டங்கள் இரண்டிலும் வெற்றிபெற்றார். ஆயினும் இரட்டையர் ஆட்டத்தில் தமது நாட்டிற்கான வெற்றியை பெற்றுக்கொடுக்க முடியவில்லை. தமது முன்னணி வீரர் செபஸ்ரியான் குறோயன் இல்லாதபோதும் வேற்று மண்ணில் பிரான்சின் வெற்றியும் குறிப்பிடத்தக்கது.

முப்பத்தொருமுறை இக்கிண்ணத்தை வெற்றிகொண்ட அமெரிக்கா பிரபல்யமற்ற வெலறூசையும், ஒன்பதுமுறை சம்பியனான பிரான்ஸ் 2000ம் ஆண்டு சம்பியனான ஸ்பெயினையும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 24-26ம் திகதி வரை நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் எதிர்கொள்கின்றன.

அமெரிக்க-சுவீடனிடையே 11.04.2004 அன்று நடைபெற்ற ஆட்டத்தில் அமெரிக்காவின் அண்டி றொடிக்கின் ஆரம்ப ஆட்டப்பந்து (Serve) 244.7 கி.மி.ம வேகத்தை எட்டி புதிய சாதனை படைத்துள்ளது. இச்சாதனையாளருக்கு கெற்றோனிக்ஸ் (Getronics) எனும் விளம்பர முகவர் நிலையம் 1000 அமெரிக்க டொலர்களை பரிசாக வழங்கியுள்ளது. டேவிஸ் கிண்ணச் சுற்றுப் போட்டியில் சாதனையாளர்கட்கு 1,000 டொலரும், தடுத்தாட முடியாத ஆரம்பப் பந்து (ACE) ஒவ்வொன்றிற்கும் ஒரு டொலரும் கொடுப்பதாக அவ்விளம்பர நிறுவனம் கூறியிருந்தது. கடந்த வாரம் நடைபெற்ற காலிறுதி ஆட்டங்களில் 289 தடுத்தாட முடியாத பந்துகள் (ACE) அடிக்கப்பட்டிருந்தன. காலிறுதியாட்டங்களிற்கு மொத்தம் 1289 டொலரும், கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற முதற்சுற்று ஆட்டங்களிற்கு 1700 டொலர்களுமாக மொத்தம் 2989 டொலர்களை வீரர்கள் பெற்றுள்ளார்கள்.

**- ஜே.ஜே.**

---

# ஹேடன் சாதனையை முறியடித்தார் லாரா

## 400 ரன்கள் குவித்து புதிய சாதனை

மேற்கிந்தியத் தீவுகள் செயின்ட் ஜான்ஸில் நடைபெற்றுவரும் இங்கிலாந்துக்கு எதிரான 4வது டெஸ்ட் போட்டியில் அதிக ரன்களைக் குவித்து உலக சாதனை படைத்தார் மேற்கிந்தியத் தீவுகள் அணிக் காப்டன் பிரையன் லாரா.(34) திங்கட்கிழமை நடைபெற்ற 3ம் நாள் ஆட்டத்தில், பந்தை பவுண்டரிக்கு விளாசி 384 ரன்களைச் சேர்த்து புதிய சாதனை படைத்தார் அவர். ஆஸ்திரேலியா வீரர் மாத்யூ ஹேடன் 380 ரன்களைச் சேர்த்திருந்ததே இதுவரையிலான சாதனையாக இருந்தது.

2ம் நாள் ஆட்ட முடிவில் 313 ரன்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார் லாரா. • புதிய சாதனை படைத்ததும் விண்ணை நோக்கி கையைக் குத்தி ஆர்ப்பரித்தார் லாரா. களத்தில் இருந்த இங்கிலாந்து வீரர்கள் அனைவரும் அவரை சூழ்ந்து வாழ்த்து தெரிவித்தனர். `சாதனை படைத்ததும் விண்ணை நோக்கி கையைக் குத்தி ஆர்ப்பரித்தார் லாரா. களத்தில் இருந்த இங்கிலாந்து வீரர்கள் அனைவரும் அவரை சூழ்ந்து வாழ்த்து தெரிவித்தனர்.

`சாதனையை என்னால் நம்பமுடியவில்லை. இந்த நிகழ்வு எனக்கு புத்துணர்வை அளித்துள்ளது. உண்மையிலேயே மிகவும் களைப்பாக உள்ளேன். ஆனால் அது மிகப் பெரிய விசயம்` என லாரா தெரிவித்தார். ஹேடன் வாழ்த்து: சாதனையை முறியடித்த லாராவுக்கு ஹேடன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

400 நாட் அவுட்: திங்கட்கிழமை நடைபெற்ற 3ம் நாள் ஆட்டத்தில் உணவு இடைவேளைக்குச் சற்றுப் பின்னர் 400 ரன்களைச் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார் லாரா. அத்துடன் மே.இ.தீவுகள் ஆட்டத்தை டிக்ளேர் செய்தது. அப்போது 5 விக்கெட் இழப்புக்கு 751 ரன்களைச் சேர்த்திருந்தது.

போட்டி நடைபெற்றுவரும் செயின்ட் ஜான்ஸ் ஆன்டிகுவா ரிக்ரியேஷன் கிளப் மைதானத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பு, இதே இங்கிலாந்து அணிக்கு எதிராக 375 ரன்களைக் குவித்து ` அதிக ரன்களைச் சேர்த்தவர்` எனும் உலக சாதனையைப் பதிவு செய்திருந்தார் லாரா. அவரது நீண்டகால சாதனையை, பெர்த்தில் 6 மாதத்துக்கு முன்பு ஜிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் ஆஸ்திரேலியாவின் மாத்யூ ஹேடன் (380 ரன்கள்) முறியடித்தார். முன்னதாக ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில், டெஸ்ட் போட்டியில் இருமுறை 3 சதங்களை அடித்த 2வது வீரர் எனும் சிறப்பை லாரா பெற்றார். ஆஸ்திரேலிய ஜாம்பவான் சர்டொனால்டு பிராட்மன் மட்டுமே லாராவுக்கு முன்பு 2 முறை 3 சதங்களை அடித்துள்ளார்.

# யாழ் குடாநாட்டில் அந்நிய புலனாய்வு ஊடுருவல்கள்

தி.தவபாலன்

யாழ். குடாநாட்டில் அந்நிய சக்திகளின் புலனாய்வு அமைப்புகளாலும் சமூக சீரழிப்பு ஊடகங்களதும் ஊடுருவல்கள் பல்வேறு வடிவங்களிலும் அதிகமாகியுள்ளன. குறிப்பாக பிராந்திய வல்லரசொன்றின் ஊடுருவல் மிகத் தீவிரமாக சகல மட்டங்களிலும் அதிகமாகியுள்ளது.

ஊடகங்கள் முதல் கடைநிலை கூலித் தொழிலாளிகள்வரை இந்த அந்நியபுலனாய்வு ஊடுருவல்கள் தீவிரமாக உள்ளன. ஒருபுறம் சிறீலங்கா புலனாய்வு அமைப்புகளின் ஊடுருவல்கள் பல்வேறு வடிவங்களில் குடாநாட்டில் நிகழ்கின்றன. அதேவேளை வெளிநாடுகளின் குறிப்பாக ஒரு அருகு நாட்டின் பிராந்திய வல்லரசொன்றின் புலனாய்வு ஊடுருவல் மிக அதிகமாகயிருப்பது முக்கியமானதாகும். சமாதான காலத்தில் தமிழர் தாயகத்தின் அதிக மக்கள் வாழும் யாழ்ப்பாணத்தில் அம்மக்களின் விடுதலை உணர்வுகளை திசைதிருப்புவதே இதன் அடிப்படை நாசகாரத்திட்டமாகும்.

நடமாடும் புடவை வணிகர்களாக குடாநாட்டின் சகல குச்சொழுங்கைகளிலும் பிறநாட்டிலிருந்து விமானங்களில் பயணித்து வீடுவீடாக கடனுக்குப் புடவைகளை விற்று மக்களைத் தம் முகவர்களாக மாற்றும் திட்டத்துடன் ஒருவகை நகர்வு மேற்கொள்ளப்படுகின்றது. இதில் எம் மக்கள் மிக விழிப்பாக இருக்கவேண்டும். மறுபுறம் ஆன்மீகத்தை வைத்து மற்றொரு வகையில் நாசகார ஊடுருவல் நடக்கின்றது. சோதிடர்கள் விமானத்தில் வந்து குடாநாட்டில் விடுதிகளில் மாதக் கணக்கில் தங்கியிருந்து நாளேடு ஒன்றில் பிரபல சோதிடர் என விளம்பரம் போட்டு அதன் மூலம் சோதிடம் கேட்கவரும் மக்களை வசியப்படுத்தும் மற்றொருவகை ஊடுருவல் நடக்கின்றது. சோதிடம் கேட்பவர்கள் சோதிடர்களால் தமது நாட்டுக்கு மேலதிக பரிகாரத்துக்காக அழைக்கப்படவும் செய்கின்றனர். மக்களின் மனப்பாதிப்பை பயன்படுத்தி இந்த ஊடுருவல் நடக்கின்றது.

இதைவிட பிரபல இந்துச்சாமியார்களும் யாழ்ப்பாணம் வந்து அதன் மூலம் ஊடுருவல் புரிகின்றனர். அத்துடன் சிறு கிறிஸ்தவ அமைப்புகளும் சமாதானத்தின் பேரில் பெருமெடுப்பில் பிராத்தனைகள் என விழாக்களை நடத்தி மக்களை தாயக விடுதலை உணர்விலிருந்து திசைதிருப்ப முயல்கின்றன. இத்தகைய அமைப்புக்கள் புலனாய்வு ஊடுருவலாக தென் அமெரிக்க நாடுகளில் இம்முறையில் விடுதலை உணர்வு மக்களிடம் உடைக்கப்பட்டது. இதற்காகவே சிறு கிறிஸ்தவ அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன என ஆய்வுகள் கூறுகின்றன. குடாநாட்டில் சிறுமதப்பிரிவுகள் இந்து கிறிஸ்தவ பிரிவுகளில் அதிகளவில் ஊடுருவ விடப்பட்டுள்ளன.

இது மக்கள் உணர்வினைத் திசைதிருப்பவாகும். அதைவிட தீனா குறூப் போன்ற சமூக விரோத அடாவடிச் சண்டியர் குழுக்கள் இளைய சமுதாயத்தை சிதைக்க முன்னரைவிட அதிகளவில் குடாநாட்டில் வளர்க்கப்படுகின்றன. குடாநாட்டு மக்கள் போர்க் காலத்தைவிட இப்போதைய அமைதிச் சூழலில் மிக விழிப்பாக இருக்கவேண்டியுள்ளனர்.

இதைவிட ஊடகங்கள் வழியாக மேற்கொள்ளப்படும் சிதைப்பு நாசகாரமானதாகும். நேரடியாக தமிழக சீரழிப்பு ஊடகங்கள் ஒளி, ஒலி பரப்புகளூடாக குடாநாட்டில் தற்போது ஆதிக்கம் செலுத்தி மக்களின் இயல்புவாழ்வை, தமிழுணர்வை சிதைப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இவையும் அந்நிய சக்திகளின் பின்னணியிலேயே இயங்குவதாக கூறப்படுகின்றது. ஈ.பி.ஆர்.எல்.எப். வரதரணியினர் தமிழகத்தின் SUN-TV ஐ ஒளிபரப்புச் செய்கின்றனர். அதே சண் ரீ.வி. குப்பைகளை சக்தி ரீ.வி குடாநாட்டில் பரப்புகின்றது. சக்தி எவ்.எம் மோசமான வானொலி பண்பாட்டைத் திணிக்கின்றது.

இதைவிட CABLE TV என்ற கம்பி வழியாக நடத்தப்படும் பண்பாட்டுச் சீரழிவுகள் குடாநாட்டில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன. சண் ரீ.வி, சக்தி ரீ.வி, தமிழக குப்பைகளின் இடைவிடாத ஒளிபரப்புகளால் யாழ்ப்பாண சமூகம் அதன் பிரதான நுகர்வாளராகி அன்றாட இயல்புவாழ்விலிருந்து திரும்பி சமூக செயற்பாடுகளிலிருந்து விலக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இதுவே இவற்றின் நோக்கம். சமூக மேம்பாட்டுக்கான எவையும் இந்தத் தொலைக்காட்சிகளில் இல்லை. இவற்றின் மூலம் யாழ்ப்பாண சமூகத்தின் பெரும்சொத்தான கல்வி சீரழிக்கப்படுகின்றது. இதனை யாழ்ப்பாண பெற்றோர் உணர்ந்துள்ளனர். ஆனால் இந்த பிசாசுகளிடமிருந்து, விடபடமுடியாதுள்ளனர்.

யாழ்ப்பாண பொங்கு தமிழன்று ஈ.பி.ஆர்.எல்.எப். வரதரணி சிறப்பாகத்திரைப்படங்களை ஒளிபரப்பியதன் மூலம் இவர்கள் ஒளிபரப்பின் அடிப்படை நோக்கம் வெளிப்பட்டது. சண் ரீ.வி., சக்தி ரீ.வி. எப்.எம். உள்ளிட்ட ஊடகங்களின் ஊடுருவல் யாழ்ப்பாண சமூகத்தை நாசமாக்கத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளவையாகும். இவற்றின் நாசகாரத்தை யாழ்ப்பாண மக்கள் உணரத்தொடங்கிவிட்டனர். இத்தகைய ஊடகநாசகாரத்துக்கு யாழ்ப்பாண நாளேடு ஒன்றும் துணைபுரிவதாக கூறப்படுகின்றது.

குறிப்பாக மக்களிடம் உளவியல் போர்புரியும் சிறீலங்காப்படை யாழ். தளபதி சுசில் சந்திரபாலவின் செயற்பாடுகளுக்கு ஊடகத்துணையை வழங்கிக்கொண்டு மறுபுறம் தமிழ்தேசிய முகம் காட்டி யாழ்ப்பாண மக்களை சிதைப்பதில் அது தீவிரத்துடன் செயற்படுவது தெரிவதாக யாழ் சமூகவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதைவிட தமிழ் மக்களிடம் தாயக உணர்வினை சிதைப்பதற்கு ஊடகவியலாளர்களை மாற்றவேண்டும் என்ற திட்டத்துடன் ஐ.நா நிறுவனமொன்றினூடாக ஊடகவியலாளர்களைக் கற்பித்து வளமூட்டல் என்ற பெயரில் ஒரு நாசகார நடவடிக்கை யாழ். உயர்கல்வி நிறுவனமொன்றினூடாக திட்டமிட்டு நகர்த்தப்படுகின்றது. தமிழ்த்தேசிய எதிர்ப்புணர்வு ஊடகவியலாளர்களே குடாநாட்டு ஊடகவியலாளர்களை நெறிப்படுத்தப் பயன்படுகின்றமை இதைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தை சிதைப்பதற்கு சகலவழிகளிலும் அந்நிய சக்திகளால் யாழ்.குடாநாடு முற்றுகையிடப்பட்டுள்ளது. கடந்த கால்தைதவிட யாழ்ப்பாண மக்கள் இப்பொழுது தான் விழிப்பாக இருக்கவேண்டும். எத்தகைய நாசகாரசக்திகளுக்கும் நாம் பலியாகாது போராட்டத்தை பலத்தை பாதுகாக்கவேண்டும். இதுவே தமிழரை உலகில் நிமிர்ந்து நிற்கச் செய்யும்.

# தமிழர் ஆணையும் சிங்களவர் ஆசையும்

ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் என்றும் மிளிர்ந்து கொண்டிருக்கப் போகும் ஒரு கலங்கரை விளக்காக 2004 ஆம் ஆண்டின் ஏப்பிரல் இரண்டாம் நாள் திகழப்போகின்றது.

தாயகம்–தேசியம்–தன்னாட்சி என்ற தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்கு மக்கள் ஒன்றிணைந்து வழங்கிய அரசியல் ஆணையின் அதிகாரபூர்வ நாளாக அன்றைய தினம் அமைந்துள்ளது. தமிழரின் அரசியல் பிரதிநிதிகள் புலிகள் தான் என்பதை மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாக்களித்து உலகிற்கு பறைசாற்றிய நாளும் அதுதான்.

தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் தமிழர் கூட்டமைப்பு பெற்றுள்ள அமோக வெற்றி புலிகளின் அரசியல் பலத்தையும் உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது. சிறிலங்கா நாடாளுமன்றின் மூன்றாவது பெரிய அரசியல் கட்சியாக 22 ஆசனங்களுடன் தமிழர் கூட்டமைப்பு இடம்பெற்றுள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்திற்கும் போரியல் வரலாற்றில் புலிகள் இயக்கம் தமது இராணுவ பலத்தை ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளது. இப்போது அரசியல் தளத்தில் புலிகளின் தலைமைத்துவமும் அதன் ஆற்றலும் நிருபிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் அரசியல் இராணுவ ரீதியில் ஈழத்தமிழரின் ஏக தலைமையாக புலிகள் இயக்கமே உள்ளது. நிருபிக்கப்பட்டுவிட்ட இந்த அரசியல் இராணுவ யதார்த்தத்தை சிங்கள தேசமும், சர்வதேசமும் இனிமேல் மனதில் நிறுத்திக்கொண்டு நமது அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளும் என நம்பலாம்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வுகாணும் உறுதிப்பாட்டோடு புலிகள் இயக்கம் உள்ளது. இந்த நோக்கத்துடன் முன்னைய அரசோடு ஒரு தொடர் பேச்சுவார்த்தையை புலிகள் இயக்கம் சுமூகமாக நடாத்தி வந்தது.

சிங்கள அரசுடன் எட்டப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டையும் புலிகள் இயக்கம் சரியாக கடைப்பிடித்து வருகிறது. எனினும் தமிழ் மக்களைப்போல் சிங்களவரின் வாக்குத்தீர்ப்பு சமாதானத்திற்கான தெளிவான மக்கள் ஆணையாக இருக்கவில்லை. குழப்பகரமான தலைமையையும் ஆட்சியில் அமர்த்தியுள்ளனர்.

ரணிலின் கட்சியினர் தமிழர் பகுதியின் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு ஒரு உறுதியான சமாதானத்திற்கு ஆணை கேட்டிருந்தனர். சிங்கள வாக்காளர் ரணிலை ஆட்சீப் பீடமேற்ற மறுத்துவிட்டனர்.

ஆனால் சந்திரிக்கா–ஜே.வி.பி கூட்டணியினர் சிங்கள மேலாதிக்கதுடன் கூடிய ஒரு சமாதானப் பேச்சிற்கான கொள்கையை முன்வைத்தனர். சிங்கள வாக்காளர் அதற்கே ஆணை வழங்கினர். தென் இலங்கையில் தமிழர்கள் கணிசமாக வாழ்ந்துவரும் தேர்தல் மாவட்டங்களில் ரணிலின் கட்சியினர் வெற்றிவாகை சூடியுள்ளனர். தனிச்சிங்கள தேர்தல் மாவட்டங்களில் தோற்றுள்ளனர்.

ரணிலின் சமாதான முயற்சிகளிற்கு தமிழரின் ஆதரவும். சிங்களவரின் எதிர்ப்பும் உள்ளதை இந்தத் தேர்தல் முடிவு கட்டுகின்றது. நீண்ட போரும் அதுகொடுத்த அரசியல் விழிப்புணர்வும் சிங்கள மக்கள் மத்தியில் பாரிய மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்ற பொதுவான அபிப்பிராயத்தை இந்தத் தேர்தல் முடிவு பொய்யாக்கியுள்ளது.

சிங்கள மக்களது இந்த இனவாத மனநிலை சர்வதேச சமூகத்தை ஆச்சரியப்படுத்தியிருக்கும் ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இது பரீச்சயமானதொன்றாகும்.

சிங்களத்தில் ஆட்சி அமைத்துள்ள புதிய கூட்டணியின் வெற்றி தமிழினத்திற்கு ஒரு சவாலாகவே விளங்கப்போகின்றது. புதிய கூட்டணி அரசு விரும்பும் சமாதானப் பேச்சுக்களின் திட்டங்கள் புலிகள் இயக்கத்தின் அரசியல் நிலைப்பாட்டிற்கு முரணாகவேயுள்ளது.

புலிகள் இயக்கத்தின் சமாதான அரசியல் வெளிப்படையாகவும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் உள்ளது. தேர்தலில் கிடைத்த மக்கள் ஆணையு[ம்] புலிகளின் அரசியல் பலத்தை அதிகப்படுத்தியுள்ளது. சிங்களவரின் இனவாத ஆசைகள் இராணுவ ரீதியாகவும் சரி அரசியல் ரீதியாகவும் சரி நிறைவேற்றப்பட முடியாத அளவுக்கு புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பலமாக உள்ளது.

நன்றி - 'விடுதலைப் புலிகள்'
(பங்குனி - சித்திரை மாத இதழ்)

# கருணாவை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட அணியினர் தலைவரிடம் நேரடியாக பயிற்சி பெற்றவர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கருணாவை வெளியேற்றும் தாக்குதல் நடவடிக்கையில், தமிழீழத் தேசியத் தலைவரின் நேரடிப் பயிற்சியில் உருவாக்கப்பட்ட புதிய தாக்குதல் படையணி மிக முக்கிய பங்காற்றியதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது பற்றி ஊடகங்கள் கூறுகையில், புலிகளின் தலைவரால் மிக இரகசியமாகத் தெரிவு செய்யப்பட்டு அவராலேயே பயிற்சியளிக்கப்பட்ட இந்த விஷேட படையணியின் மிக நுட்பமான தந்திரோபாயச் செயற்பாடுகளுக்கு வசதியாக எதிரியின் இலக்குகளை மிகத் துல்லியமாகக் கண்டறிந்து தாக்குதல்களை நடத்தும் விதத்தில் மிக நவீன தொழில்நுட்ப ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த விஷேட படையணிக்கு நீண்ட தூரம் ஊடுருவிச் சென்று தாக்குதல்களை நடத்தும் வகையில் சிறப்புப் பயிற்சிகளும், ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் படையணியின் தாக்குதல் திறனும் அவர்[க]ளுக்கு வழங்கப்பட்ட ஆயுதத் திறனும் எந்தப் பெரிய எதிரிக்கும் மிகப்பெரும் அதிர்ச்சியையும் அவர்களை முற்றுமுழுதாக நிலைகுலையச் செய்யும் விதத்திலும் அமையுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் வெருகலுக்குத் தெற்கே கேணல் சொர்ணம் தலைமையிலான திருகோணமலைப் படையணியும், ரமேஷ் தலைமையிலான படையணியும் மேற்கொண்ட தாக்குதலின் போது இந்தப் படையணிகளின் உதவியுடன் மேற்படி விஷேட படையணியும் களமிறங்கியிருந்தது. மட்டக்களப்பிலிருந்து கருணா துரத்தியடிக்கப்பட்டதும், இந்தப் படையணியும் அங்கிருந்து உடனடியாகவே முற்றாக வாபஸ் பெற்றுவிட்டது. பெருமளவில் தருவிக்கப்பட்ட மிக நவீன ஆயுதங்களை இலகுவாகக் கையாளும் விதத்தில் இந்தப் படையணிக்கு மிக நவீன பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பிலுள்ள புலிகளின் உடைமைகளை தவறாக கையாள வேண்டாமென்று அறிவுறுத்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் சொத்துகள் வசமிகளால் களவாடப்பட்டுள்ளதாகவும், இதில் ஆயுதங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இவை பிழையான இடங்களுக்கு கைமாறப்பட்டுள்ளதாகவும் இச்சொத்துகளை தவறாகக் கையாள வேண்டாம் எனவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இயக்கத்தின் உடைமைகள் என்பவை தமிழர்களின் உடைமைகள் என்பதை எல்லோரும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். எமது இயக்கத்தின் சொத்துகள் வெறுமனே பணத்தை மாத்திரம் கொடுத்து வாங்கப்பட்டவை அல்ல. எவரும் விலைமதித்துவிடமுடியாத இரத்தமும் வியர்வையும் சிந்தியே அவை பெறப்பட்டன. எங்கள் உடைமைகளில் மாவீரர்களின் கனவுகள் உள்ளன. அவர்களைப் பெற்றவர்களின் கண்ணீர் உள்ளது.

இதை தயவு செய்து புரிந்துகொண்டு இயக்கத்தின் உடைமைகளில் எதையாவது எங்காவது காண்பவர்கள் தாமதியாது அவற்றை கரடியனாறில் உள்ள நிர்வாக சேவை செயலகத்திலோ அல்லது கொக்கட்டிச்சோலையிலுள்ள மாவட்டச் செயலகத்திலோ ஒப்படைக்க வேண்டுமென மட்டு. அம்பாறை மாவட்ட படைத்துறைப்புலனாய்வுப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கருணாவிற்கு எதிரான நடவடிக்கையை தடுக்காதமை மன்னிக்க முடியாத குற்றம்

## - சந்திரிகா மீது ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு -

(19.04.04)

தென் பகுதி அரசியலில் ஏற்பட்டுள்ள பதவிப் போட்டிச் சண்டையை பிரபாகரன் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு இன்று கிழக்கையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளார். இந்த நிலைக்கு ஆட்சியாளர்களே பொறுப்பேற்க வேண்டும் எனக் குற்றம் சாட்டுகிறார் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர்.

தெற்கில் இந்தச் சூழ்நிலையை விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி காய் நகர்த்தி வருகிறார். 6000 புலிப்படையினரை கிழக்குக்கு கொண்டு வந்து தனது நிலையை உறுதிப்படுத்தியுள்ளார். இதற்கான முழுப் பொறுப்பையும் ஆட்சியாளர்களே ஏற்க வேண்டும். பிரபாகரனின் - கருணாவுக்கு எதிரான நடவடிக்கையை ஜனாதிபதி தடுத்திருக்க வேண்டும். இராணுவக் கட்டுப்பாட்டு, கடற் பிரதேசங்களூடாகவே புலிகள் கிழக்கிற்கு ஊடுருவினர். ஆனால், அரச படைகளால் தடுக்கப்படவில்லை. ஏன் ஜனாதிபதி அதற்கான உத்தரவை வழங்கவில்லை. இது ஆட்சியாளர்கள் விட்ட மன்னிக்க முடியாத குற்றமாகும். இதன் போது கருணாவுக்கு ஆட்சியாளர்கள் அடைக்கலம் கொடுத்திருக்க வேண்டும்.

# போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகள் மீண்டும் மட்டக்களப்பில் ஆரம்பம்

(19.04.04)

கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகள் முழுவதையும் விடுதலைப் புலிகள் மீண்டும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததையடுத்து, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அங்கு தங்கள் பணிகளை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது. கடந்த வாரம் விடுதலைப் புலிகள் மீண்டும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளைத் தங்கள் வசப்படுத்தியதையடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தியதுடன், மீண்டும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தங்கள் பணிகளை புதன் கிழமை முதல் ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

இது குறித்து கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் கூறுகையில், எங்கள் தொலைத் தொடர்பு நடவடிக்கைகளை அப்பகுதிகளில் நாம் மீண்டும் ஆரம்பித்துள்ளோம். வழக்கம் போல், எமது ரோந்து நடவடிக்கைகளும் கிழக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்கு நிலைமைகள் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து வருகின்றன. அங்கு மீண்டும் வந்துள்ள விடுதலைப் புலிகளுடன் எங்கள் பிரதிநிதிகள் பேச்சுக்களை ஆரம்பித்து விட்டனர். தற்போது 4 நாள் தாக்குதலின் பின்னர் விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இரா



ணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளை முற்று முழுதாக தங்கள் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 3ம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறிச் சென்ற கருணா, கிழக்கில் தங்களை அங்கீகரித்து சிறீலங்கா அரசும், நோர்வே அனுசரணையாளர்களும் தங்களுடன் புதிய போர் நிறுத்த உடன்பாடொன்றில் கைச்சாத்திட வேண்டும் எனக் கூறியிருந்தார். ஆனாலும், இதனை ஏற்றுக் கொள்ள மறுத்த நோர்வே அனுசரணையாளர்களும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் விடுதலைப் புலிகளுடன் மட்டுமே தாங்கள் தொடர்புகளை வைத்திருப்போம் எனவும், கருணா குழுவுடன் எதுவிதத் தொடர்புகளையும் மேற்கொள்ளப் போவதில்லையெனவும் அறிவித்திருந்தனர். இதையடுத்து, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கிழக்கு மாகாணத்தில் தங்கள் செயற்பாடுகளை இடைநிறுத்திக் கொண்டு, அங்கிருந்து வெளியேறியிருந்தது தெரிந்ததே.

## கிழக்கில் விடுதலை...

(28ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படும்போது அவைபற்றி கலந்துரையாடல்களை நடாத்துவது, கிரமமாக சந்திப்புகளை நடாத்துவது என்பது தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதேவேளை, போர் நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்தும் மதித்து நடக்கப் போவதாகவும் அது தொடர்பிலான தமது பற்றுறுதியை வெளிப்படுத்தியுள்ளதாகவும் பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்தன தெரிவித்தார். மேஜர் ஜெனரல் ரொன்ட் பியூறு ஹொவ்டே கூறுகையில், போர் நிறுத்தக் கண்காணிப்பு குழு தனது நடவடிக்கைகளை இனி தீவிரப்படுத்தவுள்ளது. இரு தரப்பும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடப்பதை நாம் தொடர்ந்தும் கண்காணிப்போம். கிழக்கில் நிலைமைகள் தற்போது வேகமாக சுமுகமடைந்து வருவது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்தச் சூழ்நிலையில் மீண்டும் இங்கு எமது பணியை ஆரம்பித்துள்ளோமெனவும் கூறினார். இந்தச் சந்திப்பு தொடர்பாக அங்கு கூட்டறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது.

## ஆப்பிழுத்த குரங்....

(28ம் பக்கத் தொடர்ச்சி)

அவசரமாகப் புதிய அரசமைப்பைக் கொண்டுவர ஜனாதிபதி முயற்சி செய்கின்றார். இரண்டு முறைகளுக்கு மேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்பதை உணர்ந்த அவர் இதனை அவசரமாக மேற்கொள்ளவிருக்கின்றார் என்றும் தெரிவித்தார்.


LA CHAPELLE
இறைச்சிக் கடை
சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95

அதிசயம் ஆனால் உண்மை
உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
விமல் விநியோக நிலையம்
VIMAL DISTRIBUTION
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98
குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

Ashha Video Movies
உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073
Pub-Fr-39

போட்டோ பாலா
மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்
உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
Photo Bala
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77



ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES IPS
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்



தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0170 2173152

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்:
அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368



குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



Restaurant Tharsana's
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle ou Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.



தர்ஷனா & பிரஷா உணவகங்கள்
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்



Restaurant Prassah
Gastronomiques Indiennes
பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle ou Louis Blanc
Tel: 01 53 26 39 41

ஈழமுரசு ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

வீடு வாங்குதல்—விற்றல்—முதலீடு செய்தல்
☒ வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
☒ S C I ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வேண்டி முதலீடு செய்து கொள்ளுதல்
☒ கட்டப்பட்ட புதிய - பழைய வீடுகள் வேண்டுதல்
☒ நிலம் வேண்டி புதிய வீடுகள் கட்டுதல்

முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82

# த.தே.கூட்டமைப்புடன் சேர்ந்தே நாடாளுமன்றில் செயற்படுவோம்

## சந்திரசேகரன், மனோ கணேசன் அறிவிப்பு

(19.04.04)

நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்மைப்பினருடன் சேர்ந்தே செயற்படப் போவதாக மலையக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.சந்திர சேகரன் மற்றும் மேல்மாகாண மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு:சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களுடனான சந் திப்பின்போது மலையக மக்கள் முன்னணி மற்றும் மேல்மாகாண மக்கள் முன்னணியைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப் பினர்களும் கலந்துகொள்வர் என தெரிவிக்கப்படுகிறது. இத்தகவலை நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.சந்திரசேகரன், மனோ கணே சன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் புடன் இணைந்தே தாங்கள் நாடா ளுமன்றத்திற்கு செல்லவுள்ளதாக தெரிவித்துள்ளனர். இது காலத் தின் கட்டாயம் எனத் தெரிவித் துள்ள முன்னாள் அமைச்சர் சந் திரசேகரன், இதனாலேயே தாம் தனித்து நின்று போட்டியிட்டு வெற்றி பெற்றதாகவும் தெரிவித்தார். எனவே தமிழ் தேசியக் கூட்டமைப் புடன் இணைந்து நாடாளுமன்றத் தில் செயற்படுவது தான் அதற்கு உகந்த வழி எனத் தாங்கள் கரு துவதாகவும் அது தொடர்பில் எதிர்வரும் 20ம் திகதி பேச்சு நடத்தப் போதாகவும் தெரிவித் துள்ளார். இதேவேளை தேசிய அரசாங்கத்தை அமைப்பத[illegible] தாங்கள் விரும்பவில்லை எனவும் இரண்டு பிரதான கட்சிகளும் இணையும் என்பது கேள்விக்குறி யானதே எனவும் அவர் தெரிவித் துள்ளார். இதனடிப்படையில் நாடா ளுமன்றத்தில் 24 உறுப்பினர்கள் தமிழ்த் தேசியத்திற்காக குரல் கொடுப்பர் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

## கிழக்கில் விடுதலைப் புலிகள்-இராணுவம் மீண்டும் சந்திப்பு

### போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதென இரு தரப்பும் உறுதி

(19.04.04)

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையி லான உயர்மட்ட சந்திப்பு ஒன்று கடந்த வியாழக்கிழமை பிற்பகல் மட்டக்களப்பு வவுணதீவில் நடை



பெற்றது. இராணுவ சூனியப் பிரதேசத்தில் அமைந்துள்ள வவு ணதீவு பிரதேச செயலகத்தில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்றது.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலை வர் மேஜர் ஜெனரல் றொன்ட் பியூறு ஹொவ்டே தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையா டலில், விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டு- அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ், துணைத் தளபதி ராம், தளபதி பிரபா, அரசியல் துறைப் பொறுப் பாளர் இ.கௌசல்யன், இராணுவ புலனாய்வுப் பொறுப்பாளர் ரம ணன், ஜெயந்தன் படையணித் தளபதி ஜெகாத்தன், சமாதானச் செயலக இணைப்பு அதிகாரி பவான் ஆகியோரும் சிறீலங்கா படைத் தரப்பில் 23வது படைப் பிரிவின் கட்டளையதிகாரி பிரி கேடியர் வஜிர விஜயகுணவர்தன, மட்டக்களப்பு மாவட்ட கட்டளை அதிகாரி கேணல் லக்சிறி அமர துங்க ஆகியோரும் கலந்து கொண் டனர்.

சந்திப்பின் முடிவில் கேணல் ரமேஷ் இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில், இன்றைய சந் திப்பு மிகவும் சுமுகமாக நடை பெற்றது. போர் நிறுத்த ஒப்பந் தத்தை அமுல் செய்வது தொடர் பாகவும், சிறு சிறு பிரச்சினைகள்

(தொடர்ச்சி 27ம் பக்கம்)



## ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் சந்திரிகா - ஹக்கீம்


(19.04.04)

போர்க்களத்தில் மட்டுமன்றி இப்போது அரசியல் களத்திலும் பலம் பெற்றிருக்கும் விடுதலைப் புலிகளைப் பிரித்துவைத்து அதன் மூலம் குளிர்காய முனைந்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அந்த முயற்சி தோல்வியில் முடிந் துவிட்டது. அதனால், அவர் ஆப் பிழுத்த குரங்கின் நிலையில் இருந்து தவிக்கிறார் என்றார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

புத்தளம் மஜிதுல்ஹிதா பள்ளி வாசல் மைதானத்தில் இடம்பெற்ற வடமேல் மாகாணசபையின் தேர் தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ரவூப் ஹக்கீம் மேற்கண்ட வாறு தெரி வித்தார். முஸ்லிம் காங்கி[illegible] சார்பில் ஐ. தே.முன்னணியி[illegible] சின்னத்தில் புத்தளம் மாவட்டத் தில் போட்டியிடும் எஸ்.ஏ.எஹ்யா, எஸ்.எச்.எம்.நியாஸ், எம்.ராதா கிருக்ஷ்ணன் ஆகியோரை ஆத ரித்து இக்கூட்டம் கடந்த வெள் ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் உரையாற்றிய ரவூப் ஹக்கீம் மேலும் கூறிய தாவது, அறுதிப் பெரும்பான் மையற்ற நிலையில் ஆட்சி செய் யும் ஜனாதிபதியின் அரசுக்கு நாம் முண்டுகொடுத்து உதவு வோம் என்று அரசுத் தரப்பினர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். பாவம், ஏமாறப் போகிறார்கள். ஆட்சியமைத்தவுடன் அவசர

(தொடர்ச்சி 27ம் பக்கம்)

PHONE 2000
LES PROFESSIONELS DE LA TELEPHONIE A VOTRE SERVICE
Réparation - Abonnements -Téléphones Mobiles - Vente en Gros et Détail - Déblocage
Internet - Installation Cybercafé - Abonnement ADSL - Création de Site Web.

Pour plus d'information visitez: www.phone2000.net - Tél: SFR Siva : 06 20 21 11 11